aat SRI LANKA
@
Veal Business College
No.159, Sea View Road, Trincomalee
026 222 76 22 - 077 02 03 201

அறைவு 08 இயம் 02 August 09-15 , 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்
மலைமுரசு
MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

CCTV Installation
&
Maintenance
PHOTONTECH
175, Main Street
Trincomalee
075 6602486

# பாராளுமன்றத் தேர்தல் முதலில் ??




## அரச நியமனங்கள் வழங்கப்படலாம்

எதிர்வரும் ஆண்டின் முதற் காலாண்டில் பாராளுமன்றத் தேர்தலே முதன் முதலில் இடம் பெறலாம் என்ற செய்தி கசிந்துள்ளது.

சனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறும் காலங்கள் அண்மித்துள்ள நிலையில் இவ்விரு தேர்தல்களிலும் முதலில் எத் தேர்தல் நடைபெறும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்து வருகின்றது.

அதையடுத்து பாராளுமன்றத் தேர்தல்களை முதலில் நடைபெற வைத்து தமது செல்வாக்கின் நிலையை அறிந்துகொள்ள ஆளும் கட்சி தீர்மானித்துள்ளதாகத் தெரிகின்றது.

பாராளுமன்றத் தேர்தல்களை முன்னிட்டு அரச நியமனங்கள் வழங்கப்படும் வாய்ப்புக்களும் உருவாகியுள்ளன. பல்கலைக்கழகங்கப் பட்டதாரிகளின் தகவல்கள் திரட்டப்படுவதாகவும் இவற்றுள் வெளிவாரிப் பட்டதாரிகளின் விபரங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.......

13

# கொல்லன்குளம் அபிவிருத்தியை பதவிஸ்ரீபுர பிரதேசச் செயலகம் ஏற்பு?

தென்னைமரவாடி கிராமத்திலுள்ள வயல்களுக்கு நீர்பாச்சும் கொல்லன் குளத்தின் அபிவிருத்திப் பணிகளை பதவிஸ்ரீபுர பிரதேசச் செயலகம் கையேற்றுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

தென்னைமரவாடி பிரதேசம் குச்சவெளி பிரதேசச் செயலாளரின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமாகவுள்ளபோதும் அக்கிராமத்தின் குளமொன்றின் திருத்த வேலைகளை பதவிஸ்ரீபுர பிரதேசச் செயலகம் மேற்கொள்வது சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தமிழ் மக்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

தென்னைமரவாடிக் கிராமத்தை தமிழ் பிரதேசச் செயலாளர் பிரிவான குச்சவெளிப் பிரதேசச் செயலகத்தில் இருந்து வேறு பிரதேசச் செயலாளர் பிரிவின் கீழ் கொண்டுவரும்

13

# ரூபா 100 இன்றி வெளியேற்றப்பட்ட சிறுமிகள்

## இலவச புலமைப் பரிசிற் கருத்தரங்கில் அவலம்



கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலை நகரத்தில் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட புலமைப்பரிசில் இலவசக் கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்ற சிறுமிகளிற் சிலர் அரங்கிற்குள் அனுமதிக்கப்படாமல் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இலவசக் கருத்தரங்கு என்ற விளம்பரத்துடன் நடாத்தப்பட்ட இக் கருத்தரங்கில் ரூபா 100.00 கையேட்டுக்காக அறவிடப்படும் என அறிவிக்கப் பட்டிருந்தது. எனினும் இத்தொகை கட்டாயமாக அறவிடப்படும் என்பதைத் தெரிந்துகொள்ளாத சில

13




## மத்தள வான் தள வருமானத்தை விஞ்சும் பால்காரியின் வருமானம்

39,000 மில்லியன்கள் செலவு செய்து கட்டப்பட்ட இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள விமான நிலையத்தின் மாதாந்த வருமானமான ரூபா 16,000 த்தை விட தயிர் விற்கும் பால்காரியொருவரின் வருமானம் அதிகமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நா.உ கலாநிதி ஹர்சா டி சில்வா தெரிவித்த கருத்தை யாரும் எதிர்க்கவில்லை.

## 25% தாய்மார் பாலூட்டுவதில்லை

25 வீதமான இலங்கைத்தாய்மார்கள் தமது குழந்தைகளுக்குப் பாலூட்டுவதைத் தவிர்த்து விடுகின்றார்கள் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## கட்சி தாவத் தயாராகும் நாடாளுமன்ற உறுப்பினர்

தனது வெளிநாட்டுப் பயணத்தின் சினிமாக்காட்சிகள் ஆளும்கட்சியிடம் மாட்டியதைத் தொடர்ந்து அக்கட்சிக்குத் தாவ எதிர்கட்சி நா.உ ஒருவர் தயாராகி வருவகின்றாரம்.

## சிறையில் ரூபா 95,000த்துடன் சொகுசுக் கைதி?

கடந்த 3ம் திகதி புலனாய்வுப் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்ட சிறை விடுதியொன்றில் கைதியொருவரிடம் இருந்து ரூபா 95,000 கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்விடுதியைத் தமது சொர்கமாக அங்கிருந்த கைதிகள் உருவாக்கியிருந்ததாக தெரிகின்றது.

Ben Vision Printers
Digital banner and Sticker Printing, Book Page Making & Printing (Tamil & Sinhala), Offset Printing, Invitation Cards and Cake boxes, Visiting cards, Magazines, Leaflets, letterheads, Labels, Laminating, Scanning (Colour), All kind of Binding, Screen Printing, Photocopy, Type Setting (Tamil, English, Sinhala)
No/ 335 A, Thiruganasampathar Street, Trincomalee /0262225984, 0778802526, 0778615206
benvisionprinters@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ, கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

## வளம்கொலிக்கும் நிலங்களும் மக்களின் அகதி வாழ்வும்...

புல்மோட்டையில் சுமார் ஐநூறு ஏக்கர் நிலப்பரப்பை கடவுளிற்குத் தானமாகக் கொடுக்கும் முயற்சியின் முதற்கட்டம் நடைபெறவுள்ளது.

திருகோணமலையின் வளங்கொலிக்கும் நிலப்பரப்புக்கள் பலவற்றில் இவ்வாறான அபிவிருத்திக்குப் பயன்படாச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதைக் காணலாம்.

விசேடமாக சம்பூர் மண் உற்பத்திக்குப் பெயர்போன நிலம் என்பதைக் கடந்தகாலத் தரவுகள் சொல்கின்றன.

அங்கிருந்த மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியளவு மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களுக்குத் தேவையான அளவிற்குக் கூட நெல், தானிய உற்பத்தியிலும், மரக்கறிப் பயிர்ச் செய்கையிலும் அவர்கள் ஈடுபட்டு வந்துள்ளார்கள்.

இன்று அந்த நிலம் உயர் பாதுகாப்பு வலயமாக உள்வாங்கப்பட்டு தொழிற்றுறை அபிவிருத்திக்காகக் காத்துக் கிடக்கின்றது. தொழிற்றுறை விருத்தியினால் அந்த நிலத்தின் தன்மை கெட்டு இனி எப்போதுமே உணவுப் பொருள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட முடியாத நிலைக்குத் தள்ளப்படப் போகின்றது.

அவ்வாறே புல்மோட்டை மண்ணும் கனனி மண்ணாக அடையாளப்படுத்தப்பட்ட வளம் கொலிக்கும் நிலம். அந்த நிலத்தைப் பயிர்செய்கைக்காக மக்களிடம் வழங்கி அதற்கான அடிப்படை வசதிகளையும் அரசு ஏற்படுத்திக் .கொடுக்குமானால் அந்த நிலத்தில் இருந்து கிழக்கு மாகாணத்தின் அரிசி, மற்றும் மரக்கறி நுகர்வின் கணிசமான பகுதியை உற்பத்தி செய்ய முடியும்.

ஆனால் நடப்பது என்ன? வளம் கொலிக்கும் நிலங்களை உற்பத்திக்குப் பயன்படுத்தாமல் தொழிற்றுறைக்கும், கடவுளுக்கும் படைத்துவிடுவது ஒரு தனியினத்தையல்ல ஒட்டுமொத்த தேசத்தையும் பாதிக்கின்றது என்பதை யார் சிந்திப்பது?

உலகமயமாதலின் பின்னர் உலகின் எப்பாகத்திலும் வளம் கொலிக்கும் நிலங்களைக் குறிவைப்பது சர்வதேச நிதிநிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் சர்வாதிகார அரசுகளின் நோக்கமாக இருப்பதை உலகின் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. உலகமயமாதலின் போது எல்லைகள் தகர்ந்துவிட்டதால் யாரும் எங்கும் நுழையலாம் என்பதைப் பயன் படுத்திக்கொண்ட சர்வாதிகார அரசுகள் வளம் கொலிக்கும் நிலங்களைக் கொண்ட நாடுகளின் சிறு பலவீனங்களைப் பெரிதுபடுத்தி அதனை உலகமயமாக்கி ஏற்படுத்திக்கொண்ட இடைவெளியின் ஊடாகத் தமது நலன்களுக்காக அந்த நிலங்களை கைப்பற்றிக்கொள்வதைக் காணலாம்.

அதற்கு மிகச் சிறந்த உதாரணங்களாக சீனன்குடாவில் சீனாவையும், சம்பூரில் இந்தியாவையும் கொள்ளலாம்.

வளம் கொலிக்கும் நிலத்தை இழக்கும் எல்லா மக்களுமே இலங்கையில் அகதிகள் தான்.... தமிழர்கள் மட்டுமல்ல.....!

## மட்டுமாவட்டத்தில் பாடசாலை இடைவிலகல்கள் தொடர்பாக ஆய்வு





மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் முழுநாள் மாநாடு காலை முதல் மாலை வரை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

நேற்று இடம்பெற்ற இந்த மாநாட்டில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன், பிரதேச செயலாளர்கள், கல்வித்திணைக்கள பணிப்பாளர்கள், கல்வி சார் அதிகாரிகள், சிறுவர் நலன்பேண் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைக் கல்வி அபிவிருத்தி, பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகல்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

அத்துடன், பாடசாலைக்கல்வி தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான வழிகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

அத்துடன் மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தொடர்ந்தும் இவ்விடயம் தொடர்பாக கவனத்துடன் செயற்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## நீதிபதிகள் மாற்றம்

திருகோணமலை மேல் நீதிமன்றத்திற்கு புதிய நீதவானாக ஹெட்டி ஆராய்ச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

மேல் நீதிமன்றத்தில் கடமையாற்றிய ஆர்.ரணராஜா சிலாபம் .மேல் நீதிமன்றத்துக்கு இடமாற்றம் பெற்று சென்றதையடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் மேன் முறையீட்டு மேல் நீதிமன்ற நீதவானாக கடமையாற்றிய ஹெட்டி ஆராய்ச்சியின் வெற்றிடத்துக்காக மட்டக்களப்பு குடிசார் (சிவில்) மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றும் சசி மகேந்திரன் இவ்விடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது . (தசிஎன்)

## பரிசுதரும் பலூன்கள் மட்டக்களப்பு வானில்

BANK OF CEYLON
BOC
Bankers to the Nation

இலங்கை வங்கியின் 75ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் எதிர்வரும் 16 ஆம் திகதி பலூன் விடும் நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது.இந் நிகழ்வானது இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண உதவிப்பொது முகாமையாளர் கே.பி ஆனந்தநடேசன் தலைமையில் இடம்பெறவுள்ளளமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை வங்கியின் கிழக்குமாகாண ஊழியர்கள் அனைவரும் பங்குபற்றவுள்ளனர்.இதன் விசேட அம்சம் என்னவென்றால் இந்த பலூன்களுக்குள் பணப்பெறுமதி பொறிக்கப்பட்ட வவுச்சர்கள் (gift bouchers) இருக்கும். இதனை எடுத்த வாடிக்கையாளர்கள் அருகிலுள்ள இலங்கை வங்கிக்கிளைக்கு சென்று தமது பரிசுப்பெறுமதியினை பெற்றுக்கொள்ளலாம்.கிட்டத்தட்ட 500 பலூன்கள் அளவில் விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## வளாக மாணவர்களின் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது

நிர்வாக மாற்றம் ஒன்றினை எதிர்த்து கிழக்குப்பல்கலைக்கழகத்தின் வளாக மாணவர்கள் மேற்கொண்டு வந்த போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகி விசாரணைகளுக்கு முகம் கொடுத்துள்ள வைத்தியர் வர்ணகுலேந்திரணை திருமலை வளாக முதல்வர் பதவியில் இருந்து தற்காலிகமாக கிழக்குப்பல்கலைக்கழக பேரவை பதவிநீக்கியிருந்தது.

அதனையடுத்து அவரை மீண்டும் உடனடியாக முதல்வராக்குங்கள் என்ற கோரிக்கையுடன் மாணவர்கள் தொடர்ந்த கல்விப் பகிஸ்கரிப்பானது கடந்த 28ம் திகதி ஆரம்பமானது.

இவ்விடயம் தொடர்பாக மாணவர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே ஏற்பட்டுள்ள உடன்பாட்டை அடுத்து பகிஸ்கரிப்பு தற்காலிகமாக நிறுத்தபட்டுள்ளது.

## தனியார் வைத்தியசாலையில் போராட்டம்

திருகோணமலை நகரில் தனியார் வைத்தியசாலையொன்றில் ஏற்பட்ட குளறுபடியை அடுத்து அதற்கெதிராகப் பாதிக்கப்பட்டவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.


ஒரே பெயரில் இதயத் துடிப்பு வரைவியின் சான்றிதழ்கள் இரண்டு பேருக்கு வழங்கப்பட்டதை அடுத்தே அங்கு போராட்டம் வெடித்துள்ளது.

முன்னிரவு நேரத்தில் அவ்வைத்தியசாலையில் பதிலளிக்க பொறுப்பானவர்கள் யாரும் இல்லாதிருந்ததால் போராட்டம் வலுவடைந்ததைத் தொடர்ந்து வைத்தியசாலைக்கு காவல்துறையினர் வரவழைக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து தலைமையகக் காவல் பணிமனையில் குறித்த விடயம் தொடர்பாக குற்றச்சாட்டொன்று பதிவாகியுள்ளது.

காவல்துறை விசாரணைகள் தொடர்கின்றன.

## இலங்கை செஞ்சிலுவைச்சங்க திருமலைக் கிளை காவல்துறையுடன் இணைந்து ஏற்பாடு செய்த குருதிக்கொடை முகாம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலைக் கிளையினர் திருகோணமலைத் தலைமையக காவல் நிலையத்தினருடன் இணைந்து இரத்ததான முகாம் ஒன்றினை நடாத்தினர். செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலைக் கிளைத் தலைவர் டாக்டர் ஈ. ஜீ. ஞானகுணாளன், மாவட்ட சிரேஷ்ட காவல் அத்தியட்சகர் ஜக் மார்க், தலைமையககாவல் கண்காணிப்பாளர் திரு. ஜே. ஜயரத்ன செஞ்சிலுவைச் சங்கக் கிளை நிறைவேற்று அதிகாரி டாக்டர் என். ரவிச்சந்திரன் ஆகியோரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்களும், பொலிஸ் உத்தியோகத்தர்களும், முச்சக்கர வண்டிச் சாரதிகளும் இவ் இரத்ததான நிகழ்வில் கலந்து கொண்டனர். (செஞ்சிலுவைச் சங்கம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சும்மா அதிருதில்ல" பாணியில் இந்தியக் கொள்கை வகுப்பு

தேத்தாமரத்தான்



சிறிய வகுப்புகளில் நான் "பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு" என்று படித்துள்ளேன்.எனது கலாசாரம்,வளர்ப்பு முறைகள்,ஆளுமை விருத்திகளிலும் இந்தியாவானது மிகப் பெரும் செல்வாக்கினையே செலுத்தியிருந்தது.இந்தியா எப்போதும் எமது நண்பன் என்பது அநேகமான ஈழத்தமிழரின் எதிர்பார்க்கை.இப்படி பெருமை கொண்ட ஒரு தேசமானது பஞ்சசீலக்கொள்கையின் அடிப்படையிலேயே தனது ஆட்சியினை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுவதுண்டு.(ஆனால் இந்த பஞ்சசீலக்கொள்கையானது 1970 களில் மலையகத்தமிழரை இலங்கையிலிருந்து நாடு கடத்தும் சிறிமா-சாஸ்த்திரி ஒப்பந்தத்தின் போதே மீறப்பட்டது என்பது வேறு கதை).வலிமையான வல்லரசாக இந்தியாவை மாற்றுவோம் எனக்கூறி ஆட்சிக்கு வந்த மோடியின் அரசின் சில முடிவுகளை பார்க்கும் போது எனக்கு ரஜனிகாந்த் அவர்களின் "சும்மா அதிருதில்ல" வசனம் நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியாதுள்ளது.

கொழும்புக்கு எதிரான மனித உரிமை பேரவையின் வாக்களிப்பில் இந்தியா நடுநிலை வகித்தமைக்கு கூறப்பட்ட காரணம் ஒரு நாட்டின் இறைமையை பாதிக்கும் விடயங்களில் எமது நாடு தலையிடாது என்பதாகும்.இது நடந்தது காங்கிரஸ் ஆட்சியின் போது.இப்படி சொன்ன இந்தியா இப்போது இஸ்ரேலுக்கு எதிராக மனித உரிமை பேரவையில் சீனாவுடன் சேர்ந்து வரிந்து கட்டி கொண்டு வாக்களித்துள்ளது.இங்கு எனது வாதம் இந்தியா அப்படி செய்ய கூடாது என்பதோ அல்லது பாலஸ்தீன மக்களின் போராட்டம் நியாயமற்றது என்பதோ அல்ல.மாறாக இந்தியாவின் கொள்கை என்பது சந்தர்ப்பவாதம் நிறைந்த பச்சோந்திதனமானதா என்பதேயாகும்.

அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சில் அமைச்சர் சுஸ்மா ஸ்வர்ராஜ் அவர்களின் தலைமையில் நடந்த ஒரு முக்கிய கூட்டத்தில் இந்திய வெளிவிவகார முன்னாள் மற்றும் இந்நாள் அதிகாரிகள் யாவரும் சமூகமளித்திருந்தனர்.பல்வேறு வாத பிரதிவாதங்களின் பின்னர் சீனா மற்றும் அமெரிக்காவுடன் ஒரே சீரான இடைவெளியில் உறவுகளை பேணுவதெனவும் அண்டை நாடுகளுடன் நெருங்கிய ஒத்துழைப்பை பேணுவதெனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாயே தெரிகிறது.இப்போது இந்தியாவின் போக்கை பார்க்கும் பொழுது சீனாவை அனுசரித்து போகும் ஒரு கொள்கையை முன்னெடுப்பதை நாம் காணலாம்.இதற்கான பிரதான காரணம் ஐ.நா பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமைக்கு சீனாவின் தயவை பெற்று கொள்ளுவதாகும்.பிரிக்ஸ் வங்கி பற்றிய சீனாவின் கொள்கைக்கு இந்தியா ஒத்துகொண்டாமை இதற்கு நல்ல உதாரணம்.இதற்க்காக இந்தியா ஒரேயொரு கோரிக்கையே முன்வைத்திருந்தது அதாவது அந்த வங்கியின் முதல் தலைவராக இந்தியர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்பது.அதற்கு சீனாவும் ஒத்து கொண்டது.ஆனால் இந்த வங்கியின் மூலம் சீனாவுக்கே அதிக இலாபம்.ஏனெனில் தனது யுவான் நாணயத்தை சர்வதேச நாணய அலகாக்கும் அதனது கனவு நிறைவேறப்போகிறது என்பது வெளிப்படை.ஆக சின்ன மீனை போட்டு பெரிய மீனை பிடிக்கும் தந்திரத்துக்கு இந்தியா பலியாகி விட்டதாகவே கொள்ள முடியும்.இத்தனைக்கும் இந்த பிரிக்ஸ் வங்கியானது அமெரிக்கா மற்றும் மேற்குலகின் கட்டுப்பாட்டில் உள்ள உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவற்றுக்கு சவாலானது என்பது தெரிந்தும் இந்தியா ஆதரவு அளித்ததென்றால் இந்தியாவின் கொள்கை மாற்றங்களை நாம் தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.

சீனாவை பொறுத்தவரை அது தனது முத்துமாலை திட்டத்தில்(இந்தியாவை வளைக்கும்) உறுதியாகவே உள்ளது.இன்றும் இந்தியாவின் அருணாசல பிரதேசத்தை அது தனது பிரதேசமாக உரிமை கொண்டாடுவதுடன் அவ்வப்போது எல்லை மீறல்களையும் மேற்கொண்டும் வருகிறது.மேலும் பங்களாதேசின் சிட்டகாங்,இலங்கையின் அம்பாந்தோட்டை மற்றும் சீனக்குடா போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக விமான தளங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன் மாலைதீவு கடல் படையினருக்கான பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.இந்தியாவுக்கு இவ்வளவும் தெரிந்திருந்தும் அது விட்டு கொடுக்கும் முனைப்பினையே மேற்கொண்டுவருகிறது.பாதுகாப்பினை பொறுத்தவரை விட்டுகொடுப்புகள் எதிர்விளைவுகளையே உருவாக்கும்.இத்தனைக்கும் பதிலீடாக இந்தியாவினால் எடுக்கப்பட நடவடிக்கை யாதெனில் மோடி அவர்களின் முதல் வெளிநாட்டு பயணம் பூட்டானுக்கு அமைந்திருந்ததை குறிப்பிடலாம்.ஆனால் இங்கும் வலுவான செய்தி ஒன்றுமில்லை.ஏனெனில் இந்தியாவின் அயல் நாடுகளில் உள்ள அரசுகளில் இந்தியாவுக்கு மிக நேசமான அரசு பூட்டான் மட்டுமே.ஆனால் மலைகளை பெருமளவில் கொண்ட பாதுகாப்பு துறையில் அவ்வளவு திறன் பெற்றிராத பூட்டானிடமிருந்து இந்தியா பெற்று கொள்வதற்கு பெரிதாக ஒன்றுமேயில்லை.

மோடியின் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இந்திய காஸ்மீர் பகுதியில் தீவிரவாதிகளின் ஊடுருவல்கள் 19 தடவைகள் இடம்பெற்றுள்ளதாக எதிர்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.ஆப்கானிஸ்தானிலிருந்து இந்த ஆண்டு முடிவுக்குள் அமெரிக்க படைகள் வெளியேறி விடும்.அங்கும் தலிபான்களின் கை ஓங்கி வருகிறது.ஈராக்கில் ஒரு பகுதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள தீவிரவாதிகளுக்கும் தலிபான்களுக்கும் இடையில் நெருங்கிய வலைபின்னல்கள் காணப்படுகின்றன.இந்த செய்திகள் இந்தியாவுக்கு அவ்வளவு உவப்பானதல்ல.மறு புறத்தே அமெரிக்காவை பகைத்து கொண்டு இஸ்லாமிய பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்ள முடியுமா என்பதும் கேள்விக்குறியே.இந்தியாவின் பாதுகாப்பின் ஓட்டைகளை அவ்வப்போது இஸ்லாமிய தீவிரவாதிகளால் நடாத்தப்படும் வெடிகுண்டு தாக்குதல்கள் தெளிவாகவே காட்டுகின்றன.மறுபுறத்தே சீனாவுக்கு இஸ்லாமிய பயங்கரவாத அச்சுறுத்தல்கள் என்பது மிகக் குறைவே.ஏனெனில் பாகிஸ்தானும் ஈரானும் அதன் நெருங்கிய நட்பு நாடுகள்.மறுபுறத்தே இஸ்லாமிய பயங்கரவாதத்தை சீனா இந்தியாவுக்கு எதிரான கருவியாக பயன்படுத்த கூடிய ஏது நிலைகளும் காணப்படுகின்றன.

வாராந்த அலசல்

அண்மையில் நடந்த சுவாரஸ்யமான சம்பவமொன்று.இந்தியாவின் இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிக்கை செய்தி ஒன்று இவ்வாறு தெரிவித்தது.இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட பா.ஜ.க வின் முக்கியஸ்தரான சேசாத்திரி அவர்கள் இலங்கையுடனான வர்த்தகம் மேம்பட வேண்டுமாயின் ஈழ தமிழரின் விவகாரம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டுமென கொழும்பிடம் வலியுறுத்தியதாக செய்தி வெளியானது.இதை உடனே மறுத்த சேசாத்ரி ஈழத்தமிழர் விவகாரம் உள்நாட்டு விவகாரம் என தெரிவித்திருந்தார்.அத்துடன் சுப்பிரமணியசுவாமி அவர்களின் இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்ற கூற்று மற்றும் கடந்த வாரத்தில் தமிழ்நாட்டை கலக்கிய 'மோடி-ஜெயலலிதா காதல் கடித விவகாரங்கள்' டெல்லியினால் சுலபமாக முடிக்கப்பட்டமை போன்றமை இந்தியா இலங்கையின் மகுடிக்கு ஆடும் பாம்பாக மாறி விட்டமையை புலப்படுத்துகிறது.ஆனால் இந்திய கொள்கை வகுப்பு புலிகள் மறந்த விடயம் ஒன்றுள்ளது.இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று இல்லாமலோ அல்லது தமிழினம் இல்லாமலோ இருந்திருந்தால் இந்தியா என்ற நாடு அருகிலிருப்பதை இலங்கையர்களுக்கு மிகவும் கஷ்டப்பட்டே விளங்கப்படுத்த வேண்டி இருந்திருக்கும்.தற்போதைய தகவலின்படி 13 ஆம் திருத்தசட்ட விவகாரம் மற்றும் இந்திய-இலங்கை ஒப்பந்தம் என்பவற்றையும் இந்தியா கைவிட முடிவு செய்துள்ளதாகவே தெரிகிறது.ஆனால் சீனாவின் அதீத பிரசன்னம் அவர்களுக்கு அச்சுறுத்தல் இல்லையாம்.வாழ்க பாரதம்.

இந்தியாவின் புதிய இராணுவ தளபதியாக இலங்கையில் அமைதிபடையில் கடமையாற்றிய கூர்கா படைப்பிரிவை ஜெனெரல் தல்பீர்சிங் சுகாக் சேர்ந்த நியமிக்கப்பட்டுள்ளார்.இனி இந்திய கொழும்பு இராணுவ உறவுகள் மேம்படும் என்பது வெளிப்படை.ஆனால் இவர் காஸ்மீர் மற்றும் அசாம் மாநிலங்களில் கடமை புரிந்தபோது அங்கு பாதுகாப்பில் நிறைய ஓட்டைகளை விட்டதாகவே கருத்து நிலவுகிறது.இவரது நியமனமே சர்ச்சைக்குரியது இனி இந்தியாவின் பாதுகாப்பும் சர்ச்சைக்குரியதாக மாறினாலும் ஆச்சரியமில்லை.

உள்நாட்டு சர்ச்சைகளுக்கு முடிவு காண ஐ.நா படைகளை அனுப்ப வேண்டியதில்லை என்பதும் இந்தியாவினால் முன்மொழியப்படும் ஒரு கொள்கை முடிவாக காணப்படுகிறது.(ஆதாரம்தி ஹிந்து).உண்மையில் இன்று பெயரளவிலேனும் உலகநாடுகளை கட்டுப்படுத்தும் ஒரு அமைப்பாக ஐ.நா சபையே காணப்படுகிறது.இவ்வாறான கொள்கைகளினால் உலகின் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பின்மை ஏற்படுவதுடன் அரசுகளின் காட்டு தர்பார் ஆட்சிக்கும் இது வழிவகுக்கும். மேலும் இது அடிப்படை சனநாய மரபுகளுக்கும் பாதிப்பை கொண்டு வரக்கூடும்.

வெறுமனே வர்த்தக நலன்களையும் வல்லரசு கனவுகளையும் கொண்டு எழுப்பப்படும் இந்தியாவின் இந்த கொள்கை வகுப்புகள் இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்யுமா என்பது காலத்தின் மிகப்பெரிய கேள்வி.கட்டுரை முடியும் போது வடிவேலின் பிரபல்ய நகைச்சுவை ஒன்று ஞாபகத்துக்கு வந்து தொலைக்கிறது."பில்டிங்கு ஸ்ட்ராங்கு ஆனா பேஸ்மேண்டுதான் கொஞ்சம் வீக்கு"

## இராசதந்திரப் பைகளின் ஊடாகக் கடத்தல்

இராசதந்திரிகளுக்கு வழங்கப்படும் பைகளின் ஊடாக சட்டமுரண் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்து விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்கள அலுவலர்களை வெளிவிவகார அமைச்சு அழைத்துள்ளது.

தென்கொரியாவின் சியோல் நகரத்திலிருந்து அனுப்பப்பட்ட இராசதந்திரப்பையொன்றில் பெறுமதி வாய்ந்த ஆபரணங்கள் கடத்தப்பட்டதாக வெளியான தகவல்களை அடுத்தே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் மற்றும் பத்து அலுவலர்கள் வெளிவிவகாரத் திணைக்களத்தினால் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனா. (டைம்ஸ்)

## அரசவங்கியின் துணைக் கம்பனியொற்று வாகனக் கடத்தலில்...

அரச வங்கியொன்றின் துணைக்கம்பனியானது குறைந்த பெறுமதியில் வாகனங்களை இறக்குமதி செய்வதாகக் காட்டி இலங்கையின் வரிவருமானத்தில் வரட்சியை ஏற்படுத்தியுள்ளதை சுங்கத்திணைக்களம் நிரூபித்துள்ளது.

பீப்பிள் லீசிங் கப்பனியின் தலைமைக் காரியாலயத்திற்கும், இக்கம்பனியின் சார்பில் வாகனங்களை இறக்குமதி செய்துவரும் மற்றொரு கம்பனியிற்கும் சுங்கத் திணைக்களத்தினர் கடந்த வாரம் வருகை தந்திருந்தனர்.

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் பெறுமதியைக் குறைத்துக் காட்டி அதன் மூலம் வரியினையும் குறைத்துச் செலுத்தி இலங்கைச் சந்தையில் வாகனங்களை ஏனைய போட்டியாளர்களுடன் ஒப்பிடும் போது குறைந்த விலையில் மேற்சொன்ன இருகம்பனிகளும் விற்பதாக பல முறைப்பாடுகளை போட்டியாளர்கள் சுங்கத்திணைக்களத்திடம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து வரி ஏய்ப்பு நடந்திருப்பது தெரியவந்துள்ளது.

## போட்டிப்பரீட்சைகளால் மனஅழுத்தத்திற்குள்ளாகும் மாணவர்கள்

போட்டிப் பரீட்சைகளே மாணவர்களின் மன அழுதத்திற்கு முக்கிய காரணமாக அமைவதாக சுகாதார அமைச்சின் ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

பாடசாலை ஊட்டச்சத்து மற்றும் குடும்ப சுகாதார ஆணையகப் பணிப்பாளர் இதனைத் தெரிவித்துள்ளதுடன் போட்டித் தன்மைவாய்ந்த பாடசாலைப் பரீட்சைகளால் 48வீதமாக மாணவர் மன அழுத்தம் அதிகரித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சுமார் 11 வீத மாணவர்களே இம் மன அழுத்தத்தில் இருந்து விடுதலை அடைவதாகவும் மன அழுத்தம் காரணமாக காலை உணவைத் தவிர்க்கும் மாணவர்கள் பகலில் விரைவுணவுகளைச் சாப்பிடுவதுடன் இரவு உணவிலும் அக்கறை அற்றிருப்பதாகவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மயப்படாத ஆர்ப்பாட்டங்கள்

- நிலாந்தன் -

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வடக்கிலுள்ள ஊடகவியலாளர்களும், தெற்கிலுள்ள சில ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து கண்டனப் போராட்டம் ஒன்றை நடாத்தினார்கள். சுமாராக 150 - 200இற்கும் இடையிலான தொகையினர் இதில் கலந்துகொண்டார்கள். சில அரசு சார்பு ஊடகங்கள், கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் ஓர் ஊடகத்தின் தமிழ் பதிப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள முன்னணி ஊடகம் ஒன்றைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் தவிர அநேகமாக வடக்கிலுள்ள ஏனைய எல்லா ஊடகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோரும் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டார்கள். 2009 மே இற்குப் பின் வடகிழக்கில் ஊடகவியலாளர்கள் மேற்கொண்ட ஒப்பீட்டளவில் பெரிய ஓர் எதிர்ப்பு நடவடிக்கையாக இதனைக் கூறலாம்.


தமிழ் தேசிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களும் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதியும் இதில் பங்குபற்றியிருக்கின்றார்கள். வழமையான ஆர்ப்பாட்டங்களின்போது ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டத்திற்கு வெளியே செய்தி சேகரிப்பவர்களாகவே காணப்படுவதுண்டு. ஆனால், இம்முறை ஊடகவியலாளர்களே ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினார்கள் என்பது ஒரு முக்கியமான வித்தியாசம்.

எனினும், கடந்த ஐந்தாண்டுகளாக வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் இது போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் எல்லாவற்றுக்குமுள்ள பொதுப் பண்புகள் பலவற்றை இக்கண்டன ஆர்ப்பாட்டமும் கொண்டிருந்தது. அப் பொதுப்பண்புகள் வருமாறு..........

முதலாவது- 200இற்கும் கூடாத தொகையினரே இத்தகைய ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்கின்றார்கள். அரிதாகவே அந்தத் தொகை 100ஐ தாண்டுவதுண்டு. இரண்டாவது- தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்குபற்றுகிறார்கள். கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரு தொகுதி முக்கியஸ்தர்களும் பங்குபற்றுகிறார்கள். மூன்றாவது- யார் வழமையாக வருகிறார்களோ அவர்கள் தான் எல்லா எதிர்ப்புக்களின் போதும் வருகிறார்கள். யார் வழமையாக வருவதில்லையோ அவர்கள் எப்பொழுதும் வருவதில்லை. குறிப்பாக, கூட்டமைப்பின் உயர் மட்டத்தினர் அநேகமாக கலந்துகொள்வதில்லை. பல மாதங்களுக்கு முன் வடமாகாண சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு எதிர்ப்பு நடவடிக்கையின் போது அதன் முதலமைச்சர் கலந்துகொண்டதை ஒரு விதி விலக்காகக் கூறலாம். நாலாவது- உயர் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த புத்திஜீவிகள் எவரும் இவற்றில் பங்குபற்றுவதில்லை. ஆனால், குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவனங்களில் நிகழும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் அவர்கள் பங்குபற்றுவதுண்டு. ஐந்தாவது- வடக்கு கிழக்கிலுள்ள முக்கிய படைப்பாளிகள், செயற்பாட்டாளுமைகள், கல்விமான்கள், விமர்சகர்கள், ஆய்வாளர்கள் போன்றவர்கள் இவற்றில் பங்குபற்றுவதில்லை. ஆறாவது- வடக்கு கிழக்கிலுள்ள அரச உயர் அதிகாரிகள் இவற்றில் பங்குபற்றுவதில்லை. ஏழாவது- வடக்கு கிழக்கிலுள்ள மத குருக்கள் சில எதிர்ப்புக்களின் போது கலந்து கொள்வதுண்டு. எட்டாவது- வடக்கு கிழக்கிலுள்ள மூத்த ஊடகவியலாளர்களோ அல்லது ஊடக ஆசிரியர்களோ இவற்றில் முகம் காட்டுவதில்லை. ஒன்பதாவது- சில சமயங்களில் பாதிக்கப்பட்ட தரப்பைச் சேர்ந்தவர்கள்கூட பங்குபற்றுவதில்லை. உதாரணமாக பெண்களின் மீதான வன்முறைகள் தொடர்பில் பெண்ணியச் செயற்பாட்டு இயக்கங்களால் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைளின் போது பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்களோ அல்லது ஊரவர்களோ மிக அரிதாகவே கலந்துகொள்கிறார்கள்.

எனவே, மேற்கண்ட அனைத்து பொதுப் பண்புகளையும் தொகுத்துப் பகுத்தால் அதிர்ச்சியூட்டும் ஒரு சித்திரமே எமக்குக் கிடைக்கும். அதாவது, இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் ஏறக்குறைய சடங்குகள் போல ஆகிவிட்டன என்பதே.கடந்த ஐந்தாண்டுகளாக இத்தகைய எதிர்ப்புக்களின் போது ஏறக்குறைய ஒரே அளவு தொகையினரே கலந்து கொள்கிறார்கள். அரசியல் வாதிகளிலும் ஓரேயாட்களே கலந்து கொள்கிறார்கள். ஆயின் கடந்த ஐந்தாண்டுகளில் இந்த நிலைமை மாறாது அப்படியே இருப்பதற்கு யார் பொறுப்பு? இத்தகைய எதிர்ப்புகளை ஒழுங்கு படுத்தும் நிறுவனங்களும், கட்சிகளும் தானே?

பாதுகாப்புப் பிரச்சினை முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. ஆயின் பங்களிக்கும் மக்களின்




தொகையைக் கூட்டும் விதத்தில் புதிதாக ஏதையாவது ஏன் சிந்திக்க முடியாமற் போயிற்று? ஏதாவது ஒரு செய்முறை திரும்பத் திரும்ப எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்றால் அதைச் செய்யும் முறையில் தான் ஏதோ தவறு இருக்கிறது என்று அர்த்தம். எனவே, அந்தச் செய்முறையை மாற்றுவது பற்றியே முதலில் யோசிக்க வேண்டும் என்று அல்பேர்ட் ஐன்ஸ்டீன் ஒரு முறை கூறினார். இது மேற்படி எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கும் எல்லாருக்கும் பொருந்தும். அதாவது, ஒரு புதிய சிந்தனை தேவைப்படுகிறது. இதுவரையிலும் இல்லாத புதிய வழிமுறைகளைப் பற்றி ஆகக் கூடிய பட்ச படைப்புத் திறனோடு சிந்திக்க வேண்டியுள்ளது. எந்தவொரு துறையிலும் படைப்புத் திறன் மிளிர வேண்டுமாயிருந்தால் அதற்கு அந்தத் துறை சார் ஈடுபாடும், அர்ப்பணிப்பும், தியாக சிந்தையும் இருக்கவேண்டும். அதுவே வாழ்க்கை முறையாகவும் இருக்கவேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு துறை சார்ந்த ஈடுபாடும், அர்ப்பணிப்பும் அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு புதிய வழிகள் திறக்கும். படைப்புத் திறன் அதிகரிக்கும்.

எனவே, இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்கள் எவரும் அதற்கு முழு அளவு விசுவாசமாக இருக்க வேண்டும். அது அவர்களுடைய பிரதான அரசியல் ஒழுக்கமா? இல்லையா என்பதை முதலில் முடிவெடுக்கவேண்டும். அனைத்துலக அரங்கில் ஜெனிவாக் கூட்டத் தொடர்கள் ஏறக்குறைய சடங்குகளாக மாறிவரும் ஒரு பின்னணியில் உள்நாட்டில் சிவில் எதிர்ப்பு நடவடிக்கைகளும் சடங்குகளாக மாறி வருகின்றன என்பது.

அண்மை வாரங்களில் படைத்தரப்பு தமது தேவைகளுக்காக காணிகளை அளப்பதும் தமிழ் தேசியக் கட்சிகள் அதிரடியாகக் களத்தில் இறங்கி அவற்றைத் தடுப்பதும் ஒரு விறுவிறுப்பான அரசியல் செயற்பாடாக ஊடகங்களில் சித்தரிக்கப்பட்டு வருகிறது. படைத்தரப்பினர் நிலத்தை அளக்கும் போது தமிழ்த் தரப்பினர் அதை தடுக்க முற்படுகையில் அதில் ஒரு சாகச உணர்வு இருக்கும்தான். ஆனால், இது தமிழ்ப் படம் பார்ப்பதைப் போன்றதல்ல. அதைவிட ஆழமானது, ஆபத்தானது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு பொது முடிவை எட்டவேண்டும். அது ஒரு அரசியல் கொள்கைத் தீர்மானமாக அமையவேண்டும். அதற்கு ஏற்ப உள்நாட்டிலும் அனைத்துலக மட்டத்திலும் ஒழுங்கமைக்கப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சிவில் செயற்பாடாகவும், சட்டச் செயற்பாடாகவும் அவற்றை முன்னெடுக்கலாம். ஆனால், எல்லாவற்றுக்கும் முதலில் இது தொடர்பில் கொள்கைத் தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

ஆனால், கட்சிகள் தங்கள் மாநாடுகளைக் கூட்டும்போது மினக்கெட்டு ஒழுங்குபடுத்தி ஆட்களைத் திரட்டி மண்டபம் நிறைந்த ஆட்களோடு மாநாடுகளை நடாத்துகின்றன. தமது கட்சியின் பலத்தை நிரூபிப்பதற்காக எங்கிருந்தோ எல்லாம் தமது ஆதரவாளர்களை திரட்டிக் கொண்டுவரும் கட்சிகளால் மேற்கண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளின்போது மட்டும் ஆட்களைத் திரட்ட முடியாமற்போனது ஏன்? மேற்படி எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்குபற்றும் கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் எல்லோருமே பத்தாயிரத்திற்குக் குறையாத அல்லது சில சமயங்களில் இருபாதாயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றவர்கள். ஆகக் கூடிய பட்சம் 90 ஆயிரம் வாக்குகளைப் பெற்றவரும் அவர்கள் மத்தியில் உண்டு. ஆயின் வாக்களித்த மக்களுக்குள் இருந்தாவது ஒரு கவர்ச்சியான தொகையை அவர்களால் ஏன் திரட்ட முடியாமற்போயிற்று? ஆயிரக்கணக்கான வாக்காளர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் மேற்படி அரசியல் வாதிகள் தனியன்களாக ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றுவதை எப்படி விளங்கிக் கொள்வது?

இக்கேள்விகளுக்கான விடைகளை நாம் ஆகப் பிந்திய ஒரு உதாராணத்தை ஆழமாகப் பார்ப்பதன் மூலம் கண்டுபிடிக்கலாம். அந்த உதாராணம் அண்மை வாரங்களில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஊடகங்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட காரைநகர் விவகாரம் ஆகும். காரைநகரிலுள்ள ஊரியான் என்ற அச்சிறு கிராமத்தை இங்கே ஒரு வகை மாதிரி உதாராணமாக எடுத்துக்கொள்ளலாம்.

ஊரியான் மிக வறண்ட, மிக வறிய ஓர் ஒதுக்குக் கிராமம். சாதி ஒடுக்குமுறையும் உட்பட எல்லா ஒடுக்குமுறை களுக்கும் முகம் கொடுக்கும் ஒரு கிராமம். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து ஐந்தாண்டுகள் ஆன பின்னும் கார்பற் சாலைகள் இன்னமும் சென்றடையாத ஒரு கிராமம். ஐந்து மாதங்களுக்கு முன்புதான் அதற்கு மின்சாரம் கிடைத்தது. 1998இல் ஒரு தொண்டு நிறுவனத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட மிகச் சிறிய வீடுகள். போதியளவு கழிப்பறைகள் கிடையாது. முன்னைய காலங்களில் பிள்ளைகள் பாடசாலைக்குப் போவதாக இருந்தால் அவர்களுக்கு ஒப்பீட்டளவில் கிட்டவிருக்கும் தியாகராஜா மகாவித்தியாலயத்திற்கு சுமாராக ஆறு கிலோ மீற்றர் தூரம் நடந்துபோகவேண்டியிருந்தது. ஆயுத மோதல்களின் போதும் அதற்குப் பின்னரும் இப்பிடித்தான் இருந்தது ஊரியான். கடந்த ஐந்தாண்டுகளில் அரசியல் வாதிகளையும், ஊடகங்களையும் பொறுத்த வரை அது ஒரு கவர்ச்சி மிக்க கிராமம் அல்ல.

ஆனால், புரட்டஸ்தாந்து திருச்சபையான அமெரிக்கன் சிலோன் மிஷன் அங்கே அதிகம் வேலை செய்திருக்கிறது. பெருமளவுக்கு இந்துகளைக் கொண்ட ஊரியானில் ஒரு முன்பள்ளியையும் மாலைப் பள்ளியையும் அமெரிக்கன் சிலோன் மிஷன் நடாத்துகிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டுக்கு வரும்பொழுது அவர்களில் சிலரை ஊரியானுக்கு அனுப்பி தொண்டு செய்வதற்கும் அந்த மக்களுக்கு ஏதோவொரு விதத்தில் உதவி செய்வதற்கும் உரிய ஏற்பாடுகளை அத்திருச்சபை செய்து கொடுத்திருக்கிறது. காரைநகர் அபிவிருத்தி சங்கத்தோடு இணைந்து நீர் விநியோகத்தையும் ஓரளவுக்கு செய்திருக்கிறது. எட்டு மாதங்களுக்கு முன்புதான் அந்தக் கிராமத்திற்கு போக்குவரத்துச்சபைப் பேருந்தைக்கொண்டு வந்து தினமும் 12 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்யும் பிள்ளைகளுக்கு பருவகாலச் சீட்டுகளையும் அத்திருச்சபையே பெற்றுக் கொடுத்திருக்கிறது.

அச் சிறுமிகளின் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறை வெளிவரும் வரையிலும் ஊரியானை அரசியல் கட்சிகளோ அல்லது ஊடகங்களோ பெரியளவில் உற்றுக் கவனிக்கவில்லை. தேர்தல்களின்போது சில தலைவர்கள் சென்றிருக்கிறார்கள். வடமாகாண சபை தேர்தல் முடிந்த பின் முதலமைச்சர் ஒரு முறை கிராம தரிசனம் செய்திருக்கிறார். கிராமத்துக்கு மின்சாரம் வந்த போது அமைச்சர் தேவானந்தா வந்திருக்கிறார். மாவை சேனாதிராசா ஒருமுறை போனதாக ஒரு தகவல் உண்டு. தண்ணீர் பிரச்சினை பற்றி எல்லாரிடமும் அந்த மக்கள் முறையிட்டிருக்கிறார்கள். காரைநகர் பிரதேச சபையிலுள்ள கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் ஊரியானுக்குக் குடிநீர் வேண்டும் என்று பல வழிகளிலும் முயன்றிருக்கிறார். ஆனால், அந்த சிறுமிகளின் விவகாரம் வெளியுலகத்தின் கவனத்தை ஈர்த்த போதே குடிநீர் பிரச்சினைக்கு ஏதோவொரு தீர்வு கிடைத்திருக்கிறது.

ஆனால், அதே சமயம் பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் வேறுவிதமான பிரச்சினைகள் உருவாகியிருப்பதாக அப்பகுதியைச் சேர்ந்த மதப் பிரமுகர் கவலை தெரிவித்தார். சில ஊடகங்கள் அந்த சிறுமிகளின் பெயர்களையும் வயதுகளையும் குறிப்பிட்டிருந்தன. இது எதிர்காலத்தில் அவர்களுக்கு வேறுவிதமான பிரச்சினைகளைக் கொண்டு வரலாம் என்றுமவர் அச்சம் தெரிவித்தார். சம்பவத்தைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட குடும்பங்கள் கிராமத்தில் பெருமளவிற்கு தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் உளவியல் ரீதியாக பாதிப்புற்றிருப்பதாகவும் சில செயற்பாட்டாளர்கள் கவலைப்படுகிறார்கள். ஒரு புறம் அச்சம் இன்னொரு புறம் பண்பாட்டு ரீதியிலான விமர்சனங்கள், நெருக்கடிகள். முன்னைய காலங்களில் இத்தகைய செய்திகளைப் பிரசுரிக்கும்போது பாதிக்கப்பட்ட பெண்களின் எதிர்கால வாழ்வையும் கவனத்திலெடுத்தே செய்திகள் எழுதப்படுவதுண்டு. இப் பொழுதெல்லாம் பாதிக்கப் பட்டவர்களின் எதிர்காலத்தைக் குறித்த கவலைகள் எதுமின்றி செய்திகள் பிரசுரிக்கப்படுகின்றன என்று ஊடகத்துறையைச் சேர்ந்த ஒருவர் கவலைப்பட்டார்.

ஊடகவியலாளர்களுக்குத் தொழில் சார் திறன்கள் அதிகரிக்கும்போது இது போன்ற பிரச்சினைகள் எழுவதைத் தடுக்கலாம். அத்தகைய தொழில் சார் திறன்களை பெருக்கும் நோக்கத்தோடு ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நெறிகளில் கலந்துகொள்வதற்காகச் சென்ற ஊடகவியலாளர்களே தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் அதற்கெதிராகவே அவர்கள் கடந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எனவே, ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த கடந்த ஐந்தாண்டுகளில் அபிவிருத்தி அரசியலும் ஊரியானுக்குப் போதியளவு போகவில்லை. தமிழ் தேசிய அரசியலும் போதியளவு போகவில்லை. அமெரிக்கன் சிலோன் மிஷன் தான் குறிப்பிடத்தக்களவிற்குச் செயற்பட்டிருக்கிறது. சம்பவம் நடந்ததன் பின் காரைநகரில் ஓர் எதிர்ப்பு நடவடிக்கை ஒழுங்கு செய்யப்பட்டிந்தது. ஆனால், இதில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்களே கலந்துகொண்டதாக ஊர்மக்கள் தெரிவிக்கிறார்கள். பாதிக்கப்பட்ட கிராமத்தை மேற்படி ஆர்ப்பாட்டத்தில் வெற்றிகரமாக இணைத்துக் கொள்ள முடியவில்லை. அச்சுறுத்தலான ஒரு சூழலில் வெளியிலிருந்து வந்தவர்கள் "ஆர்ப்பாட்டம் செய்ய வா" என்று அழைத்தால் யார் தான் கலந்துகொள்வார்கள்? அந்தச் சனங்களோடு நெருங்கிப் பழகி அவர்களுடைய அன்பையும் மதிப்பையும் பெற்றிருக்கக் கூடிய ஓர் அரசியல் வாதியோ அல்லது செயற்பாட்டாளரோ அழைத்திருந்தால் அந்த மக்கள் நிச்சயமாக இணைந்திருப்பார்கள். ஆனால், அரசியல் வாதிகளும் செயற்பாட்டியக்கங்களும் அங்கே அத்தகைய ஆழமான உறவுகள் எதையும் கொண்டிருக்கவில்லை.

இது தான் பிரச்சினை. ஊரியான் ஒரு வகை மாதிரி உதாராணம் தான். ஊரியானைப் போலவே அநேகமாக பெரும்பாலான உட்கிராமங்களில் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு அலுவலகங்களும் இல்லை. உயிர்த் தொடர்பும் இல்லை.

சில மாதங்களுக்கு முன் வடக்கிலுள்ள ஒரு செயற்பாட்டாளரோடு உரையாடிக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார், எங்களில் பலர் தங்களுக்குரிய சௌகரிய வலையத்திற்குள் (comfort zone) வாழ்ந்து கொண்டு சிவில் எதிர்ப்பைக் குறித்து உரையாடிக் கொண்டிருக்கிறோம் என்று. இது தான் உண்மை. ஐந்தாண்டுகளாக தமிழ் அரசியல் பரப்பில் தொழில் சார் அரசியல்வாதிகள் பெருகிய அளவுக்கு செயற்பாட்டாளுமைகள் பெருகவில்லை. எதிர்ப்பு நடவடிக்கைகளும் மக்கள் மயப்படவில்லை. வாக்கு வேட்டை அரசியலுக்காக தெருவில் இறங்கும் அரசியல்வாதிகளிடம் தமிழ்மக்கள் அதிகமாக எதிர் பார்க்கலாமா?

நன்றி - நிலாந்தன் (www.globaltamilnews.net)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அச்சச்சோ வடை போச்சே"

... நாட்டு நடப்பு...

கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு கல் எறியாதே, சும்மா கிடக்கிற சங்கை ஊதிக் கெடுக்காதே, தடியைக் கொடுத்து அடியை வேண்டாதே.. ... என்றெல்லாம் எமது மூதாதையர்கள் பல முதுமொழிகளை, உவமைகளை, பல மொழிகளை கூறி வைத்துள்ளார்கள். அவை அனைத்தும் அவர்களால் நன்கு அனுபவித்து அறிந்து கொண்டவையாகும்.

மேலும் திருவள்ளுவர் கூட தனது 1330 குறள்கள் மூலம் இந்த வையகத்தில் வாழும் அனைத்து மக்கள் பயன்பெற நல்ல விடயங்களை கூறி வைத்தாலும் எம்மவர்கள் அவற்றை கற்றறிந்து அதன்படி என்றுமே நடந்து கொள்வதில்லை. முன்கூட்டியே ஒரு விடயத்தை பற்றி தெளிவாக அறியத்தந்தும், நாம் அவற்றை உதாசீனம் செய்வதால் கஷ்டம் நமக்கு மாத்திரமல்ல நம்மை சுற்றியுள்ள ஏனையோரையும் நாம் பெரும் கஷ்டத்தில் தள்ளி விடுகின்றோம்.

அமைதியான போக்கை கொண்ட அவர் தனது வீட்டை கட்டி முடித்ததும், சுற்றிவர பாதுகாப்பை கருத்தில் கொண்டு முன்பு இருந்த உயிர் வேலியை அகற்றிவிட்டு நிரந்தரமாக சுற்று மதிலை அமைக்கும் வேலையில் இறங்கினார். சுற்றிவர மதில் வேலைகள் அனைத்தும் முடிந்த பின் பக்கத்து வீட்டுக் காரருக்கு அந்த மதிலால் பெரும் பிரச்சினையொன்று எழுந்தது.

அங்கு உயிர் வேலி இருந்த பொழுது பக்கத்து வீட்டுக்காரர் உயிர் வேலி வளைந்து நெளிந்து செல்வதால் தனது வீட்டு யன்னல்களை இலகுவாக திறந்து பூட்டினார். ஆனால் நிரந்தர மதில் அமைக்கப்பட்டதால் குறித்த யன்னல்களை திறக்கவே முடியவில்லை.

குறித்த வீடு பொது மதிலுக்கு மிக அண்மையில் முறையற்று நிர்மாணிக்கப்பட்டதே அதற்குக் காரணமாகும். ஆனால் மதிலை அமைத்தவர் அரச நில அளவையாளர்களைக் கொண்டு அளந்து பிரதேச சபையின் அனுமதி பெற்று முறைப்படியே மதிலை அமைத்திருந்தார். பக்கத்து வீட்டுக்காரரோ எந்தவித அனுமதியும் இன்றி தனது இஷ்டத்திற்கு அந்த வீட்டை முறையற்று அமைத்ததினால் பல பிரச்சினைகள் அங்கு உருவாகியது மாத்திரமல்ல அமைதியின்மையும் ஏற்பட காரணமானது.

பக்கத்து வீட்டுக்காரரின் முறையற்ற வீட்டுக் கூரை தாவாரம் அடுத்த காணிக்குள் நீட்டிக் கொண்டிருப்பதனால் எல்லை மதில் கூட மழை நீரால் பாதிக்கப்படுகின்றது. அது மாத்திரமல்ல தற்பொழுது அவரது வீட்டு யன்னல்கள் கூட திறக்க முடியாதிருப்பதால் காற்று, வெளிச்சம் போன்ற இயற்கை வசதிகளைக் கூட அவரால் பெறமுடியாமலுள்ளது. பொதுவாக இருசாராருக்கும் பாதிப்புக்கள் இருந்தன.



இருப்பினும் மதிலை நிர்மாணித்த காணிக்காரர் தனக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை பெரிதுபடுத்தாமல் என்றும் பக்கத்து வீட்டுக்காரருடன் நட்பாக இருக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டை பேணிவந்தார். பக்கத்து வீட்டுக்காரருக்கு ஏற்கனவே ஒரு வீடு குறித்த காணிக்குள் கட்டப்பட்டு இருந்தாலும் பிரச்சினைக்குரிய அந்த வீடு அவருக்கு ஒரு மேலதிக வீடாகும்.

குறித்த வீட்டுக்கு சட்டரீதியாக பெறப்பட வேண்டிய எந்த ஒரு அனுமதியையும் அவர் பெற்றிருக்கவில்லை. ஆனால் மதிலை நிர்மாணித்த காணிக்காரருக்கு எதிராக அப்பகுதி பிரதேச சபையிடம் குறித்த நிர்மாணம் சட்டத்திற்கு முரணானது என பக்கத்து வீட்டுக்காரர் புகார் செய்திருந்தார். மேலும் மதிலை நிர்மாணித்த காணிக்காரர் தன்னிடம் சகலதும் நேர்த்தியாக இருப்பதால் பக்கத்து வீட்டுக்காரரின் பூச்சாண்டிக்கு பயப்படவுமில்லை, அவர் மேல் கோபப்பட்டு ஏட்டிக்கு போட்டியாக நடந்து கொள்ளவும் இல்லை. ஏனெனில் அவர் மிகவும் பொறுமைசாலி.



ஒரு நாள் அவரின் வீட்டுத் தென்னை மரத்தின் குரும்பையொன்று ப.வீ.காரரின் வீட்டுக் கூரை மீது விழுந்து அங்கு ஒரு துவாரத்தை ஏற்படுத்திவிட்டது. இனி கேட்கவா வேண்டும்? அவர் உடனடியாக அப்பகுதி கிராம சேவை உத்தியோகத்தரிடம் சென்று முறையிட்டார். அவர் உடனடியாக சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டார்.

குறித்த தென்னைமரம் பொது மதிலில் இருந்து சுமார் 6 அடி தூரத்தில் உள்ளே இருந்தாலும் ப.வீ.காரரின் வீடு பொது மதிலின் மிக அருகில் இருப்பதே குறித்த சேதத்திற்கு காரணம். இருப்பினும் இக்காலத்தில் தென்னை மரமொன்றை வெட்டிச் சாய்க்க என்னால் அனுமதிக்க முடியாது. மேலும் குரும்பை, தேங்காய் போன்றவை கூரை மீது விழுந்து சேதப்படுத்தாமைக்கு ஏதம் மாற்று வழிமுறையை உபயோகித்து இரு சாராரும் ஒற்றுமையாக இருக்கும்படி கிராம சேவை உத்தியோகத்தர் அறிவுரை வழங்கிவிட்டுச் சென்றார்.

ஆனாலும் பக்கத்து வீட்டுக்காரர் அவரின் அறிவுரையை ஏற்க மறுத்து பொலிசில் முறைப்பாடு செய்தார். பொலிசார் முறைப்பாட்டை இணக்க சபையிடம் கையளித்தனர். முறைப்பாட்டுக்காரர் அங்கு கூட வழங்கப்பட்ட அறிவுரையையும் ஏற்க தயாராக இருக்காத பட்சத்தில் அது குறித்து நீதிமன்றுக்கு அறிக்கையிடுவதாகவும் உரிய தீர்ப்பை அங்கு பெற்றுக்கொள்ளலாமெனவும் இணக்க சபையினால் ஆலோசனை வழங்கப்பட்டது.

தனது முயற்சிகள் அனைத்தும் படு தோல்வியை தழுவிக் கொண்டு செல்வதை விரும்பாத ப.வீ.காரர் தனது எதிரியை மாந்திரீக முறையில் பழிவாங்கும் முயற்சியில் இறங்கினார். குறித்த தென்னைமரத்திற்கு உரியவர் சிறந்த பக்திமான். சூனியத்தில் நம்பிக்கையற்றவர் ஆதலால் அவர் அதனால் பாதிக்கப்படவில்லை. ப.வீ.காரரால் தனது குடும்பத்திற்கு செய்து வைக்கப்பட்ட சூனியப் பொருட்களை சிறந்ததொரு மாந்திரீகரைக் கொண்டு அகற்றிவிட்டு அப்பொருட்களை அயலவர்களிடம் காண்பித்தார்

ஓரிரு மாதங்களுக்குப் பின் அந்த தென்னை மரத்தின் உரிமையாளர் திடீர் சுகயீனத்தால் இறந்துவிட்டார். அவரை தொடர்ந்து ப.வீ.காரரும் சில மாதங்களுக்குப் பிகஹ்ரீன் இறந்துவிட்டார். அப்பாடா எப்படியோ பிரச்சினை தீர்ந்துவிட்டது என பிரச்சினையை தீர்க்க வந்த உத்தியோகத்தர்கள் நீண்ட பெருமூச்சுடன் திருப்தியடைந்தனர்.

இருப்பினும் இனிமேல் தான் குறித்த பிரச்சினை சூடுபிடித்து உக்கிரம் அடையப் போகுதென்று அந்த அப்பாவி அதிகாரிகள் அறியாதிருந்தனர்.

ப.வீ.காரரின் மகன் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தான். அவர் அங்கு நடந்த விடயங்களை உறவினர்கள் மூலம் அறிந்து கொண்டு தென்னை மரத்து விடயத்தை மீண்டும் விட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்க முழு பிரயத்தனங்களை எடுத்திருந்தார்.

அவர் வெளிநாட்டிலிருந்து வந்தவரல்லவா? அவரின் முறைப்பாடு விசேடமாக கவனிக்கப்பட்டது. அப்பகுதி பிரதேச சபைத் தலைவரும், உறுப்பினர் ஒருவரும் அரச வாகனத்தில் குறித்த தென்னைமரம் அமைந்துள்ள காணிக்குச் சென்று சகலவற்றையும் உன்னிப்பாக அவதானித்ததன் பின்னர் தென்னைமரம் அமைந்துள்ள காணியின் உரிமையாளர் தற்பொழுது இல்லாமையினால் அவரின் மருமகனுடன் குறித்த பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடினார்.

மருமகனுக்கு குறித்த பிரச்சினை தொடர்பாக முழுவிபரமும் தெரிந்த படியால் 'ஐயா இதை ஒரு பாரிய பிரச்சினையாக நாங்கள் கருதவில்லை. எமது தென்னை மரத்தால் ப.வீ.காரருக்கு தொந்தரவாக இருந்தால் சேதங்கள் ஏற்படாத வகையில் யாதும் மாற்று நடவடிக்கைகளை அவர் எடுக்கலாம். இல்லாவிடில் எங்களுக்கு ஏதம் நியாயமான நஷ்டஈடு தந்தால் நாங்கள் மரத்தை வெட்டத் தயார் ஆனால் அவர் எந்த ஒரு இணக்கத்திற்கும் வர விரும்பாது புதிய கூரைத்தகட்டை மட்டும் வேண்டித் தரும்படி ஒற்றைக் காலில் நிற்கிறார்.' என்றான் மருமகன்.

அங்கு வந்திருந்தவர்கள் மருமகனின் கூற்றை நியாயமென ஏற்றாலும் பக்கத்து வீட்டுக் காரரின் வெளிநாட்டு மகனின் புகாரை பெரிதாக அங்கு முன்னிலைப்படுத்தினர். 'ஐயா எந்தவொரு பிரச்சினைக்கும் ஒரு முக்கிய காரணம் இருக்கும். அதாவது இந்த தென்னைமரப் பிரச்சினைக்கு முக்கிய காரணம் இந்த ப.வீ.காரரின் அனுமதியற்ற கட்டிடமே. அவர் எங்களது எல்லை அருகில் வீட்டை முறையற்று கட்டியதாலே அவரின் கூரைக்கு சேதம் ஏற்படுகிறது.' என குறித்த கட்டிடத்தை சுட்டிக் காட்டினார் மருமகன்.

அங்கு வந்திருந்தவர்கள் அக் கட்டிடத்தை அன்று பார்வையிட்டு விட்டு சென்றனர்.

சுமார் ஒரு வாரத்திற்குப் பின்னர் தென்னை மரம் தொடர்பாக புகார் செய்தவருக்கு இப்படியொரு கடிதம் ஒன்று குறித்த பிரதேச சபையால் அனுப்பி வைக்கப்பட்டது.

"தங்கள் புகார் தொடர்பாக பரிசீலனை செய்த போது நீங்கள் சட்டவிரோதமாக முறையற்றவகையில் குறித்த வீட்டை நிர்மாணித்ததினாலே அயலிலுள்ள தென்னைமரத்தினால் தங்கள் கூரைக்கு சேதம் ஏற்படுகிறது. கட்டிடம் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்ருப்பின் இப் பிரச்சினை எழவாய்ப்பில்லை. இன்னும் 14 நாட்களுக்குள் குறித்த அனுமதியற்ற கட்டிடத்தை சீர் செய்யாவிடின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் விசேட கட்டளை சட்டத்தின் கீழ் தங்களின் அனுமதியற்ற கட்டிடம் முற்றாக அகற்றப்படும்." என குறிப்பிடப்பட்டிருந்தது.



வெளிநாட்டிலிருந்து வந்தவர் வெளியில் தலைகாட்ட முடியாது வீட்டுக்குள் முடங்கிக் கொண்டார்.

இந்த தடை போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?!!'

**- பாலையூற்றான் -**

---




## ஏல விற்பனை



லண்டன் நகரில் உள்ள ஹீத்ரு விமான நிலையத்தில் பயணிகள் மறதியாக விமானத்தில் விட்டுச்சென்ற பொருட்களை ஏலம் விடும் நிகழ்ச்சி ஒன்று நேற்று நடந்தது. சூட்கேசின் உள்ளே என்ன இருக்கின்றது என்று தெரியாமலேயே பொருட்களை ஏலம் எடுக்க வந்தவர்கள் ஏலத்தொகை கேட்டு வாங்கிச்சென்றனர். ஒவ்வொரு சூட்கேசின் விலை $10 முதல் $20 வரை ஏலம் போனது. ஒரு சிலருக்கு $500 மேல் உள்ள விலைமதிப்புள்ள பொருட்கள் இந்த ஏலத்தில் கிடைத்தது.

## 12 + 38 --- தாய் + மகன்

12 வயது மகனுடன் 38 வயதுள்ள அவனது சொந்த தாயாரே செக்ஸ் உறவு புரிந்ததை அவருடைய கணவர் வெப் கேமரா மூலம் தற்செயலாக கண்டுபிடித்து காவல்துறையினரிடம் புகார் கொடுத்ததால் அந்த பெண் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்த அதிர்ச்சி சம்பவம் இங்கிலாந்து நாட்டில் உள்ள் Bristol என்ற நகரில் நடந்துள்ளது.

## சவுதியில் ஆண்களுக்கு திருமண தடை



பாகிஸ்தான், வங்கதேசம், சாட் மற்றும் மியான்மர் போன்ற நாடுகளில் வசிக்கும் பெண்களை, சவூதி நாட்டைச் சேர்ந்த ஆண்கள் திருமணம் செய்யக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது. சவூதி அரசின் புதிய திருமணத் தடை அந்நாட்டு ஆண்களிடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

## அண்ணா Weds தங்கை



பிரேசில் நாட்டில் உள்ள 37 வயது பெண் Adriana ஒருவர் ஒரு வயதாக இருக்கும்போது அவரது தாயார் அவரை தொலைத்துவிட்டார். அவர் கணவனும் சிறுவயதில் தாயை தொலைத்தவர் என்பதுதான். இருவரும் தங்களது தாயாரை தங்களிடம் இருந்த ஆதாரங்களை வைத்து தேடி வந்தனர். ஒரு கட்டத்தில் அவர்களின் தாயார் யார் என்பதை கண்டுபிடித்துவிட்டார்கள். ஆனால் துரதிஷ்டவசமாக இருவருக்கும் ஒருவரே தாயார் என்றாலும் இருவரும் வெவ்வேறு தந்தைக்கு பிறந்தவர் என்பது ஒரு ஆறுதல்.

## பெண் கொலை?!!

பிரேசில் நாட்டில் கொயானியா நகரத்தில் மர்ம நபர் ஒருவன் பெண்களை தேடி தேடி கொலை செய்து வருகிறான். மோட்டார் சைக்கிளில் உலா வரும் அந்நபர் இளம்பெண்கள் அருகில் சென்று துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பி ஓடியுள்ளான். இதுவரை 13 வயதில் இருந்து 29 வயதிற்கு உட்பட்ட 12 பெண்களை கொலை செய்துள்ள அவன், கடைசியாக இரு தினங்களுக்கு முன்பு 14 வயது சிறுமியை கொலை செய்துள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் ஜாக்சன்

பிரேசில் நாட்டை சேர்ந்த Antonio Gleidson Rodrigues என்ற 32 வயது நபர் மைக்கேல் ஜாக்சன் போன்ற உருவத்தை பெறுவதற்காக ஆசிட்டை இன்ஜக்சன் மூலம் தனது உடலில் ஏற்றி முகம் உள்பட உடல் முழுவதையும் வெளுக்க செய்துள்ளார். பின்னர் மருத்துவரிடம் ஆலோசனை பெற்று மொத்தம் நான்கு முறை தனது முகத்தில் ஆபரேசன் செய்து அவருடைய தோற்றத்தை பெறுவதில் தற்போது வெற்றியும் பெற்றுவிட்டார். மைக்கேல் ஜாக்சனை போன்ற உடலை பெற்ற தான் விரைவில் அவரை போலவே பாடவும் நடனமாடவும் உள்ளதாக அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.



# இது தான் கற்பா!!

சிறுகதை

கடிதத்தை நடந்தபடியே வாசித்து தன் இருக்கைக்கு வந்து வசுமதி அமர்ந்த போது இன்டர்காம் அழைத்தது. பிரபாகர் நினைத்த போதே மெலிதாக சிரிப்பு வந்தது. முந்தானையைக் கையால் நீவியபடியே இன்டர்காமை எடுத்து "யெஸ்"......பிரபா.... சொல்லு" என்றாள்.

"மணி என்ன தெரியுமா? இரண்டரை! சாப்பிடணும்னு ஏதாவது ஐடியா இருக்கா?" "நிறைய இருக்கு. ஆனா வசதிப்பட மாட்டேங்குது, என்ன பண்ணலாம்?" என்றால் அலுங்காமல். "ப்சு... விளையாடாதே... இன்னிக்கு மூன்றரை மணிக்கு நான் பர்மிஷன்ல போறேன் தெரியுமில்லை? சீக்கிரமா சாப்பிட்டுட்டு கிளம்பலாம்னா..." வசுமதி இப்போது சீரியசாகி, "ஒகே. அப்ப ஒண்ணு பண்ணு. நீயும் சந்தரும் சாப்பிடுங்க. ஒரு முக்கியமான விஷயம் கன்வே பண்ண வேண்டியிருக்கு. முடிச்சிட்டு வந்து ஜாய்ன் பண்ணிக்கறேன்" என்றாள். பேச்சு முடியவில்லை. தொடர்ந்தது. "ரைட்..... அப்ப நீ கீழே வர்றப்ப பெட்டில தோத்ததுக்கு 100 ரூபாய் எடுத்துகிட்டு வந்திடு" என்றான் பிரபாகர்.

"நூறு ரூபாயா? எந்த பெட்? எப்ப தோத்தேன்?" என்றால் வசுமதி ரொம்ப அப்பாவியாக. "நீ கொடுக்க வேண்டியிருந்தா மட்டும் உனக்கு சகலமும் மறந்திடுமே! போன சனிக்கிழமை "Rembrandtesque"ஐத் தப்பா ஸ்பெல் பண்ணிட்டு, சரிதான்னு சாதிச்சியே அதுக்காகத்தான்" "பிரபா.. நூறு ரூபாய் பந்தயம்ங்கிற தெல்லாம் ரொம்ப அநியாயம். இப்ப இருந்து ஐம்பது ரூபாவா வைச்சுக்கலாமா?". "அம்மாடி... எத்தனை நூறு ரூபாய் என்கிட்ட இருந்து நீ கறந்திருப்பே? விதிமுறைகளை எல்லாம் மாத்த முடியாது. வேணுன்னா நான் உன்கிட்ட எப்பவாவது தோத்தேன்னா அப்ப இருந்து மாத்திக்கலாம்."

முணுமுணுத்தபடியே இன்டர்காமை வைத்தாள் வசுமதி. பதினைந்து நிமிடங்கள் கழித்து வசுமதி டைனிங் ஹாலை அடைந்த போது சந்தரும் பிரபாகரும் சாப்பாட்டு மேசையில் தட்டும் பாத்திரங்களும் ஏகமாய்ப் பரத்தியபடி சுவாரசியமாய் பாதி சாப்பாட்டை முடித்திருந்தார்கள். வசுமதியைப் பார்த்தவுடன் பிரபாகர் பாத்திரங்களை ஒரு புறமாக ஒதுக்கி அவளுக்கு இடம் கொடுக்க முனைந்த போது, சிரமப்படாதே பிரபா... நான் அந்த டேபிள்லே உட்கார்ந்துக்கறேன்" என்றவாறே ஒரு நூறு ரூபாய்த் தாளை பிரபாகர் டேபிள் மீது வைத்துவிட்டு, எதிர்ப்புறமிருந்த மற்றொரு மேசையில் அமர்ந்து கேரியரைத் திறந்தாள்.

"காலையில என்னமோ படிச்சே, சொன்னா எனக்குக்கூட கோபம் வரும்னு சொன்னியே!" என்றாள். "ஓ அதுவா? "அது வந்து வசு, நேத்து ஒரு கதை படிச்சேன். எழுதினது... யார்னு ஞாபகம் இல்லை. அதிலே ஒருத்தன் அவனோட லவர்கிட்ட "Chastity is nothing but lack of opportunity," அதாவது கற்பு எனப்படுவது சந்தர்ப்பமின்மையே தவிர வேறெதுவுமில்லை"ன்னு சொல்றான். அதுவும் அவன் சொல்லலை. பெர்னாட்ஷா சொன்னாராம். கதையோட கரு கூட கிட்டத்தட்ட அதுதான்" என்றான் பிரபாகர். இப்ப என்ன சொல்ல வர்றே? என்றாள். "கதை முழுதும் படிச்சேன். அற்புதமா இருந்தது. அப்புறம் ரொம்ப நேரம் யோசிச்சுப் பார்த்தேன். பெர்னாட்ஷா சொல்றது சரிதான்னு தோணிச்சு. பெண்கள் கற்பு, கற்புன்னு அனாவசியமா அடிச்சுக் கறாங்கன்னு படுது. அதெல்லாம் கட்டுக்காவல் இருக்கற வரைதான். There is no such thing called கற்பு" என்ற பிரபாகர், சந்தரின் வார்த்தைகளை மதித்து இந்த விஷயத்தை அந்த சமயத்தில் வசுமதியிடம் சொல்லாது இருந்திருக்கலாம்.



வசுமதி எடுத்த எடுப்பில் வெடித்தாள். "கொஞ்சமாவது அறிவு இருக்கா? ஏன் இப்படி பொறுக்கித்தனமா பேசறே?" பிரபாகருக்கு இயல்பாகக் கோபம் வந்தது. இருந்தும் நிதானித்து, "என்ன வசு, உண்மைன்னு தோணற ஒரு கருத்தைச் சொல்ல பொறுக்கியா இருக்கணுமா?" என்றான்.

வசுமதி குளிரவில்லை. இன்னும் கோபித்தாள். "அப்ப சந்தர்ப்பம் கிடைச்சா எல்லாப் பெண்களும் கெட்டுப் போயிடுவாங்கங்கறே. பிரபாகருக்குத் தலைக்குள் ரத்தம் ஜிவ்வென்று பாய்ந்தது.

"இப்ப பொதுவாத்தானே பேசிகிட்டு இருக்கோம்?" என்றான். சாப்பிடுவதை நிறுத்தி அவனையே முறைத்தாள் வசுமதி. பிரபாகர் பக்கம் திரும்பி, "ஏண்டா மடையா, அப்பவே சொன்னேனில்லை? ஏதோ சாப்பிட வந்தோம், நாட்டுக்குத் தேவையான விஷயமா கிர்க்கெட்ல யார் ஜெயிச்சாங்க, தேர்தல் எப்ப வரும்னு பேசிட்டுப் போனோம்னா எவ்வளவு நல்லா இருக்கும்! பெரிய இவங்க... கற்பு இருக்கா இல்லையாமா? காசு பெறாத விஷயம்" நிலைமையை மட்டுப்படுத்த அவன் பேசியது வசுமதிக்கு இன்னும் வெறுப்பூட்டியது.

எத்தனை நாள் உன்கூட நேரம், காலம் பார்க்காம ஊர் சுத்தியிருக்கேன்? ஒரு லவ் லட்டர் கூட நீ கொடுக்கற மாதிரி வைச்சுக்கலியே!" தணிந்து சமநிலைக்கு வந்திருந்த பிரபாகர் இப்போது வசுமதியை உசுப்பிவிட ஆசைப்பட்டான். "நீ கொஞ்சம் அழகா இருந்திருந்தா, கொடுத்திருப்பேனோ என்னவோ" என்றான் சாவதானமாக. பெண்களின் அடுத்த பலவீனம்! வசுமதியின் அழகு அங்கு பிரசித்தம்! இருந்தும் பிரபாகரின் வார்த்தைகளை அவளால் தாங்க முடியவில்லை. சாப்பிட்டுக் கொண்டிருந்ததை அப்படியே ஜன்னல் வழியாக வெளியே கவிழ்த்தாள். கை கழுவி, பாத்திரங்களை சப்தத்துடன் அடுக்கினாள்.

"ஆமாம்... அழகா இல்லாமதான் வாரத்துக்கு நாலு லவ் லெட்டர் வருது" நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளி, சந்தர் கூப்பிடக்கூப்பிட கேட்காமல் செருப்புத் தேய வெளியே நடந்து போனாள். மூன்றரை மணிக்கு மீண்டும் பிரபாகர் வசுமதியைக் கூப்பிட்டு தான் கிளம்புவதாகச் சொன்ன போதும் அவள் கோபம் தணிந்திருக்க வில்லை. "எங்கேயோ போய்த் தொலை, ஏன் என்கிட்ட சொல்றே?" என்று சீறினாள்.

லேசான மனப்பாரத்துடன் கிளம்பி, திருப்தியில்லாத மனத்துடனே ஊட்டிக்குப் புறப்பட்டுப் போனான். மறுநாள் பெரியப்பா மகன் கோபால் கல்யாணத்திலும் உற்சாகமில்லாமலே இருந்தான். நண்பர்கள் "என்னப்பா அண்ணன் கல்யாணம் முடிஞ்சது, அடுத்தது நம்மளதுதானே? என்று கிண்டலடித்த போது கூட ஒப்புக்காக சிரித்து வைத்தான். மாலையில் மணமக்களுடனேயே கிளம்பலாம் என்றிருந்த போது, சின்ன மாமா வந்து கார் சாவியை அவன் கையில் கொடுத்தார். பிரபு.... லலிதாவோட சிநேகிதிக்கு கோயமுத்தூர்ல நாளைக்குக் கல்யாணமாமா. இன்னிக்கே அங்கே இருக்கணும்ங்கறா. காலையில் முகூர்த்தம் முடிஞ்சதில் இருந்து போகலாம் போகலாம்னு நச்சிகிட்டு இருக்கா. என்னால உடனே கிளம்ப முடியாது. பொண்ணு, மாப்பிள்ளையை சாயந்திரம் கோயிலுக்குக் கூட்டிக்கிட்டுப் போயிட்டு வந்துட்டுதான் கிளம்ப முடியும். தலைக்கு மேலே வேலை கிடக்கு. காரை கொடுக்கச் சொல்லி பிடிவாதம் பிடிக்கறா. அவ டிரைவிங் இந்த ரூட்டுக்கு ஒத்துவராது. கொஞ்சம் முன்னாடியே கிளம்பி, நீயே அவளைக் கொண்டு போய் விட்டுடு" என்ற போது திடும் என்று மனதில் உற்சாகம் பொங்கியது.

காரணம் லலிதா இன்னும் நான்கு மாதங்களில் அவனுக்கு மனைவியாகப் போகிறவள். சொந்த மாமா பெண் என்பதால் லலிதா அவனுக்குப் புதியவளல்ல. இருந்தாலும் கல்யாணத் தேதி நிச்சயிக்கப்பட்ட பின்பு எல்லாமே வித்தியாசமாகத் தோன்றியது. லலிதாவுடன் மாலைநேர மலைவழிப் பயணம் என்பது சோர்ந்திருந்த பிரபாகருக்கு சந்தோஷமளித்தது. லலிதா தயாராகக் கையில் பெட்டியுடன் வந்து நின்றாள்.

"கிளம்பலாம் பிரபா. இப்பவே கிளம்பினாதான் போய்ச்சேர சரியாயிருக்கும். லதா தெரியுமில்லே? உயரமா, சுருட்டை முடியா... பீளமேட்டில வீடு.... நீங்ககூட ஒருதரம் என்னை அவங்க வீட்டிலே கொண்டுபோய் விட்டீங்களே எக்சாமுக்குப் படிக்க ஞாபகமிருக்கா?"

சாப்பிட்டு விட்டு கோபாலிடம் சொல்லிக் கொள்ளப் போனபோது, அவன், "பிரபு, நல்லவேளை வந்தே! இவரு மிஸ்டர் வில்லியம் கிளன்டேல், ஆபிஸ் விஷயமா பெர்லின்லேயிருந்து வந்தார். நான்தான் கல்யாணத்துக்குக் கூட்டிகிட்டு வந்தேன். ஊட்டியிலே ரெண்டுநாள் தங்கியிருக்கப் பிரியப்படறார். நீ அவரைக் கூட்டிகிட்டுப் போய் நல்ல ஹோட்டலாப் பார்த்து அரேன்ஜ் பண்ணிட்டு வந்துருடா" என்றான், ஒரு உயரமான வெளி நாட்டவரை அறிமுகப்படுத்தி.

பெரியப்பா மகன்தான் கோபால் என்றாலும் சொந்த சகோதரன் போல. மறுக்க முடியுமா? லேசாகத் தயக்கம் காட்டிய போது, அவனே "லலிதா சொன்னா. அஞ்சு மணிக்கு இங்கேயிருந்து கிளம்பினாக்கூட எட்டு மணிக்கெல்லாம் போய்ச் சேர்ந்திடலாம் என்றான் சமாதானமாக. எல்லாம் முடிந்து ஐந்தரை மணிக்குக் கிளம்பிய போது லலிதா உம்மென்றிருந்தாள். முகத்திலேயே கோபம் தெரிந்தது.

சமாதானப்படுத்த முயன்றான். "சொல்லாம கொள்ளாம நான் பாட்டுக்கு வண்டியை எடுத்துகிட்டு கிளம்பியிருக்கணும். அப்ப எல்லாம் சரியா இருந்திருக்கும்" என்றாள். அப்புறம் பேசாமலேயே வந்தாள். பிரபாகர் ஹேர்பின் வளைவுகளில் அனாயசமாகத் திருப்பிய போது மட்டும், "வேகம் வேண்டாம் பிரபா, மெதுவாகவே போங்க" என்றாள். பிரபாகர், உன்னைக் கொண்டுபோய் ராத்திரிக்குள்ள கல்யாண வீட்டில் சேர்க்க வேண்டியது என் பொறுப்பு. கவலைப்படாம இப்ப ஏதாவது பேசு பார்ப்போம்" என்றதற்கு, கவலைப்படாம எப்படி இருக்கறது? மழை வர்ற மாதிரி இருக்கு போய்ச் சேருவோமான்னு தெரியலை. இதுக்குத்தான் முன்னாடியே கிளம்பலாம்னு அடிச்சுகிட்டேன் என்றாள்.

சொன்னது போலவே மழை பிடித்துக் கொண்டது. காரை நிறுத்தி ஒரு கடையில் டீ குடித்து மழை கொஞ்சம் மட்டுப்பட்டதும் மீண்டும் இறங்கி, வந்த போது, கார் இரண்டு மூன்று சிலுப்பல்களோடு நின்று போனது. மழையில் நனைந்து கொண்டே, பானெட்டைத் திறந்து ஆராய்ந்து பார்த்தான், பிரயோசனமில்லை.

பாட்டரி கனேக்ஷன் அவுட்! சோல்டர் செய்தாக வேண்டும்.

"லலிதா...." மெல்ல அவள் தோளைத் தொட்டு "சாரி" என்றான். "நீங்க என்ன பண்ணுவீங்க?" என்றவள், அடுத்த நிமிடம் விசும்பி அழ ஆரம்பித்தாள்.

ஏமாற்றத்தில் அழுகிறாள் என்பது புரிந்தாலும், ஒன்றும் செய்ய முடியாத நிலை. கொஞ்ச நேரத்தின் பின்பு கடந்து போன ஒரு மோட்டார் பைக் வட்டமடித்துத் திரும்பி அருகில் வந்த போது, ஆச்சரியத்தில் பிரமித்துப் போனான்.

வந்தது சுப்ரமணியன். கல்லூரித் தோழன். பிரபாகர் நிலைமையைச் சொன்னான். நான் போய் ஆட்டோ கூட்டி வர்றேன். நீயும் அவங்களும் என் வீட்டுக்குப் போய் ஏதாவது சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுங்க. நான் யூனிட் போய் ஆள் அனுப்பி, வொர்க்ஷாப்பில இருந்து மெக்கானிக் கூட்டிக் கிட்டு வர ஏற்பாடு பண்றேன். அவங்க காரை ரெடி பண்ணி வீட்டுக்கு எடுத்துட்டு வரட்டும். உடனே நீங்க கிளம்பலாம். காலை கிளம்பறதானாலும் சரி..." அலுவலகத் தொலைபேசி எண், வீட்டுச் சாவி, அட்ரஸ் கொடுத்தவன், காருக்குள் குனிந்து, "மேடம், கவலைப்படாம போங்க. சீக்கிரமா கிளம்பிடலாம்" என்றான் லலிதாவிடம். லலிதா புன்னகைத்து நன்றி தெரிவித்தாள்.

ஆட்டோவில் சுப்ரமணியம் வீடு வந்து சேர்ந்து கதவைத் திறந்த போது வியந்தார்கள். அழகான, கச்சிதமான வீடு! ஒரு முன்பக்க அறை, ஒரு ஹால், இரண்டு படுக்கையறைகளுடன், சின்ன சமையலறை... எல்லாமே சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன.



பிரபாகர் இப்போது முற்றிலும் வேறு மனநிலையிலிருந்தான். திருமண வீட்டுக் களைப்பு, கார் பிரயாணம், மழை, தாமதம் எல்லாம் முற்றிலும் மறந்து போய் விட்டது.

"இந்தாங்க, முதல்ல தலையைத் துவட்டுங்க" என்ற லலிதா கொடியில் இருந்த டவலை எடுத்து அவனிடத்தில் நீட்டி னாள். அவளையே பார்த்தான் கொஞ்ச நேரம். பிறகு "நமக்கு கல்யாணம் முடிஞ்சு, தனியா வீடு பார்த்து வந்த மாதிரி இருக்கு, இல்லை?" என்றான். "இல்லை" "என்ன இன்னும் கோபமா?"

"எப்படியும் லேட்டாயிடுச்சு. இனிக் கோபப்பட்டு என்ன பண்றது?" தலையைத் துவட்டிவிட்டு டவலை அவளிடத்தில் கொடுத்தவன், வாங்க முயன்ற அவள் விரல்களைப் பற்றினான். அருகே இழுத்தான்.

"ப்ச், என்ன பிரபா இது, விடுங்க...." என்றவள் தன்னை விடுவித்துக் கொண்டாள். கொடியில் டவலை உலர்த்தியவளை நெருங்கி, மீண்டும் கைகளில் சேர்த்துக் கொண்டான்.

"எனக்குப் பசிக்குது, விடுங்க என்னை. எதாவது சாப்பிட இருக்கான்னு பார்க்கறேன்" - யதார்த்தமாய்ப் பேசி, மீண்டும் விடுதலை பெற்று சமையலறைக்குள் புகுந்தாள்.

ரொட்டித் துண்டுகள், ஜாம், சூடாக்கப்பட்ட பாலுடன் வந்தவள் பிரபாகருக்குத் தந்து தானும் உண்ணத் தொடங்கினாள்.

சாப்பாடு முடித்து அவளையே பார்த்துக் கொண்டிருந்த பிரபாகர், "லலிதா, நீ ரொம்ப அழகாயிருக்கே" என்றான் ஆங்கிலத்தில்.

"தாங்க்யூ" "கண்களைக் கட்டிப் போட்டாள், அப்படின்னு கதைகள்ல படிச்சிருக்கேன். இப்பதான் அது என்னண்ணு புரியுது." "அப்படியா?" "சரி....." சாப்பிட்டுவிட்டு காலி தம்ளர்களுடன் சமையலறையை நோக்கி நகர்ந்தவள் மீண்டும் சிறைப்பட்டாள். கன்னம், கண்கள், கூந்தல் என்று ஆராயப்பட்டாள். "இன்னிக்கு எனக்கு நீ ரொம்பப் புதுசா இருக்கே" என்றான் ரொம்பக் கிசுகிசுப்பாக அவள் காதருகே....

"எனக்கு நீங்க பழசாத்தான் இருக்கீங்க. நீங்க பண்றதுதான் ரொம்பப் புதுசா இருக்கு" என்றவள், தன் இடையைச் சுற்றியிருந்த அவன் கைவிரல்களைப் பிரித்துத் தூர விலக்கினாள். தோள்களைக் குலுக்கி அவன் வலது கரத்தினின்றும் விடுபட்டாள். ஸ்திரமாய் அவனை விட்டு நகர்ந்தாள். "ஏன் ஓடறே? என்னைப் பிடிக்கலையா?" கேள்வி அவனுக்கே அபத்தமாகப் பட்டது. உள்ளே சென்று தம்ளர்களைக் கழுவிய பிறகு, இடது பக்கப்படுக்கை யறைக்குள் புகுந்து, பிரபாகர் உணருமுன் கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

இரண்டு, மூன்று முறை கதவைத் தட்டியும் பிரயோசன மில்லை. அந்தக் கதவுகள் திறக்கப்படவில்லை. கார் சரி செய்யப்பட்டு வந்து, தொலைபேசியில் சுப்ரமணியனை அழைத்து பல முறை நன்றி தெரிவித்து, வீட்டைப் பூட்டி, சாவியை அவன் யூனிட் ஆளிடம் கொடுத்தனுப்பி விட்டு, வண்டியைக் கிளப்பி லலிதாவைக் கோவையில் கல்யாண வீட்டில் விடும் போது மணி இரவு பன்னிரண்டரை.

"தாங்க்ஸ் பிரபா... குட் நைட்.... நாளைக்கு வீட்டில இருக்க மாட்டேன். நாளன்னிக்கு சாயந்திரம் வீட்டுக்கு வாங்க. முடியலேன்னா ஃபோன் பண்ணுங்க," இயல்பாகப் பேசியவள், அவன் உள்ளங்கையை மெத்தென்று அழுத்தி விடைபெற்றாள். மறுநாள் பதினொன்றரை மணிக்கு அலுவலகம் திரும்பிய பிரபாகர், முதல் வேலையாய் வசுமதியை இன்டர்காமில் அழைத்தான். "ஹாய்" பிரபா, எப்ப வந்தே? நீ இல்லாம நேத்திக்கு ஒரே போர்" - உற்சாகத்தில் பொங்கினாள். அதுதான் வசு, குளிர்ச்சியாக இருக்கிறாள். "உடனே கான்டீனுக்கு வா, உன்கிட்ட பேசணும்."


"ஹேய், என்ன இது? ஒண்ணும் பேச மாட்டேங்கறே? இப்ப எதுக்கு இவ்வளவு அவசரமா கூப்பிட்டே? எங்கயாவது அடி, கடி வாங்கினியா?" என்றாள். "அதெல்லாம் ஒண்ணுமில்லை. உனக்கச் சேர வேண்டிய நூறு ரூபாயை உடனே கொடுத்தாதான் மனசு ஆறும் போலத் தோணிச்சு. அதான் கூப்பிட்டேன்." "ஹை, நூறு ரூபாயா? கொடு...கொடு... ஆமா எந்த பெட்டில தோத்தே? எனக்கே தெரியாம எப்ப தோத்தே? சரி எதுவா இருந்தா என்ன? முதல்ல பணத்தைக் கொடுத்திட்டு அப்புறம் பேசு... தெரியும் எனக்கு. வசுமதிக்கு இன்னிக்குப் பண வரவுன்னு" - மூச்சு விடாமல் பேசியவள் கையை நீட்டினாள்.

நீட்டப்பட்ட கையில் ஐம்பது ரூபாய்த்தாளை வைத்தான் பிரபாகர். "ஏய், என்ன இது? எதுல தோத்தேன்னும் சொல்ல மாட்டேங்கறே! இப்ப என்னடான்னா ஐம்பது ரூபாதான் தர்றே... மிச்ச ஐம்பது ரூபாயை யார்கிட்டே இருந்து கலெக்ட் பண்றதாமா? - சிணுங்கினாள்.

"பெர்னாட்ஷா கிட்டே இருந்து" பிரபாகரின் பதிலில் லேசான பெருமிதம் இருந்தது.

நன்றி - சந்திரக் கற்கள்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்க்கை வாழ்வதற்கே!!


முயற்சியை முதலீடு செய்வதால்
முன்னேற்றம் பெறலாம்
உழைப்பின் மூலம் வாழ்வில்
உயர்ச்சி பெறலாம்!

இழப்பு வரும் போதெல்லாம்
இதயம் நொந்திடாது உறுதியாய்
எதிர் நீச்சலடித்தால் வாழ்வில்
ஏற்றம் பெறலாம்!

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற
வரைபடத்தை மறவாமல்
உயர்ந்த நோக்குடன் உழைத்தால்
உண்மையில் நன்கு வாழலாம்!

விதி மேல் பழியை சுமத்தாமல்
மதிநுட்பமுடன் வாழ்க்கையை
ஆளுமையுடன் வழி நடத்தினால்
அமைதியும் ஆனந்தமும் பெறலாம்

– சேனையூரான் –



## மண்ணின் மைந்தர்கள்

– சீ.என்.துரைராசா –

அன்பொழுக பழகும் செல்வர்
ஆன்மீக வழி நடந்து இறைவன்
கோணேசர் கும்பாபிஷேகம் கண்ட
திருமலை நாடாளுமன்ற உறுப்பினர்
முத்துக்குமார சுவாமி ஆலய ஆதீன
கர்த்தா
தெருவீதியில் சேவை செய்து
திறனாய்வு கண்ட செம்மல்
அவரே இராசவரோதயர் ஐயா


## அறிவின் சுடர்

வாசிப் பென்ற வார்த்தையினை
நேசித் தாலே நலமுண்டு
பேசிப் பேசிப் பொழுதினையே
பேதை போலக் கழிக்காதே

நூல்கள் சொல்லும் படிப்பினை
நிதமும் நெஞ்சில் பயிரிடுவாய்
வாழ்வில் அதனைக் கடைப்பிடித்தே
வையகம் போற்ற வாழ்ந்திடுவாய்

நித்தம் நூல்கள் கற்பதனால்
மெத்த அறிவை சேர்த்திடுவாய்
வித்தகனாய் வாழ்ந்திடவே - நீ
விந்தைகள் பல புரிந்திடுவாய்

அறிவின் சுடரை ஏற்றிடுமே
அரிதாம் செல்வம் புத்தகமே
பெறுவாய் நல்ல அறிவினையே
பேறு பெற்றே உயர்வாயே



ச.நிபிதன், 7பீ
நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி.

## முடிவு தோல்வியே!

தாமரைத்தீவான்.. [ஈச்சந்தீவு, கிண்ணியா]

எழுத்தை எழுதுதல் இன்பமே,
இனிமைத் தமிழொன்றுள்ளதால்!
அழுத்தி ஒன்றைச் செப்புதல்
அருமைத் தமிழுக்குரியதே!

நினைக்க நினைக்க ஊறுமாம்,
நெஞ்சுள் மகிழ்ச்சி மலருமாம்!
புனையப் புனைய நீளுமாம்,
புதமை கலந்து பொலியுமாம்!

படிக்கப் படிக்கத் தொடருமாம்,
பாடம் வந்து குவியுமாம்!
வடிக்க வடிக்கத் தெளியுமாம்,
வரைய வரைய நிறையுமாம்!

எழுதினாரே- நால்வரின்
எழுத்தை மறைக்கச் செய்ததார்?
பழுது படுத்த முனைபவர்
பலர்க்கும் முடிவு தோல்வியே!

எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இதுதான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது
பாதையெல்லாம் மாறிவரும்
பயணம் முடிந்துவிடும்
மாறுவதைப் புரிந்து கொண்டால்
மயக்கம் தெளிந்துவிடும்
- கவியரசர்

## நகரத்துச் சமாச்சாரம்

அமனிய மூலதன
கழிவுக்குவியலின் மேல் எழும்பி
தொழிற்சாலையால் உரிஞ்சிக் கொள்ளப்பட்ட
மனித உழைப்பின் வாசனையை
புகையால் மாசடைந்த வானத்தில்
பரப்புகின்றது
கடவுள் உலகத்து வாசனையாக
கைத்தொழில் வர்த்தகப் பட்டுத்துணிகள்
அணிந்துகொண்ட விருந்து விழாக் கும்மாளங்கள்
நகரத்தின் ஆடம்பரங்கள்
இனிமையான கண்கட்டிவித்தைகள்
இயலாத இல்லாத நுகர்வோர்களின்
மனம் உள்ளங்களை வசியப்படுத்துகின்றன.
இறுதிக் காசையும்
மகரனின் வாய்க்குள் விடும்படி தூண்டும்
சூதாட்டங்களும் மதுபான விடுதிகளும்
கண்ணாடிப் பெட்டிகளில் உள்ள பொருட்களை
தொட்டுப் பார்க்கும்
இளம் வாழ்க்கையின் ஆதங்கங்கள்
தூசுக் காற்றுடன் அலைகின்றன.

நூல் : மறுபாதி
–நந்தன வீரசிங்ஹ–
தமிழில் : சுவாமிநாதன் விமல்

# இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்லூபால வன்னிபத்தின் உயில்:

பாகம் 06

### திருகோணமலை வன்னிபங்களும் அதன் தேசவழமைகளும்

கடந்தவார தொடர்ச்சி.. ..


ஙஉஏ0 என்று தமிழில் இலக்கமிடப்பட்ட 1893 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆந்திகதி எழுதப்பட்ட மேன்காமம் வன்னிபத்தின் உயில்.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணத்தில் கவனிக்கத்தக்கதாக பல விடையங்கள் உள்ளன.

1. புராணகாவியங்களின் அடிப்படையில் திருக்கோணேஸ்வரம் இவ்வுயில் எழுதப்பட்ட காலப்பகுதியில் தெக்ஷிணகைலாயம், திருக்கயிலம்பதி என்ற பெயர்களால் அழைக்கப்பட்டதை ஆதாரப்படுத்துகிறது.

2. திருகோணமலைப் பிராந்தியத்தில் உள்ள ஊர்களை அடையாளப்படுத்தும் பொழுது அவற்றின் முன்னால் 'திரு' என்ற அடைமொழி சேர்க்கப்படும் வழக்கம் இருந்ததை இது உறுதிப் படுத்துகிறது. அதாவது கொட்டியாரப்பற்று, தம்பலகாமம் ஆகிய இரு ஊர்களின் பெயர்களும் திரு.கொட்டியாரப்பற்று, திரு.தம்பலகாமம் என விளிக்கப்பட்டிருந்தது கவனிக்கத் தக்கது. இந்த வழமை மிக அண்மைக்காலம் வரை வழக்கிலிருந்தது குறிப்பிடத்தக்கது.

'புறோநோட்டு' என்பது சிலநூற்றாண்டுகளுக்கு முன்னால் பணக்கொடுக்கல் வாங்குதல்களின் பொழுது கடன் கொடுப்பவர் கடன்பெறுபவரிடம் இருந்து எழுதியெடுக்கும் கடன் பத்திரமாகும். இதில் ஒருவரை அடையாளப்படுத்த 'திருகோணமலைப் பிரதேசத்தினைச் சேர்ந்த தம்பலகாம்ப்பற்று ஆலங்கேணியில் வசிக்கும்' என்று விபரிப்பதற்குப் பதிலாக 'திரு.தம்.ஆலங்கேணில் வசிக்கும்' என்று எழுதும் வழக்கம் இருந்தது. இதே முறையே காணி உறுதிப் பத்திரங்களிலும் பின்பற்றப்பட்டு வந்தது.



3. மூன்றாவதும் ஆவணப்படுத்தலில் அதிமுக்கியத்துவம் கொண்டதுமான விடயம் திருகோணமலை கொட்டியாபுரப்பற்றின் மேன்காமத்தில் 1893ஆம் ஆண்டில் வசித்த இருமரபுத்துய்ய எதிர்வீரசிங்க நல்ல பூபாலவன்னிபம் இந்த நியமன உறுதியை முடித்துக்கொடுத்ததும், அவர் தம்பலகாமம் கோணநாயகர் கோயில் தொழும்பாளர்கள் மீது கொண்டிருந்த அதிகாரமுமாகும். இவற்றை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள மேற்படி உயிலின் மற்றுமொரு வாசகம் உதவுகிறது. அந்த வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

**" இந்தப்பிரகாரம் நான் பூர்வீகம் தொடக்கம் பரம்பரையாக நடந்துவந்த இந்த தேசவழக்கப்படி எனக்குள்ள சொந்த உரித்தைக் கொண்டும். மேற்கூறிய கோயில் கூட்டத்தில் எனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டும் இந்த நியமனப் பத்திர உறுதியை முடித்துக் கொடுக்கிறேன்"**

என எழுதப்பட்டுள்ளது.

இதிலுள்ள ஆரம்ப வாசகம் நம்மை மீண்டும் கோணேசர் கல்வெட்டுக் கூறும் குளக்கோட்டன் வகுத்த தேசவளமைகளை நோக்கி இழுத்துச் செல்கிறது. குளக்கோட்டு மன்னன் திருகோணமலைப் பிரதேசத்ததை நிர்வகிக்க வன்னிமைகளை நியமித்து அதிகாரங்களை வழங்கினான். இவ்வதிகாரங்கள் குடிமக்களுக்குத் தொண்டு செய்யவும், கோணேசர் ஆலய வழிபாடுகள் குறைவின்றித் தொடர்வதை நிச்சயிக்கும் வகையிலும் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

கோணேஸ்வரருக்கு தொண்டு செய்யும் தொழும்பாளர்களுக்கு உரிமை பரம்பரையாக வழங்கப்பட்டிருந்தது. தொழும்பு செய்யும் பணிக்கு ஏற்ப விளைநிலங்கள் மானியமாக வழங்கப்பட்டிருந்தன. இவர்களுக்கிடையே பிணக்குகள் ஏற்படும் பொழுது அவற்றினைத் தீர்த்து வழிபாடு தடங்கலின்றி ஒழுங்காக நடைபெறச் செய்யவேண்டியது வன்னிபத்தின் தலையாய கடமையாக இருந்தது. எனவே வன்னிபத்தின் **"நான் பூர்வீகம் தொடக்கம் பரம்பரையாக நடந்து வந்த இத்தேச வழக்கப்படி எனக்குள்ள சொந்த உருத்தைக் கொண்டு"** என்று விளிப்பது குளக்கோட்டன் வகுத்த தேசவழமைகளை ஆதாரப்படுத்துகிறது.

குளக்கோட்டு மன்னன் திருக்கோணேஸ்வர ஆலயத் திருப்பணிகள் செய்தபின் திருகோணமலை, கட்டுக்குளப்பற்று ஆகிய இரு பிரிவுகளுக்கு வன்னிபங்களை ஆட்சி அதிபர்களாக நியமித்தான் என்பதனை கோணேசர் கல்வெட்டு ஆதாரப்படுத்து கிறது. திருகோணமலைப் பிராந்தியத்தில் இருந்த சாசன வழக்காறுகளின் பொருள் மரபினை அடிப்படையாகக் கொண்டு பல ஆதாரபூர்வமான வரலாற்றுச் செய்திகளை பிரதிபலிக்கின்ற நூலாகவே கோணேசர் கல்வெட்டு அமைந்திருக்கிறது என்பதற்கு [illegible]..



இந்த உயிலில் இன்னுமொரு விடயம் வன்னிபத்தால் ஆதாரப்படுத்தப்படுகிறது **"கந்தளாய்க்குளம், மாகாமம், ஆலையடி முதலிய இடங்களில் உள்ள வேள்விகளையும், கிராமசாந்திகளையும் வழமைப்பிரகாரம் ஒழுங்காக நடப்பிக்கவும்** என்று வன்னிபத்தின் கட்டளையாக அக்கூட்டத்தில் முன்வைக்கப்படுகிறது. இங்கு குறிப்பிடப் படும் வேள்வி, கிராம சாந்தி என்பன தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயத்தின் வெளிச் சுற்று வழிபாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயிலில் இருபிரிவுகளாக அமைந்த வழிபாட்டுமுறை பண்டைய காலந்தொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. கோயிலில் இடம்பெறும் நித்தியபூசை, அபிஷேகம், திருவிழா என்பன உருவ வழிபாட்டைச் சார்ந்ததாகும். கள்ளிமேட்டு ஆலையடியில் நடைபெறும் பத்தினித்தேவி திருவிழா, மாகாமத்தில் இடம்பெறும் மூர்க்கமாதா வேள்வி, கந்தளாய்க் குளத்து மகாவேள்வி, நாயன்மார்திடல் மடை வைபவம் என்பன அருவ வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டனவாகும்.

இவ்விரண்டு வழிபாடுகளும் சீராக இடம்பெற வேறுவேறான விதிமுறைகளும், ஊழியம் புரியும் தொழும்பாளர்களும் உள்ளனர். இவற்றில் அருவவழிபாட்டுக் கிரிகைகளை மேற்கொள்ள 'கட்டாடியார்' என்றழைக்கப்படும் பூசகர்களும் உள்ளனர். அருவ உருவ வழிபாடுகள் தவறாமல் செய்யப்படின் துன்பமற்றுமக்கள் சுகமாக வாழ்வர் என்ற கோணேசர் கல்வெட்டின் கருத்தையே வன்னிபம் கூட்டத்தாரிடம் வலியுறுத்துகிறார் என்பது தெளிவாகிறது.

**"சொல்லுற்ற சீர்க் குளக்கோட்டு மன்னன் சொற்படி சொல்லெனவே"**

முன்னே குளக்கோட்டு மன்னன் கூறியபடியே கூறுவீராக என்று ஒருவர் கேட்க அதற்கிசைந்து கவிராசவரோதயரால் பாடப்பட்ட கோணேசர் கல்வெட்டில் வன்னிபம் தொடர்பாக சொல்லப்பட்டிருக்கும் பல வழமைகளை ஆதாரப்படுத்தும் பெறுமதிமிக்க (இற்றைக்குச் சுமார் 120 வருடங்களுக்கு முந்திய) ஆவணமாக இந்நியமன உயில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தொடரும் ..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரகசிய திருமணம் – த்ரிஷா



த்ரிஷா ரசிகர்கள் எல்லாம் இதை பார்த்து அதிர்ச்சியில் உள்ளனர். இவர் தற்போது அஜித், ஜெயம் ரவி படங்களில் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார். இந்நிலையில் இவர் நடிகர் ராணாவை காதலிக்கிறார் என்று கூட வதந்தி பரவி வந்தது. அப்படியிருக்க தற்போது இணையத்தளத்தில் வந்த ஒரு புகைப்படத்தினால் அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ஆனால் நன்றாக பார்த்த பின் தான் தெரிகிறது. இது ஒரு கன்னட பட படப்பிடிப்பு, த்ரிஷா அருகில் இருப்பவர் கன்னட நடிகர் புனித் என்று.

## சிம்பு – நயன் மீண்டும் குழப்பத்தில்



சிம்பு நயன்தாரா கூட்டணியில் நீண்ட நாட்களாக எடுத்துக்கொண்டு இருக்கும் படம் இது நம்ம ஆளு. இப்படத்தின் மீது பெண்கள் அமைப்பினர் சிலர் வழக்கு போடப்போவதாக கூறுகின்றன.ஏனெனில் படத்தின் தலைப்பு பெண்களை கொச்சை படுத்துவது போல் உள்ளது, ஆடு மாடு போன்றவற்றை தான் அது, இது என்று அழைப்பார்கள். அது போல் இந்த படத்தில் இது என்று ஒரு பெண்ணை குறிப்பதால், படத்தின் தலைப்பை மாற்ற வேண்டும், இல்லையெனில் ரிலிஸ் செய்ய விடமாட்டோம் என்று தெரிவித்துள்ளனர்.

## சூரி மறுப்பு – 55க்கு

கவுதம் மேனன் இயக்கிவரும் அஜீத் 55 படத்தில் ஒரு சிறு வேடத்தில் நடிக்க இயக்குனர் சூரியை அணுகியுள்ளார். ஆனால் தன்னால் நடிக்க முடியாது என்ற சூரி, ஏற்கனவே தான் விஜய் சேதுபதியிடம் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அதனால் அவர் நடிக்கவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் கவுதம் மேனன் எனக்கு கொடுத்த கேரக்டர், தல அஜீத்தை திட்டுவதாக இருந்தது. நான் மதிக்கும் ஒரு மாபெரும் நடிகரை என்னால்



திரைப்படத்தில் கூட திட்ட முடியாது. அதனால் தான் அஜீத்துடன் நடிக்க வந்த வாய்ப்பு கிடைத்தும் மறுத்து விட்டேன் என்று கூறியுள்ளார்.

## புலிப்பார்வை

வேந்தர் மூவிஸ் தயாரிப்பில் பிரவீண்காந்தி இயக்கத்தில் விரைவில் வெளி வர உள்ளது புலிப்பார்வை திரைப்படம்.



விடுதலைப்புலிகளின் இயக்கத் தலைவர் மறைந்த பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் கதையை மையமாக வைத்து இப்படம் எடுக்கப்பட்டிருப்பதாக கூறி வருகின்றனர். படத்தின் முக்கிய காட்சிகளை இலங்கைக்கே சென்று படமாக்கப்பட்டுள்ளது. புலிப்பார்வை படம் குறித்து ஊடகங்களிடம் சில தகவல்களை பகிர்ந்து கொண்டார் அப்படத்தின் இயக்குநரான பிரவீண்காந்தி.

## திருமணம் வேணாம்!!



பத்தாம் வகுப்பு படிக்கும் போதே ஹீரோயின் வே'ம் கட்ட ஆரம்பித்து இன்று முன்னணி நடிகையாக இருக்கிறார் லட்சுமி மேனன். இன்னும் பள்ளி படிப்பை கூட முடிக்காத இந்தப் பெண், தற்போதே திருமணம் பற்றி பேச ஆரம்பித்துவிட்டார்.

ஆனால் எல்லோரையும் போல நான் இதை சாதித்த பின் தான் திருமணம் செய்துக் கொள்வேன் என்று சொன்னால் பரவாயில்லை. எனக்கு திருமணமே வேண்டாம் என்று கூறியிருக்கிறார்.

# சினிமுரசு

## சினிமா குறுஞ் செய்திகள்



- **நகைச்சுவை நடிகர் சுரளி மரணம்**

  பிரபல நகைச்சுவை நடிகர் சுருளி மனோகர் மரணம். புற்று நோயால் அவதிப்பட்டு வந்த அவர், சிகிச்சை பெற்று வந்த நிலையில், திடீரென்று காலமானார்.

- **உளறிய நடிகர்**

  ஸ்டார் ஓட்டலில் படுஜோராக கொடுக்கப்பட்ட பார்ட்டி ஒன்றில் உற்சாக பானத்தின் உச்சத்தில் இருந்ததால், தனது மனைவியின் முன்னாள் காதல் குறித்து உளறியுள்ளார் பிரகாச நடிகர்.

- **சித்தார்த் – சமந்தா காதல் பிரேக் அப்.**

  தமிழ், தெலுங்கு படவுலகில் போட்டியை சமாளிக்க அதிக கவர்ச்சியை காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் சமந்தாவுக்கு ஏற்பட்டது. சித்தார்த்தின் வேண்டுகோளையும் மீறி சமந்தா கவர்ச்சி காட்டி வருவதால் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும், இதனால் காதல் பிரேக் அப் ஆனதாகவும் கூறப்படுகிறது.

- **விஜய் அரசியலுக்கு வந்தால் தான் தமிழகத்திற்கு விடிவுகாலம்!**

  இயக்குனர் மற்றும் நான் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் விஜய், "தம்பி அரசியலில் காலடி எடுத்து வைக்கவேண்டும்" என்று கூறியுள்ளார்.

- **சிம்புவிடம் இருந்து தப்பித்து வம்பில் மாட்டிக்கொண்ட ஹன்சிகா.**

  சிம்பு-ஹன்சிகா காதல் முறிவடைந்தபின்னர் சிறிது காலம் நிம்மதியாக இருந்த ஹன்சிகாவை தற்போது வேறொரு வகையில் பிரச்சனை நெருங்கியுள்ளது.

- **ஷரூ.5 கோடி கேட்டு மிரட்டிய பிரபல நடிகை**

  தனது அடுத்த படத்திற்காக சோனம் கபூருடன் பேச்சுவார்த்தை நடத்திய உதயநிதியை ரூ.5 கோடி சம்பளம் கேட்டு அதிர வைத்துள்ளார்.

- **சில்க் ஸ்மிதாவுக்கு அடுத்து அஞ்சலிதான்**

  அஞ்சலி மறைந்த நடிகை சில்க் ஸ்மிதா போல கவர்ச்சியாக உள்ளார். இவர் மட்டும் குத்தாட்ட நடிகையாக மாறினால் கோடி கோடியாய் சம்பாதிக்கலாம் என்று கூறியுள்ளார் ஒரு பிரபல இயக்குனர்.

- **செல்வராகவனை அதிர்ச்சிக்குள்ளாக்கிய தனுஷ்**

  தன் தம்பியை எப்படியாவது ஹீரோ ஆக்குவேன் என்று பிடிவாதமாக நின்று ஜெயித்த செல்வராகவனுக்கே கால்ஷீட் கொடுக்க மறுத்து அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளார் தனு'.

- **தன்னை ஒரு போதும் தனுஷுடன் ஒப்பிட வேண்டாம்.**

  தனுஷுக்கு நான் ஒரு போதும் ஈடாக மாட்டேன்.அவரின் 25 பட அனுபவம் எங்கே, நான் எங்கே. இனிமேல் என்னை அவருடன் ஒப்பிட்டு பேச வேண்டாமென சிவா கூறினார்.

- **பதிலடிக்கு கொடுக்க சிம்புவின் அதிரடி முடிவு**

  தனுஷின் வேலையில்லா பட்டதாரி திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றதால் அதற்கு பதிலடியாக ஒரு ஹிட் படத்தை உடனே கொடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் சிம்பு.

- **மீண்டும் இளையதிலகம்.**

  சிம்புதேவன் இயக்கும் படத்தில் விஜய்யுடன் சுருதிஹாசன், ஹன்சிகா நடிக்கிறார்கள். மேலும் நீண்ட நாட்களுக்குப்பிறகு தமிழ் படத்தில் ஸ்ரீதேவியும் இளைய திலகம் பிரபுவும் இணைய இருக்கிறார்.

## ரவி + த்ரிஷா



மீண்டும் ஜெயம் ரவியுடன் த்ரிஷா ஜோடி சேர்வதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஆனால் இந்த படத்தில் அவர் இரண்டு கதாநாயகிகளுள் ஒருவராக நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது

இயக்குனர் சுராஜின் அடுத்த படத்தில் ஜெயம் ரவி - அஞ்சலி ஜோடியாக நடிக்கும் புதிய படத்தில் அஞ்சலி கிராமத்து பெண்ணாகவும், த்ரிஷா நகரத்து பெண்ணாகவும் நடிக்க இருக்கும் இந்த படத்தில் த்ரிஷாவுக்கு சிறிய வேடம்தான் எனினும் கவர்ச்சி களைகட்டும் வேடமாம். இதுவரை இல்லாத அளவுக்கு கவர்ச்சியில் புகுந்து விளையாட இருப்பதாக கூறப்படுகிறது.

## மேடை ஏறும் நாய்?

தமன்னா, அடுத்து பெரிதும் எதிர்பார்க்கும் படம் என்டர்டெயின்மென்ட். மிகப்பெரும் பட்ஜெட்டில் உருவாகியுள்ள இப்படத்தில் அவருக்கு ஜோடியாக அக்ஷய் குமார் நடித்துள்ளார். கூடவே பிரகாஷ்ராஜ், சோனு சூட் போன்றவர்களும் நடித்துள்ளனர். முழுக்க முழுக்க காமெடி படமாக உருவாகியுள்ள இப்படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் ஒரு நாய் நடித்துள்ளது.





இந்நிலையில் இப்படத்தின் புரொமோஷன் தொடர்பாக அக்ஷய்-தமன்னா ஆகியோர் பங்கேற்று வருகின்றனர். சமீபகாலமாக இப்படத்தில் நடித்த நாயும் புரோமோஷன் நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறது.

## திரை விமர்சனம் – ஜிகிர்தண்டா

தொலைக்காட்சியில் வரும் நாளைய இயக்குனர் நிகழ்ச்சிக்கு குறும்படம் எடுக்கும் சித்தார்த்தின் படத்தை நீதிபதிகளாக இருக்கும் ஒருவர் ஓகே என்கிறார், இன்னொருவர் படம் குப்பை என்கிறார். எனவே அவர்களுக்குள் சண்டை வருகிறது. இந்நிலையில் சித்தார்த்தின் படத்தை ஓகே என்றவர் சித்தார்த்துக்கு ஒரு படத்தை இயக்க சான்ஸ் தருகிறேன் என்றும், ஒரு ரவுடி கதையை கொண்டு வா என்றும் கூறுகிறார்.



ரவுடி கதைக்காக நிஜ ரவுடியை சந்திக்க மதுரைக்கு செல்கிறார் சித்தார்த். அங்கு தனது நண்பன் கருணாவின் வீட்டில் தங்கி மதுரையின் பிரபல ரவுடி ஒருவரை பின் தொடர்ந்து அவரது கதையையும், பின்புலத்தையும் அறிய முயற்சி செய்கிறார். இந்நிலையில் சித்தார்த்தும், கருணாவும் ரவுடியிடம் மாட்டிக்கொள்கின்றனர். இருவரையும் போலீஸ் என நினைத்து அவர்களை என்கவுண்டரில் போட்டுத்தள்ள ரவுடி முயற்சி செய்யும்போது, இருவரும் தாங்கள் ஒரு இயக்குனர் என்றும் ஒரு புதிய படத்திற்காக ரவுடி கதைக்காத அவரை பின் தொடர்வதாகவும் கூறுகின்றனர்.

இதைக்கேட்ட அந்த ரவுடி தனக்கு அந்த படத்தில் நடிக்க வாய்ப்பு கொடுத்தால் உயிரோடு விட்டுவிடுவதாக கண்டிஷன் போட சித்தார்த்தும் ஓகே சொல்கிறார். அதன்பின்னர் நடக்கும் காமெடி கூத்துதான் படம். ஆனால் க்ளைமாக்ஸில் யாரும் எதிர்பாராத வித்தியாசமான டுவிஸ்ட்தான் படத்தை நிமிர்த்தி வைக்கின்றது.



படத்தின் முதல் நாயகன் இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ்தான். வித்தியாசமான, அதே நேரத்தில் குழப்பமில்லாத, த்ரில்லிங் திரைக்கதை. இதுமாதிரியான வித்தியாசமான திரைக்கதை தமிழ் ரசிகர்களுக்கு புதிது என்றாலும், இந்த திரைக்கதையை புரிந்துகொண்டால் அபாரமாக படத்தை ரசிக்கலாம்.

இரண்டாவது ஹிரோ ரவுடியாக வரும் பாபிசின்ஹா. சித்தார்த், மற்றும் லட்சுமி மேனன் நடிப்பு குறித்து சொல்வதற்கு எதுவும் இல்லை. அம்பிகாவின் குத்துப்பாட்டை பார்த்து தியேட்டரில் பலர் மிரண்டு போயுள்ளனர். இந்த வயதுக்கு பின்னர் அவருக்கு குத்தாட்டம் தேவைதானா?

படம் பார்ப்பவர்களுக்கு கண்டிப்பாக வித்தியாசமான அனுபவம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்பிரின் பாதுகாப்பானதா? இல்லையா?



நடுத்தர வயதுடையவர்கள், நாளொன்றுக்கு ஒரு வில்லை வீதம் 10 வருடங்களுக்கு ஆஸ்பிரின் மாத்திரையை உள்ளெடுத்து வந்தால் உயிரிழப்பை தடுக்க முடியும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆஸ்பிரின் மாத்திரை உட்கொள்வதன் மூலம் இரத்தப்போக்கு, புண்கள் ஏற்படும் என முன்னர் ஓர் ஆய்வு தெரிவித்திருந்த நிலையில் குடல், தொண்டை, வயிறு என்பவற்றில் ஏற்படும் கேன்ஸரிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் இந்த மாத்திரை, சில இருதய நோய்களிலிருந்தும் பாதுகாப்பு தரக்கூடியது எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

## Redmi Note Phable




Xiaomi நிறுவனம் கடந்த மாதம் தனது Xiaomi Mi4 எனும் புதிய கைப்பேசியினை அறிமுகம் செய்திருந்தது. இந்நிலையில் தற்போது Redmi Note Phable இனை குறைந்த விலையில் அறிமுகம் செய்துள்ளது. 162 டொலர்கள் பெறுமதியான இந்த பேப்லட் ஆனது 5.5 அங்குல அளவு, 720p HD தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் Qualcomm Snapdragon 400 1.6GHz Processor, 2GB RAM ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. இவை தவிர 4G தொழில்நுட்பம், 13 மெகாபிக்சல்கள் உடைய கமெரா, 5 மெகாபிக்சல்கள் உடைய கமெரா, 3100mAh மின்கலம் என்பனவும் தரப்பட்டுள்ளன.

இச்சாதனத்தில் 132 Mbps எனும் வேகத்தில் தரவிறக்கம் செய்யக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

## WHATSAPP

பல்வேறு குறுஞ்செய்தி சேவையை வழங்குனர்களுள் WhatsApp பிரபல்யமானதாக விளங்குகின்றது. தற்போது இச்சேவையினை அன்ரோயிட் இயங்குதளங்களைக் கொண்ட மொபைல் சாதனங்களில் பெற்றுக்கொள்வதற்காக Whats App Messenger எனும் அப்பிளிக்கேஷனின் பீட்டா பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. விசேடமாக Android Wear எனும் ஸ்மார்ட் கைக்கடிகாரத்தில் பயன்படுத்தக்கூடிய வகையில் இந்த அப்பிளிக்கேஷன் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கிடையில் தற்போது WhatsApp சேவையினை 500,000,000 பயனர்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## அதி வேக பரிமாற்றம்

உலகிலேயே அதிக வேகமாக தரவுகள் பரிமாற்றக்கூடிய தொழில்நுட்பத்தினை Technical University of Denmark(DTU) ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கி சாதனை படைத்துள்ளனர். இதன்மூலம் முன்னர் ஜேர்மனியிலுள்ள Karlsruhe Institute of Technology ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்ட 32 Tbps என்ற தரவுப் பரிமாற்ற வேகம் முறியடிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய வேகமானது 43 Tbps ஆக காணப்படுகின்றது. முற்றுமுழுதாக ஒப்டிக்கல் மீடியாவினை ஊடகமாகக் கொண்ட இந்த அதிவேக தொழில்நுட்பமானது கடந்த மாதம் கலிபோர்னியாவில் இடம்பெற்ற Conference on Lasers and Electro-Optics(CLEO) நிகழ்வில் ஆராயப்பட்டு உலக சாதனையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# விளையாட்டுப் பையன்

## 16g விமானம்



இராணுவ உளவுத்தேவைகளின் போது வீடியோ பதிவுகளை செய்யக்கூடியதும், சட்டைப்பையில் வைத்து எடுத்துச் செல்லக்கூடியதுமான சிறிய ரக விமானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அமெரிக்க இராணுவத்தினரால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ட்ரோன் வகை விமானங்கள் 16 கிராம்களே எடை உடையனவாக காணப்படுகின்றன.

மேலும் ஒன்றுடன் ஒன்று தொடர்பான 3 கமெராக்களை கொண்டுள்ள இந்த விமானங்கள் GPS வசதியினையும் உள்ளடக்கியுள்ளது. இவை தொடர்ச்சியாக 20 நிமிடங்கள் வரை பறந்து தகவல்களை சேகரித்து வழங்கக்கூடியன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்கேன் மவுஸ்

ஹொங்ஹொங்கினை தளமாகக் கொண்டு இயங்கும் Design to Innovation (DTOI) நிறுவனம் உலகின் முதலாவது வயர்லெஸ் ஸ்கானர் மவுஸினை உருவாக்கியுள்ளது. சாதாரண ஒப்டிக்கல் மவுஸ்களை போன்று வடிவமைக்கப்பட்டுள்ள இந்த Zcan மவுஸ் ஆனது புகைப்படங்கள், டெக்ஸ்ட் ஆகியவற்றினை ஸ்கான் செய்யும் வசதியை பயனர்களுக்கு வழங்குகின்றது.

அத்துடன், 2.4 GHz மீடிறனில் Wi-Fi தொழில்நுட்பத்தில் செயற்படக்கூடியதாக இருக்கும் Zcan kT]pid Windows 7, Windows 8, Mac OS X 10.6 ஆகியவற்றிலும் மூன்றாம் தலைமுறைக்குரிய iPad, இரண்டாம் தலைமுறைக்குரிய iPad Mini மற்றும் iPhone 5/5S ஆகியவற்றிலும் பயன்படுத்த முடியும். மேலும், இதன் மூலம் நுஒஉநட, றுழசன, PDF, TXT JPEG, TIFF, PNG அல்லது BMP கோப்புக்களை ஸ்கான் செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கூகுள்+ல் மாற்றம்

பிரபல சமூகவலைத்தளங்களுள் ஒன்றான Google+ ஆனது தனது சேவையான Hangouts இனை நீக்கி, அதற்காக தனியான ஒரு அப்பிளிக்கேஷனை அறிமுகம் செய்திருந்தது. தற்போது தனது தளத்திலிருந்து புகைப்படங்களை வேறு பிரிக்கவுள்ளது. இதனால் பயனர்கள் Google+ இல்லாமலேயே படங்களை கையாளக்கூடிய வசதி கிடைக்கவுள்ளது. எனினும் கூகுள் தளமானது பிக்காஷா எனும் சேவையை முன்னர் கொண்டிருந்தது.

Google+

## e Reader



Netronix நிறுவனம் 6.8 அங்குல அளவுடையதும் அன்ரோயிட் இயங்கு தளத்தில் செயற்படக் கூடியதுமான eReader ஒன்றினை அறிமுகம் செய்கின்றது. இச்சாதனத்தின் திரை 1440x1080 Pixel Resolution உடையதாகக் காணப்படுவதுடன் i.MX6 Solo Lite ARM Cortex-A9 Processor இனையும் உள்ளடக்கியுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்கள் வெளியிடப்படவில்லை.

# ஒரு கொலையின் கதை

3-2

மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

கடந்த வாரம் ......

" கொலைச் சந்தேக நபர்கள் இருவர் தொடர்பாகவும் பெரும்பாலான விடயங்கள் பூர்த்தியாகி விட்டன.... இனி தற்போது கண்டு பிடிக்கப்பட்ட மூன்றாவது சந்தேக நபரான கொலையுண்டவரின் மனைவியான ஹிம்சா தொடர்பாகவும் அவளுக்கு இக்கொலையிலுள்ள தொடர்பு என்ன என்பதையும் ஆராய வேண்டும்" ... புலனாய்வாளர்களின் அமைதி அதனை ஆமோதித்தது... அவர்கள் அதற்குக் தயாரானார்கள்.

.........................................

ஹிம்சா தொடர்பான விபரங்களைத் திரட்டுவதற்காக மூன்று குழுக்கள் உருவாக்கப்பட்டன.

முதலாவது குழு ஹிம்சாவிற்கும் கேதீஸிற்கும் இடையிலான தொடர்புகள் அவை ஆரம்பித்த விதம் தொடர்பாகவும் திருமணம் வரைக்குமான அவர்களது தொடர்புகள் எவ்வாறு இருந்தன என்பது பற்றியும் ஆராயத் தயாரானது.

இரண்டாவது குழு கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தடயங்களைக் கொண்டு ஹிம்சாவின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய முற்பட்டது.

மூன்றாவது குழு தற்போதுள்ள சந்தேக நபர்களுக்கும் ஹிம்சாவிற்கும் இடையே இருந்த தொடர்பாடல்களை ஆராயத் தீர்மானித்தது.....

அந்த விசாரணைகள் யாவும் ஒரு வாரத்தினுள் நிறைவு செய்யப்பட வேண்டும் என திகதியும் குறிக்கப்பட்டது......

.........................................

ஹிம்சாவிற்கும் கேதீசிற்கும் இடையிலான ஆரம்பக் கட்டத் தொடர்புகள் அவர்கள் இருவரும் நெருங்கிய உறவினர்கள் என்பதாலேயே உருவாகியுள்ளது. காலப்போக்கில் அவ்வுறவு காதலாக மாறியிருந்ததை முதலாவது குழுவினர் அறிந்து கொண்டனர்.

எனினும் அவர்களுக்கிடையிலான தொடர்பு மிக இறுக்கமான தொடர்பாகப் பரிணமிக்காமல் இடையிடையே சில பிரிவுகளைச் சந்தித் திருந்ததையும் அவர்கள் தெரிந்து கொண்டனர்.

ஹிம்சா பல்கலைக்கழகத்திற்குச் சென்றிருந்த காலப்பகுதியில் கேதீஸ் இலண்டனுக்குப் பயணமாயிருந்தான். அக்காலத்தில் இருவருக்குமிடையே தொடர்பாடல்கள் இருந்த போதிலும் ஹிம்சா பல்கலைக்கழகத்தில் வேறுபீட மாணவனொருவனுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்பதும் அவர்களுக்குத் தெரியவந்தது.

அத் தொடர்பைப் பற்றித் தெரிந்துகொண்ட கேதீஸ் உடனடியாக இலங்கைக்கு திரும்பி ஹிம்சாவை மணமுடிக்க அவசரப்படுத்தியதாகவும் அவர்கள் தெரிந்துகொண்டர்கள். தனது முழச் சம்மதம் இன்றியே அத் திருமயம் நடைபெற்றிருப்பதாக ஹிம்சா பலரிடம் சொல்லியிருந்த செய்தியும் புலனாய்வாளர்களுக்குக் கிடைத்தது.

ஆரம்பக்கட்ட விசாரணைகளில் முதற்குழு தனது கணிப்புக்களைச் சமர்ப்பித்தது. அச் சமர்ப்பிப்பின் படி இறுக்கமான உறவு அவர்களுக்குள் இருந்தமையைத் திருப்பதிகரமாக உறுதிப்படுத்த முடியவில்லை என்ற முடிவு காணப்பட்டது.

இரண்டாவது குழு கைப்பற்றப்பட்ட கணணியை முழுவதுமாக அலசி சில புகைப் படங்களை ஆதாரமாகப் பெற்றுக்கொண்டது..... அதன் பின்னர் அக்கணணி மூன்றாவது குழுவிடம் கையளிக்கப்பட்டது.

அம்மூன்றாவது குழு ஏற்கனவே அலிகவின் [illegible] ஒலி வடிவங்களை ஆராய்ந்திருந்தது. தற்போது ஸ்கைப் தொடர்பாடல் விடயங்களை ஆராயும் பொருட்டு அந்த மடிக் கணணியை பெற்றுக் கொண்டது.

ஸ்கைப் தொடர்பாடல் மென்பொருளின் கடவுச்சொல்லை ஏற்கனவே அலிக புலனாய்வாளர்களிடம் கொடுத்திருந்தான். அதனால் அம் மென்பொருளுக்குள் நுழைவது ஒன்றும் கடினமாக இல்லை..... அத் தொடர்பாடல்களில் இருந்து சாட்சியாகப் புதியதொரு நபர் அவர்களுக்குக் கிடைப்பார் என்பதை புலனாய்வாளர்கள் முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை.

நீண்ட உரையாடல்களின் வரிகளின் இடையே மிகக் கவனமாகப் பயணித்துக்கொண்டிருந்த புலனாய்வாளர்களின் கண்கள் ஓரிடத்தில் தரித்தன.... அந்த நாள்..... மார்ச் 22, 2012.

அந்தத் தொடர்பாடல் ஹிம்சாவிடம் இருந்து அலிகவிற்கு அனுப்பப்பட்ட பணம் தொடர்பாக இருந்தது.... இக்கொலை நடைபெறுவதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு மூன்று இலட்சம் ரூபாய் பணத்தை தான் அனுப்புவதாகவும், அதனை அலிகவின் பெயரில் மற்றொருவர் பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடு செய்யும் படியும் அங்கு உரையாடப்பட்டிருந்தது. அந்த மற்றையவர் ஒரு பெண். அப் பெண்ணின் பெயர் குமாரி என அலிக ஹிம்சாவிற்கு அனுப்பியிருந்தான்.

அடுத்தநாள் 23ம் திகதி நடைபெற்ற தொடர்பாடலில் ஹிம்சா கொழும்பிலுள்ள முகவர் ஒருவருக்கு பணத்தை அனுப்பியருந்ததை தொடர்பாடியிருந்தாள்..... அனுப்பப்பட்ட தொகை 1,750.00 பவுண்கள்... முன்னூற்று ஐம்பத்தையாயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய்....

அந்த முகவரின் பெயர் வந்திரன்.... அவரது வர்த்தக நிலையத்தின் முகவரி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது....

புலனாய்வாளர்களுக்குப் புதியதோர் சாட்சி அங்கு கிடைத்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் -13

# அனுசரித்துப் போதலும் முரண்படுதலும்

(வி.எஸ்.சந்திரகாந்தி)



எமது வாழ்வின் வெற்றி நாம் மற்றவர்களுடன் எவ்வளவு தூரம் அனுசரித்துப் போகின்றோம் என்பதிலேயே தங்கி உள்ளது. மனித இயல்பே ஒருவருடன் மற்றவர் ஒன்றிப் பழகுவதுதான். அதற்காகத்தான் மற்றவர்களை ஏற்கும் விதத்தில் எமது முகத்தில் எப்போதும் புன்னகை மலர்கின்றது.

நாம் பாதையில் நடந்து செல்லும் போது புதிதாக எம்மை எதிர்கொள்ளும் சிலர்கூட எம்மை பார்த்து புன்னகை புரிவார்கள். அதற்குக் காரணம் அவர்களில் மேலோங்கி நிற்கும் அனுசரித்து போகும் இயல்புதான்! அப்படிப்பட்டவர்கள் விரைவில் எம்முடன் நட்பு பூண்டுவிடுவார்கள். எமது பெயரையும் ஏனைய விபரங்களையும் கேட்டறிந்துவிட்டு மீண்டும் சந்திக்கும் போது நட்பு பாராட்டுவார்கள். எமக்கு உதவிகள் கூட புரிவார்கள்!

நீங்கள் அவதானித்திருப்பீர்கள்....... கடமையில் ஈடுபட்டிருக்கும் 'பொலிஸ்காரர்களில்' சிலர்கூட உங்களை பார்த்ததும் ஏற்கனவே அறிமுகமானவர்கள் போல சிரித்து தலையாட்டுவார்கள். அதற்கான உண்மையான காரணம் அவர்களது அனுசரித்துப் போகும் இயல்புதான்.

சின்னத்திரை நாடகங்களை தினம் தினம் துண்டுதுண்டாகத்தான் ஒளிபரப்புவார்கள். ஆனால் நீங்கள் தினமும் அந்தந்த நேரம் அனைத்து வேலைகளையும் ஒதுக்கிவிட்டு தொலைக்காட்சிக்கு முன் இருப்பீர்கள். அதற்கு காரணம் அந் நாடகங்களில் அனுசரித்துப்போகும் பாத்திரங்களில் உங்களுக்கு இருக்கும் அபிமானம்தான். அவர்களுக்கு ஒரு துன்பம் என்றால் உங்கள் வீட்டு பெண்கள் அழுது கூட விடுவார்கள்.....!

எமது அயலவர்களுடன் நாம் எப்போதும் அனுசரித்துப் போக வேண்டும். எமது சொந்தங்களுடன் அன்னியோன்யமாக பழக வேண்டும். அவர்களுக்கோ எமக்கோ இன்னல்கள் வரும் போது அனைவரும் ஒத்து அவற்றை வெல்ல முன்வரவேண்டும். அந் நாட்களில் கிராமங்களில் பணச்சடங்கு என்று ஒரு நிகழ்வு நடைபெறும். ஒரு குடும்பம் பணமுடை காரணமாக கஷ்டப்பட்டால், ஊரவர்கள் ஒன்று கூடி அக் குடும்பத்தலைவனை பணச்சடங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யும்படி ஆலோசனை கூறுவர். கொண்டாட்டம் மூன்று நாட்கள் நடைபெறும். ஒலி பெருக்கியில் சினிமா பாட்டுகள் கூட ஒலிக்கும் ஊரவர்கள் தமது கஷ்டங்களைக் கூட ஒரு பக்கம் ஒதுக்கி விட்டு அக்குடுப்பத்துக்கு இயன்றவரை உதவி செய்வர்.

அனுசரித்துப் போகும் இயல்பு கிராமங்களில் மிகுந்து காணப்படுவதற்கு இது ஒரு உதாரணம். அதற்கு மேலாக மக்கள் தம் கிராமத்தில் உள்ள பெட்டிக்கடையில் தான் பொருட்களை கொள்வனவு செய்வர். தமது கிராம உற்பத்திப் பொருட்களுக்கே முன் உரிமை கொடுப்பர்.....!

நிறுவனங்கள், நாடுகள், இனங்கள், மற்றும் மதங்கள் ஒன்றை மற்றையது அனுசரித்து போனால் அங்கு சமாதானம் நிலவுவதுடன் அவற்றின் பொருளாதார நிலையும் மேலோங்கும்.....!

ஆனால் இன்று நிலைமை என்ன? உலகில், அனுசரித்து போகும் இயல்பை, முரண்படுதல் என்னும் கிரகணம் கவிந்து கொள்ளும் நிலையே காணப்படுகின்றது.....!

இணையத் தளத்தை திறந்தால் முரண்படுதல் காரணமான திடுக்கிடும் செய்திகள்தான் எமது ஹிருதயத்தை ரணகளமாக்குகிறது. மதங்கள் அனைத்துமே எம்மை வழிநடத்தும் இறைவன் பற்றியே பேசுகின்றன. ஆனால் மத வன்முறைகள் எம்மை கண்ணீர் வடிக்க வைக்கின்றன. இனங்கள் அனைத்துமே இறைவனின் படைப்பேயல்லவா...? நடந்து முடிந்த இனவிரோத வன்முறைகளையும், நடந்து கொண்டிருக்கும் இன முரண்பாடுகளையும் ஒரு கணம் சிந்தித்து பாருங்கள்.

எம்மை ஈன்றெடுத்த பெண்களுக்கெதிராக முரண்படும் ஆண்களைப்பற்றி எதைத்தான் கூறுவது.... பெண்களின் மலரை நிகர்த்த மென்மையான உடலையும் உள்ளத்தையும் கிழித்துப்போடும் முரட்டு ஆண்களால் எத்தனை எத்தனை பெண்கள் அவமானத்திற்கு உட்படுத்தப்படுகின்றார்கள். எத்தனை பேர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆண்களின் முரண்படும் இயல்பால் எத்தனை ஆயிரம் 'பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள்' உருவாகிவிட்டன.

இந்த கட்டுரை எழுதபட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில் இஸ்ரேலிய சியோனிச படையினர் காஸா மீது தீவிர தாக்குதலை நடத்திக்கொண்டிருக்கின்றன. படையினரின் வெறிச்செயலால் காஸா நகரம் இருளில் மூழ்கியுள்ளதுடன் ஆயிரக்கணக்காண மக்கள் பலி கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த துயரமான நேரத்திலும் இரத்த வெறி பிடித்த இஸ்ரேலிய பெண் 'எம்.பி' ஒருவர், 'பாலஸ்தீன தாய்மார்களை கொன்று குவியுங்கள்' என பேசியுள்ளார். ஒரு பெண்ணாக இருந்து கொண்டே தாய்மார்களை கொல்லுங்கள் என்று கூறுவதற்கு எவ்வாறான முரண்பாடான மனநிலை வேண்டும்.

எனக்கு மனிதாபிமானமும் கருணை உள்ளமும் கொண்ட இஸ்லாமிய நண்பர் ஒருவர் இருக்கின்றார். அவரிடம் 'அனுசரித்து போதலும் முரண்படுதலும்' என்ற எனது எண்ணக்கரு பற்றியும், காஸா மீதான இஸ்ரேல் தாக்குதல் பற்றியும் கலந்துரையாடினேன்.

அவரது முகத்தில் தெரிந்த வேதனை ரேகைகள் என்னை கவலை கொள்ளச் செய்தன. அவர் எனக்கு சில செய்திகளை கூறினார். 'பாருங்கள் நண்பரே, பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியாகிய காஸாவில் அனைத்து பள்ளிவாசல்களும் தாக்கப்பட்ட நிலையில் ஒரு பாதிரியார் முன்வந்து முஸ்லீம் மக்கள் தொழுகைகளை தமது தேவாலயத்தில் நடத்தலாம் என கூறியுள்ளார்.

அதே போன்று அழுத்கமவில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை எதிர்த்து நாட்டின் பல்வேறு முஸ்லிம் வாழ் பிரதேசங்களிலும் நடாத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு தமிழ் இந்துக்களும் ஆதரவு வழங்கியுள்ளார்கள்.' 'நண்பரே, முஸ்லிம்கள் அனுசரித்துப்போகும் இயல்பினர் தான். ஆனால் யாருடன் அனுசரித்து போகவேண்டும் யாருடன் முரண்பட வேண்டும் என்பதை இனி மேல்தான் அவர்கள் கற்க வேண்டும்!' என்றார்.

# குறுக்கெழுத்து புதிர் 021

முடிவுத் திகதி : 15.08.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 14 | ■ | ■ | 2 | 15 டா | 16 | |
| ■ | 3 | | 17 | 4 க | | | | 18 |
| 5 | ரி | | | | | | | |
| | 6 | | 19 | ■ | | ■ | | ■ |
| | | 7 தி | | | ■ | 8 | 20 | |
| ■ | | | | ■ | 9 அ | | | று |
| 10 | 21 வ | | ■ | 22 | | 11 | | |
| ■ | 12 | | | க் | | | | ■ |
| 13 ச | | | | | | | ■ | ■ |

## இடமிருந்து வலமாக

1. வெட்டப் பயன்படும்
2. சிறிய குளம்
3. இராவண்னின் தங்கை
4. கற்களை உடைக்கப் பயன்படும்
5. அழகான பெண் - வலமிருந்து இடமாக
6. வயிற்றைப் பிரட்டினால் வரும்
7. காளையின உயர்ந்த பகுதி
8. முகச்சுளிப்பு
9. செலுத்த அல்லது பெறவேண்டியது
10. அன்பே......... எனக் சொல்வர்
11. பூக்களைத் தொடுத்து எடுப்பது
12. இலங்கையைக் கைப்பற்றிய முன்னோடி
13. இடித்து பாண், ரொட்டியுடன் தொட்டுச் சாப்பிடுவது

## மேலிருந்து கீழாக

2. குற்றத்தை நிரூபிக்கத் தேவை
4. விறகை எரித்தால் வரும்
5. தசரதனின் மனைவி
6. அரிசியில்லா நெல்
8. சுதி பிறலாத இசை
9. அதிகாரம் உள்ளவர்கள்
14. ஆஜானுபாகு விற்கு ஒத்த சொல்
15. நடிகையின் பெயர்
16. மண்டையோடு
17. சிறையில் இருப்பவர்
18. நிலவில் இருப்பது - கீழிருந்து மேலாக
19. மற்றவை மதியாத தன்மை
20. நெருப்பைத் தொட்டால் கிடைக்கும்
21. தேர் இழுக்கத் தேவை
22. பங்களாதேஸ் தலைநகரம்

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159அ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 019 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | ண் | டீ | 20 ப | ம் | 2 க | ப | ட | ம் |
| 3 த் | தை | பே | வி | 4 உ | டு | ம் | பு | ■ |
| த | ■ | 5 மு | த | லை | 24 பு | ■ | ■ | 18 கு |
| 6 வ | 21 ள் | ளி | 7 தொ | டை | ப் | ப | ம் | 19 கை |
| ரா | ளி | 8 பி | ர | 17 தி | வா | 23 தி | 16 வ | லை |
| 22 ய | 9 ப | டி | ■ | வி | ர் | ங் | த | நா |
| 10 ன் | கூ | யா | ■ | நெ | 11 டி | க | ம் | த |
| ன | ■ | ணை | 12 ச | கு | ணி | ள் | ன | ர் |
| ல் | 13 னி | தா | ரு | 14 ம | ண் | 15 ல் | யி | உ |

## பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

*செல்வி. ச. பிரசானினி*
*26 D/5, மத்தியவீதி, உவர்மலை.*

*திருமதி. க. புஸ்பவதி*
*176அ, லோவர் வீதி, திருகோணமலை.*

*[illegible]*
*90, வித்தியாலயம் வீதி, திருகோணமலை.*

# தேசிய SMS செய்திகள்

- **ஜனாதிபதி ஆணைக்குழுவின் 6வது அமர்வு**

வடக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பில் 4 நாட்களில் 230 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஆணைக்குழுவின் 6ஆவது அமர்வு 08.08.2014 அன்று மன்னாரில் ஆரம்பமாகியது. இதைத் தொடர்ந்து அடம்பன் பிரதேச செயலகத்தில் ஆரம்பமாகும் பதிவுகள் 09, 10, 11 வரை நடைபெறவுள்ளன.

- **தேசத்துரோக செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது.**

காவி உடையினை கவசமாக பயன்படுத்திக் கொண்டு ஞானசார தேரர் என்னை அவமதித்தமைக்காக 10 மில்லியன் ரூபாய் நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்வேன் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

- **தபால் கட்டணங்களில் மாற்றம்**

ஆகஸ்ட் 1ம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்படும் வகையில் அரசால் திருத்தியமைக்கப்பட்ட தபால் கட்டணங்கள் தொடர்பில் மக்களுக்கு அறியப் படுத்தும் நோக்கில் ஒரு வாரகாலம் அதனை பிற்போட்ட தாகவும் மாஅதிபர் ரோஹன அபேரத்ன குறிப்பிட்டார்.

- **இலங்கையுடனான பிரச்சினைகளுக்கு சுமூக தீர்வு காணப்படும்.**

இலங்கையுடனுள்ள உணர்வோடு தொடர்பான பிரச்சினைகளை கவனிப்பதற்கு பொருத்தமான வழி வகைகள் பயன்படுத்தப்படுமென இந்திய வெளிவிகார அமைச்சு தெரிவித்துள்ளது.

- **அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிக்கப்படலாம்**

அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அடிப்படை சம்பளமோ அல்லது கொடுப்பனவோ அதிகரிக்கலாம் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

- **பல்கலை அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள்.**

புதிய கல்வி ஆண்டிற்காக பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான வெட்டுப்புள்ளிகள் அடுத்த மாத ஆரம்பத்தில் வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

- **நாத்தாண்டியில் மாணவி தற்கொலை**

குறித்த 15 வயது மாணவியை ஆசிரியை திட்டியதால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

- **திடீர் சுற்றி வளைப்பு**

ஜனவரி முதல் ஜூன் வரை நாடளாவிய ரீதியாக நடத்தப்பட்ட சுற்றி வளைப்பின் போது 9 கோடி ரூபாய் பணத் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

- **மனிதப் புதைகுழி விசாரணை புலனாய்வுப் பிரிவிடம்**

திருக்கேதீச்சரம் மனிதப் புதைகுழிகள் இருக்கும் பகுதியில் முன்னர் கிராம மக்கள் இறந்தவர்களைப் புதைக்கும் இடுகாடு இருந்ததற்கான பதிவுகள் இருக்கவில்லை என நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருந்த மன்னார் பிரதேச சபைத்தலைவரிடம் மன்னாரில் வைத்தே வாக்குமூலம் பதிய வேண்டும் என்று நீதிமன்றம் புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

- **தரமற்ற பொருளியல் I வினாத்தாள்**

க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் பொருளியல் 01 வினாத்தாள் தரமற்றதாகவும், பிழையாகவும் இருந்தது என இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

- **தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அரசுடன் பேச்சுவார்த்தையை தொடர முடியும்**

முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நியாயமானவை எனவும் அவற்றில் 80 வீதமானவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் த.தே.கூ அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு முடியும் எனவும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் அழைப்பு விடுத்தது.

- **புதிய அரசியலமைப்பு உருவாக்குவதாக வாக்குறுதி அளிக்கவில்லை**

புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதாக ஜே.என்.பி. கட்சியின் தலைவர் விமல் வீரவன்சவிற்கு வாக்குறுதி எதனையும் அளிக்கவில்லை என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

- **36 பாகிஸ்தான் பிரஜைகள் நாடு கடத்தல்**

இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த பாகிஸ்தான் பிரஜைகள் 36 பேர் கடந்த 1ம் திகதி தொடக்கம் நாடு கடத்தப்பட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பேரவை இது குறித்து கவலை வெளியிட்டுள்ளது.

25.07.2014 அன்று வெளியான பத்திரிகையில் போடப்பட்ட பதறியடித்து ஓடிய பெண் எனும் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த பர்தா அணிந்த பெண் உண்மையிலேயே முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவரா அல்லது பர்தா அணிந்து வந்த வேறு இனத்தைச் சேர்ந்த பெண்ணா என்பதை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அப்பெண் யாரென உறுதிப்படுத்தப்பட்ட பின் மலைமுரசில் உறுதிப்படுத்திய செய்தி வெளியிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தோப்புக்கரணம்"

மூளைக்கு என்ன பயிற்சி எனக் கேட்டால், பலரும் தலையை அழுக்கி விடுவது, மனனம் செய்வது அதாவது ஒன்றையே திரும்பத்திரும்ப சொல்லுதல் என்று தான் சொல்வது வழமை. ஆனால், முன்னாளில் நமது ஆசிரியர்கள் அல்லது பெற்றோர் நமக்கு வழங்கிய தண்டனை "தோப்புக்கரணம்" தான் மூளைக்கு சிறந்த யோகாசனம்.

தோப்புக்கரணம் போடுவதால் மூளை புத்துணர்ச்சி அடைகிறதாம், யுரவளைஅ எனப்படும் மன இறுக்கம் கொண்ட குழந்தைகள் கூட இந்தத் தோப்புக்கரணத்தால் நலன் பெறுகிறார்களாம்.




யாராவது ஒரு குழந்தை அடங்காமல அடம்பிடித்தால் அல்லது கோபத்தால் கிடைப்பதை எல்லாம் எறிந்து உடைத்தால், "Go to your room and think what you did..." என்பதில்லையே. செய்த பிழைக்கேற்ப பத்து, பதினைந்து அல்லது இருபது முறை தோப்புக் கரணம் போடு! என்பதுதான் வழமை...

குழந்தைகளுக்கு மன இறுக்கம் இருந்ததோ இல்லையோ, மன இறுக்கம் இருந்தால், அது உடனேயே நிவர்த்தி செய்யப்பட்டுவிடும். அந்த நாட்களில் பாடசாலை மாணவர்கள் அவமானம் என நினைத்த தண்டனையான இந்தத் தோப்புக்கரணத்திற்கு அமெரிக்கர்கள் காப்புரிமை கூடப் பெற்றிருக்கிறார்கள்.

எழுபதுகளில் ஒரு ஜெர்மானிய மருத்துவர் இந்தியா சென்ற போது, இந்தியர் பிள்ளையாரைப் பார்த்து தோப்புக்கரணம் போடுவதைப் பார்த்து விசித்திரமாக எண்ணவில்லை.

அவர் இந்த விசித்திரமான செய்கையை ஆராய்ந்து அந்த நாட்டு மருத்துவ இதழில் இந்தத் தோப்புக் கரணம் உடலில் என்ன நன்மையைச் செய்யும் என விளக்கியிருந்தார். அதாவது, இடது காதுச் சோணையில் வலது கண் நரம்பின் முடிவிடமும், வலது காதுச் சோணையில் இடது கண் நரம்பின் முடிவிடமும் இருப்பதால் இவற்றைச் சீரான அழுத்தத்துடன் அமுக்கி விடுவதால் கண்களிரண்டும் நல்ல பயிற்சி பெறும், இதனால் பார்வைக் கோளாறுகள் வராது என கூறியுள்ளார்.



# "டாட்டூ பயன்படுத்துபவரா!! – எச்சரிக்கை"

இன்றைய இளம் தலைமுறைப் பெண்களளும் சரி ஆண்களும் சரி தலைக்கு வர்ணம் அடிக்கவும் ஹென்னா போடவும் ஆர்வம் காட்டுகின்றனர். உடலில் டாட்டு வரைந்து கொள்வதும் இன்றைய இளைஞர்களிடையே பேஷனாகி வருகிறது. ஹென்னா பயன்படுத்துவதாலோ, டாட்டு வரைவதாலோ லுக்கீமியா புற்றுநோய் தாக்கும் அபாயம் இருப்பதாக தெரிவிக்கின்றனர் மருத்துவர்கள்.


## உடலைப் பாதிக்கும் இரசாயனம்

நமது உடலில் உள்ள மரபணுவை நேரடியாக சென்று தாக்கக் கூடிய கார்சினோஜினிக் என்னும் இரசாயனம் ஹேர்டையில் கலக்கப்படுவதால் அவை தலைக்கு தடவும் போது தலைமுடிகளில் வேர் பகுதிகளின் மூலம் உடலில் ஊடுருவி ரத்தத்தில் கலந்து விடுகின்றன. கார்சினோஜினிக் நச்சுப்பொருட்கள் சிறுநீரகப் பையில் நிரந்தரமாக தங்கிவிடுவதால் இவை லிம்போமா என்னும் புற்றுநோய் ஏற்படக் காரணமாகிறது என்கின்றனர் புற்றுநோய் வல்லுநர்கள். பிற வண்ணங்களைக் காட்டிலும் கருப்புநிற சாயங்களில் புற்றுநோயை ஏற்படுத்தும் நச்சுப்பொருட்கள் அதிகம் உள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



## தடை செய்யப்பட்ட பென்சின்

இது மட்டுமல்லாது அடர்த்தியான கூந்தல் வேண்டும் என்பதற்காகவும், நிறம் கிடைக்கவேண்டும் என்பதற்காகவும் பெண்கள் செயற்கை மருதாணி எனப்படும் ஹென்னாவை பயன்படுத்துகின்றனர். இந்த ஹென்னாவில் கலக்கப்படும் பென்சின் இரசாயனம் தான் லுக்கீமியா எனப்படும் ரத்தம் மற்றும் எலும்பு மஜ்ஜை புற்றுநோய் பாதிப்பிற்கு காரணமாகிறது என்கின்றனர் மருத்துவர்கள்.



அழகுக்காக டாட்டு வரைந்து கொள்வதும் ஆபத்தானது என்கின்றனர் புற்றுநோய் மருத்துவர்கள். பென்சின் கலக்கப்பெற்ற அழகு சாதன பொருட்கள் பயன்படுத்த வளர்ந்த நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அவை எளிதில் கிடைக்கின்றன. இவை புற்றுநோய் மட்டுமல்லாது தோல் நோய்களையும் ஏற்படுத்துகின்றன.

எனவே அவசியமற்ற தருணங்களில் சாயம் தடவுவதையும் தரமற்ற செயற்கை மருதாணி பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும் என்பது மருத்துவர்கள் ஆலோசனை.

# குழந்தை வளர்ச்சி



முன்பெல்லாம் நம்முடைய வீடுகளில் குறைந்தது ஐந்து அல்லது ஆறு குழந்தைகளாவது இருக்கும். அவர்களை வளர்ப்பது குறித்து யாரும் பெரிதாக எந்தவிதமான அக்கறையும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அவர்களுக்குத் தேவையானதை அவர்களே பார்த்துக்கொள்வார்கள். அதோடு அவர்களுக்கு அடுத்த குழந்தையின் தேவைகளையும் அவர்களே பார்த்துக்கொள்வார்கள். அப்போதெல்லாம் அவர்களுக்குள் போட்டியோ பொறாமையோ அதிகம் இருக்காது. ஒவ்வொரு குழந்தையும் இன்னொரு குழந்தையின் வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளும். ஆனால் இன்றோ நம்முடைய வீடுகளில் இருப்பது ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள்தான். அவர்களை சமாளிப்பது பெரிய விஷயமாக இருக்கிறது. குழந்தையின் வளர்ச்சிக்கு என்று நம் குழந்தைகளை கம்பேர் செய்கிறோம். ஆனால் அதுவே அவர்களின் மனதை பாதிக்கும் விஷயமாக மாறிவிடுகிறது.

# தூய நட்பு

குட்டிக் கதை

ஒரு காட்டிலே காகம் ஒன்றும் மான் ஒன்றும் நல்ல நண்பர்களாக இருந்தன. இருவரும் ஒரு மரத்தடியில் பேசிவிட்டு மரத்தின் கிளையில் காகமும் அம்மரத்தடியில் மானும் உறங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தன. இவ்வாறு இருவரும் ஒருவருக்கொருவர் நல்ல நண்பர்களாக இருந்தன. அன்றைய தினம் நடந்தவற்றை இருவரும் பரிமாறிக்கொள்வது வழக்கம்.



ஒரு நாள் மான் மரத்தடிக்கு வரவில்லை. சற்று நேரம் பொறுத்திருந்து பார்த்துவிட்டு காகம் யோசித்தது. மானுக்கு என்ன நடந்ததோ என கவலையுற்றது. ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ என அஞ்சி உடனடியாக பறந்து மானைத் தேடி அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது அந்த காகம். தனது நண்பனுக்கு என்ன நேர்ந்ததோ என்ற பயம் அதனை மிக வேகமாக பறக்க வைத்தது. கடைசியில் மான் ஒரு வேடன் விரித்த வலையில் சிக்கி இருப்பதைக் கண்டது. காகத்தைக் கண்டதும் மான் விம்மி விம்மி அழத்தொடங்கியது. என்னை எப்படியாவது காப்பாற்று நண்பா எனக் கூறியது.

மான் அழுவதைக் கண்டதும் காகத்திற்கும் அழுகை வந்தது. காகம், கவலைப்படாதே நண்பா நான் உன்னை எப்படியாவது காப்பாற்றுவேன் எனக் கூறி சற்று நேரம் யோசித்தது. ஆ... ... ஒரு யோசனை, நீ நான் சொல்வதைப் போல் நடித்தால் போதும் என்றது. மானும் ஆர்வமாகக் கேட்கத் தொடங்கியது. இன்னும் சற்று நேரத்தில் வேடன் வந்து விடுவான். நீ செத்தவன் போல கிட நான் உனது கண்களை மெதுவாகக் கொத்துவேன். வேடன் நீ இறந்துவிட்டாய் என எண்ணி வலையில் இருந்து உன்னை வெளியே எடுப்பான். அவன் வலையை முழுவதுமாக கழட்டி முடிக்கும் அந்த சமயத்தில் "கா.... கா.." எனக் கரைவேன். அப்போது நீ எழுந்து வேகமாக ஓடித் தப்பித்துக் கொள் எனக் கூறி ஓர் மரக்கிளையில் சென்று உட்கார்ந்து வேடனின் வருகைக்காக காத்திருந்தது.

சற்று நேரத்தில் வேடன் வந்தான். வேடனின் வருகையை சைகை மூலம் தெரிவித்த காகம் தமது திட்டத்தை செய்யத் தொடங்கியது. வந்த வேடன் மானைப் பார்த்தான். மான் இறந்து விட்டது என எண்ணி வலையை மானிலிருந்து அகற்றினான். தகுந்த தருணம் பார்த்திருந்த காகம் கா.. கா.. எனக் கரையத் தொடங்கியதும் மான் மிக வேகமாக ஓடி உயிர் தப்பியது. வேடன் ஏமாற்றத்துடன் சென்றான்.

தன்னை பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றிய காகத்திற்கு நன்றி கூறியது மான். இருவரும் சேர்ந்தே தாம் தங்கியிருந்த மரத்திற்குச் சென்றன. காகமும் மானும் சந்தோசமாகவும் மிகுந்த பாசத்துடனும் வாழ்ந்தன.

– நல்ல நண்பர்கள் எப்போதும் துணை நிற்பர் –

## சிந்திக்க .. ..

நோய் வரும் வரை உண்பவன்
உடல் நலமாகும் வரை
உண்ணாதிருக்க வேண்டி வரும்.




## சின்ன சின்ன ஆசை

காற்றுக்கு இசை அமைத்து
வார்த்தைக்கு ராகம் கொண்டு
கவிதைக்கு தாலாட்டுப் பாட ஆசை...

குயிலுக்கு மீண்டும்
நான் பாட்டுச் சொல்லித்தர ஆசை....

சற்றுமுன் பெய்த மழைத்துளியை
சேற்று மண்ணில் கண்டிப்பிடிக்க
ஆசை...


கொளுத்தும் சூரியனை
ஒற்றை பார்வையில் குளிரவைக்க
ஆசை...

பனித்துளிகளை பாதுகாக்க ஆசை..
இரவு பகலை இடம் மாற்ற ஆசை....

வான வில்லை விலைக்கு வாங்க
ஆசை...
கார்மேகத்தை வெளுத்துவிட ஆசை...

நிலா துட்டுகளை நகமாக்க ஆசை
பொளர்ணமி நிலவை பொட்டில் இட
ஆசை.....

– தமிழரசி –



எத்தனை மிருகங்கள் உள்ளன?

# Grammar

Ex: Put one of these verbs in each sentences.
(buy, catch, cost, drink, fall, hurt, sell, spend, teach, throw, win, write)

1. How did you learn to drive? 'My father .............. me.'
2. We couldn't afford to keep our car, so we ................... it.
3. I was very thirsty. I .................. the water very quickly.
4. Paul and I played tennis yesterday. He's much better than me, so he .............easily.
5. Don .................. down the stairs this morning and ............ his leg.
6. Jim ......................... the ball to sue, who ................... it.
7. Ann .................. a lot of money yesterday. She ................. a dress which .................... $100.

Your mother asks you to arrange a nurse to look after her. Because she is a bed patient. So you write a note to your uncle to ask him to arrange. Say duty time, salary, and she should be patient and kind.

# உடல் எடை குறைக்க ஈஸி வழி

மூன்றாவது நாள்: பழங்கள், காய்கறிகள் கலந்து சாப்பிட வேண்டும். அன்றைய தினம் உருளைக்கிழங்கு, வாழைப்பழம் தவிர்க்க வேண்டும். நான்காவது நாள்: வாழைப்பழமும், பாலும் தான் சாப்பாடு. அதிகபட்சமாக 3 டம்ளர் பாலும், 8 பழங்களும் உண்ணலாம். விரும்பினால் காய்கறி சூப் ஒரு கப் சாப்பிட்டுக் கொள்ளுங்கள்.

ஐந்தாம் நாள்: சிறிதளவு அரிசி சாதம் சேர்க்கலாம். மீதி பசிக்கு பெரிய தக்காளிப் பழங்கள் 6 சாப்பிட்டுக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் பசியெடுத்தால் தண்ணீர் தான் குடிக்க வேண்டும். வழக்கத்தைவிட கூடுதலாக 4 டம்ளர் தண்ணீர் பருக வேண்டும்.

ஆறாம் நாள்: சிறிது அரிசி சாதமும், மீதிக்கு காய்கறிகளும் சாப்பிடுங்கள். காய்கறிகளை வேக வைத்தோ, பச்சையாகவோ வயிறு நிரம்ப சாப்பிடலாம். ஏழாவது நாள்: ஒரு கப் சாதம் - காய்கறிகளுடன், பழ ஜூஸ் பருகுங்கள். மற்ற நாட்களில் பழங்களை ஜூஸ் செய்து சாப்பிடக்கூடாது.

தொடரும்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான விசேட வழிகாட்டி

***பின்வரும் கவிதையை வாசித்து விடை தருக.***

சித்திரை மாதம் முழு நிலவில்
சிரிக்கும் அலைகள் கரையிடிக்கும்
தத்திடும் ஏழு கன்னியரின்
தவழும் இசையில் உயிர் துடிக்கும்

01. சித்திரை மாதம் முழு நிலவில்... என்பதன் கருத்து எதுவாக இருக்கக்கூடும்?
 1. சித்திரை மாதத்தில் இரவில் தோன்றும் நிலா
 2. சித்திரை மாத பௌர்ணமி நிலா
 3. சித்திரைப் புதுவருட தினத்து பௌர்ணமி நிலா

***பின்வரும் பந்தியை வாசித்து 2, 3, 4 ம் வினாக்களுக்கு விடையளிக்கவும்.***

காடு, மலை, மேடுகளில் கூட்டத்தாருடன் சுற்றி வருவேன். இயற்கைக் காட்சிகளை கண்குளிர கண்டு வருவேன். பசியெடுத்தால் புத்தம் புதிய இனிய கனிகளை உண்டு மகிழ்வேன். பகல்பொழுது முழுவதும் ஆனந்தமாக களிப்பேன். இரவானதும் மரப்பொந்தினுள் வந்து தங்கிவிடுவேன். எனது கடந்த கால வாழ்க்கையை எண்ணி உவகை அடைகின்றேன். என்னிடமிருந்த இன்பம், மகிழ்ச்சி என்பன ஒரு நொடியில் பறிக்கப்பட்டுவிட்டது.

02. இப்பந்தியில் யாரைப் பற்றி விபரிக்கப்படுகின்றது?
 1. அகதி 2. ஒரு பறவை 3. ஒரு விலங்கு
03. இங்கு கூறப்படுபவர் தற்போது வாழுமிடம்?
 1. மரப்பொந்து 2. கூறமுடியாது 3. அகதி முகாம்
04. இது ஒரு.................................
 1. சுயசரிதை 2. விடுகதை 3. பேட்டி
05. "விகடகவி" என்பதைச் சரியாகக் குறிக்கும் குறியீடு?
 1. கதடுதிகி 2. கதருதக 3. தகவிதர
06. பின்வரும் சொல் வரிசைகளில் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசை எது?
 1. வொலிபோல், எல்லே, கபடி, கிரிக்கற், வலைப்பந்து
 2. யானை, வௌவால், எலி, திமிங்கலம், நீர்நாய்
 3. இரும்பு, தங்கம், வெள்ளி, உலோகம், அலுமினியம்
07. வித்தை அகற்றிய பின், உணவாக சமைக்கும் காய்கறிவகை?
 1. ஈரப்பலா 2. புடோல் 3. கத்தரிக்காய்
08. குரக்கன் போன்ற வித்தின் வடிவத்தையுடைய வித்து எது?
 1. கடுகு 2. மிளகு 3. பப்பாசி
09. வித்து முளைத்தலுக்கு அவசியமில்லாத காரணி எது?
 1. வளி 2. நீர் 3. சூரியஒளி
10. நன்றாக நிழல் தரும் தாவரம் எது?
 1. அசோக் மரம் 2. ஆலமரம் 3. புங்கை மரம்
11. அடிமரத்திலும், வேரிலும் காய்க்கும் மரம் எது?
 1. நெல்லி 2. ஜம்பு 3. பலா
12. மாலா தினமும் பாடசாலைக்கு வந்து பாடங்களைப் படிப்பாள். இவள் படித்தவை அனைத்தையும் மனதில் நன்றாக பதிய வைத்திருப்பாள். இதனால் இவளுக்கு படித்தவை ஒருநாளும் மறந்து போவதில்லை. இதனை விளக்கும் உவமைத்தொடர்?
 1. குன்றின் மேல் விளக்குப் போல 2. நுனிப்புல் மேய்ந்தாற் போல
 3. சிலையில் எழுத்துப் போல
13. பரப்புப் பலகையைப் பயன்படுத்தும் தொழில் எது?
 1. உழவுத் தொழில் 2. உலோகத் தொழில் 3. நெசவுத் தொழில்
14. கீழ் உள்ள வித்துக்களில் மிக விரைவாக முளைக்கும் வித்து எது?
 1. பயறு 2. தாமரை 3. கத்தரி
15. கிளைத் துண்டுகளை நடுவதன் மூலம் புதிய கன்றை பெறத்தக்கது?
 1. பப்பாசி 2. இராசவள்ளி 3. மரவள்ளி
16. சிகிரியா ஓவியத்தில் உள்ள பெண்கள் வைத்திருக்கும் மலர்?
 1. ரோஜா 2. நீலோற்பலம் 3. ஓக்கிட்
17. உப்புத்தூள் விரைவாகக் கரைவது எதில்?
 1. வெந்நீரில் 2. தண்ணீரில் 3. குளிர்நீரில்
18. ஒரு வரிசையில் ரவிக்கு முன்னால் 9 மாணவர்கள் நின்றனர். அனைவரும் மறுபக்கம் திரும்பி நின்ற போது, ரவிக்கு முன்னால் 2 மாணவர்கள் நின்றனர் எனில், வரிசையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை?
 1. 11 2. 12 3. 13
19. ஒரு கிலோகிராம் அரிசியின் விலை ரூபா 90 எனின், ரூபா 306க்கு வாங்கக் கூடிய அரிசி எவ்வளவு?
 1. 3கிலோ 600கிராம் 2. 3கிலோ 400கிராம் 3. 3கிலோ 500கிராம்
20. வகுப்பறை ஒன்றிலுள்ள கதிரைகளின் எண்ணிக்கை 45 ஆகும். அங்குள்ள மேசைகளின் எண்ணிக்கையானது கதிரைகளின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 5 குறைவாகும். இவ்வாறு மூன்று வகுப்பறைகளில் காணப்பட்டன. எனின், அம்மூன்று வகுப்பறைகளிலும் உள்ள கதிரைகளினதும், மேசைகளினதும் எண்ணிக்கை முறையே?
 1. 135, 210 2. 120, 135 3. 135,120
21. புத்தகம் என்பதுடன் நெருங்கிய தொடர்புடைய சொற் கூட்டத்தை தெரிவு செய்க.
 1. விளையாட்டு, எழுத்து, சொற்கள்
 2. பக்கம், பறக்கும், சொற்கள்
 3. அறிவு, சொற்கள், பாடங்கள்
22. எனது அருகில் இருப்பவர் எனது அம்மா. ஆனால் நான் அவரின் மகன் அல்ல. என்றால் நான் யார்?
 1. சிறுவன் 2. மகள் 3. ஒருவர்
23. நான் கடித்தாலும் கடிபட மாட்டேன். பிடித்தாலும் பிடி பட மாட்டேன். ஆனால் கண்ணில் காண முடியும். நான் யார்?
 1. காற்று 2. தண்ணீர் 3. கல்
24. பாம்பும் கீரியும் போல என்பதன் பொருள்
 1. ஒற்றுமை 2. பொறுமை 3. மிருகம்
25. பின்வரும் பாடலை வாசித்து கீழுள்ள இரு வினாக்களுக்கு விடையளிக்குக.

பார்க்க அழகு விசிறி
பனை ஓலை விசிறி
வெப்பம் போக்கும் விசிறி
விரும்பித் தேடும் விசிறி

25. பனை ஓலை விசிறி எதனைப் போக்க உதவுகின்றது?
 1. அழகை 2. குளிரை 3. வெப்பத்தை
26. விரும்பித் தேடுவது எதனை
 1. பனை ஓலையை 2. பனை ஓலை விசிறியை
 3. அழகு விசிறியை
27. கீழ்வரும் பாடலின் சரியான ஒழுங்குவரிசையைத் தெரிவு செய்க.

அ. சொட்டுதம்மா எச்சிலும்
ஆ. துட்டுக் கெங்கே போவது
இ. ரொட்டி என்று சொன்னதும்
ஈ. மட்டில்லாத ஆசைதான்

 1. ஆ, அ, ஈ, இ 2. இ, ஈ, அ,ஆ 3. அ, இ, ஆ, ஈ
28. இரண்டு நாக்கினைக் கொண்ட பிராணி எது?
 1. உடும்பு 2. தவளை 3. முதலை
29. நீர் அருந்தாமல் வாழும் பிராணி எது?
 1. பாம்பு 2. பல்லி 3. உடும்பு
30. "பச்சைக் கம்பளம் விரித்தது போல் பசுமையாகக் காணப்பட்டது" எனும் வாக்கியத்தில் பச்சைக் கம்பளம் என்பது?
 1. உவமையணி 2. இரட்டைக்கிளவி 3. பயனிலை
31. உப்புப் பைக்கற் ஒன்றை வாங்கும் போது அவ்வுறையில் இவ்வாறான குறியீடு காணப்பட்டால், இக்குறியீடு குறிப்பது?
 1. ஈரலிப்பு உள்ள இடத்தில் வைவக்க வேண்டாம்.
 2. குழாய் நீரைச் சுத்தமாக பயன்படுத்துக.
 3. உப்பை கழுவாமல் பயன்படுத்துக.
32. "புத்திக் கூர்மையற்ற ஒருவருக்கு உயர் பதவி கிடைத்தால் அவர் இறுமாப்புக் கொள்வது" இதனைக் கூறும் பழமொழி எது?
 1. உயர, உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா.
 2. அர்ப்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.
 3. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
33. காலையிலும், நண்பகலிலும் கடிக்கும் நுளம்பின் பெயர் என்ன?
 1. கியுலக்ஸ் 2. ஈஸ்ட், ஈஜிப்டஸ் 3. அனோபிலிஸ்
34. மின்னை அளக்கும் கருவியின் பெயர் என்ன?
 1. அம்பியர்மானி 2. மின் அளப்பான் 3. மின்மானி
35. எறும்பு ஒன்று 3 நிமிடத்தில் 9மீ தூரம் செல்லும் எனின், 5 நிமிடத்தில் எத்தனை மீற்றர் தூரம் செல்லும்?
 1. 12மீ 2. 15மீ 3. 27மீ
36. பரிசுப் பொதியொன்றில் ரூபா 16.25 பெறுமதியான 15 அப்பியாசக் கொப்பிகள் வீதம் 10 பொதிகள் தயாரிக்கப்பட்டன. எனின், அப்பொதிகளின் மொத்த பெறுமதி யாது?
 1. ரூபா 243.75 2. ரூபா 2437.50 3. ரூபா 162.50
37. ஒருவர் 60கி.மீ தூரமுடைய ஓர் இடத்திற்குச் செல்வதற்கு 1 மணித்தியாலத்திற்கு 40கி.மீ எனும் வேகத்தில் செல்லக்கூடிய மோட்டார் சைக்கிளில் சென்றால், அவர் இத்தூரத்தை சென்றடைய எடுத்திருக்கக் கூடிய நேரம் எவ்வளவு?
 1. 2 மணித்தியாலங்கள் 2. 1.3 மணித்தியாலங்கள்
 3. 90 நிமிடங்கள்
38. ரூபா 164 பெறுமதியுள்ள பொருட்களை வாங்கிய தியானா ரூபா 200 இனை கொடுத்தாள். வியாபாரி அவளிடமிருந்து இன்னும் 14 ரூபாவைப் பெற்றுக்கொண்டு மிகுதிப்பணத்தைக் கொடுத்தார். அவர் கொடுத்த மிகுதிப் பணம் எத்தனை ரூபாய்?
 1. ரூபா 50 2. ரூபா 22 3. ரூபா 64
39. கிழக்கு மாகாண மக்களை டெங்கு எனும் நோய் மிகவும் வதைக்கின்றது. இங்கு நோய் என்பதன் ஒத்த பொருள் தரும் சொல் எது?
 1. துயர் 2. பிணி 3. இடர்
40. இரவு வானில் விண்மீன்கள் மிகவும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். விண்மீன் என்பதன் ஒத்த பொருள் தரும் சொல் எது?
 1. தாரகை 2. அம்புலி 3. சுக்கிரன்

# க.பொ.த சாதாரண தர: வரலாறு

<u>அறிஞர்களும் அவர்களின் கூற்றுக்களும்.</u>

நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்த காலத்திலிருந்து கட்டியெழுப்பப்படுவதால் அதனை மறந்து செயற்படுவது அத்திவாரமின்றி கட்டடம் கட்டுவதற்கு சமனாகும். – ஜவகர்லால் நேருஷ

நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவு கோலாக இறந்த காலத்தை கருதலாம் - E.H கார்

புராதனகாலம் தொடக்கம் இன்றையகாலம் வரையில் மனிதகுலத்தின் கடந்தகாலத் கற்பதுதான் வரலாறு - ஸ்ருவர்ட் பிகொட்–

ஒரு யுகத்தில் எழுதிப் பாதுகாத்து வைக்குமளவுக்கு பெறுமதி மிக்க விடயங்களை அதற் முன்னைய யுகமொன்றிலிருந்து தேடிப்பெறல் - பேர்க்ஹாட

வரலாறு என்பது தனிப்பாடமல்ல எல்லா பாடங்களின் சேர்க்கை பல அறிவுத் துறைகள் கூடி வாழும் இல்லம் - G.M திரவிலியன்

<u>கேள்வியும் பதிலும்</u>

மகாவம்சத்தின் முதல் மன்னன் - விஜயன், இறுதி மன்னன் - மகாசேனன்

பின்வரும் மூலாதாரம் வெளிப்படுத்தும் விடயங்கள்
1. மகாபோதிவம்சம் - வெள்ளரசு கிளை வரலாறு
2. தாட வம்சம் - தந்ததூதுவின் வரலாறு.

பின்வரும் சாசனங்கள் குறிப்பிடும் விடயங்களைத் தருக.
1. பனாகடுவ செப்புசாசனம் - (1ம் விஜயபாகுவின் – காணிகள் பகிர்ந்தளிப்பு)
2. வல்லிபுர பொற்சாசனம் - (வசபனின்) யாழ்ப்பாணம் ஆட்சிபரம்பல்

துட்டகைமுனுவின் 10 தளபதிகள் பற்றி மகாவம்சம் குறிப்பிடும் விடயங்களை உறுதிப்படுத்தும் கல்வெட்டுக்கள் எவை?
சிதுல்பவ்வ, சங்கபால விகாரை

ஆராமை நிர்வாகம் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள்
மிகிந்தலை, அபயகிரி சமஸ்கிருத, களுதியபொகுண

குறுநில மன்னர், பிரதேச ஆட்சியாளர் பற்றி குறிப்பிடும் கல்வெட்டுக்கள்
குசேலன்கந்த, ஹென்னன்னேகல, பம்பரகல, யடஹலென

ஐந்து அமைச்சர் பரம்பரை பற்றி குறிப்பிடும் கல்வெட்டு
கந்துறுவெவ

பின்வரும் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்தும் விடயங்களைத் தருக?
கொடவாய – துறைமுக வரி
பதுளை – வர்த்தக சந்தை நிர்வாகம்
பெரிமியன் குளம் - வர்த்தக தரம் , கைத்தொழில்
சிதுல்பவ்வ – நீதிமன்ற அபராதத்தை விகாரைக்கு செலுத்துதல்

கல்லாயுதங்களும், வானர மனிதனுடைய பற்களும் கண்டுபிடிக்கப்பட்ட இடம்
பிரதேசத்தின் வண்டல் மண் படைகளுக்கு இடையில் (பலாங்கொட)

கற்காலத்துக்குரிய தொல்பொருட்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள்
புலத்சிங்கள அல்லுன பெலிபெல்லஸ்ஸ
பாகியன்கல பெல்லன் பதி பெல்லச பட்டதொம்ப
கித்துல்கல

வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்
பாகியன்கல பட்டதொம்ப பெல்லன்பதிபெல்லச

மனித எலும்புத்துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் எவை?
நில்கல பெலிகல்கே இராவணன் எல்ல

27000 வருடங்களுக்கு முன் உப்பு பயன்பாடு இருந்தது என்பதற்கான சான்று கிடைக்கப்பெற்ற இடம்? பெலியன் குகை



ஆசிரியர் : அகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத்....

பாராளுமன்றத் தேர்தல்களில் பின்னடைவை எதிர்கொண்டால் தேவைக்கேற்ப பாராளுமன்றைத் கலைத்துவிடும் வாய்ப்பை சனாதிபதி கொண்டிருப்பதால் அதனைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த ஆளும் கட்சியால் முடியும் என்பதாலேயே பாராளுமன்றத் தேர்தல்களை முதலில் நடாத்திப் பெறுபேற்றை அறிந்துகொள்ள அரசு தீர்மானித்திருக்கலாம் என அரசியல் அவதானியொருவர் தெரிவித்தார்.

## கிழக்கின் 4|வீத....

சர்வதேசத்திற்கு தமிழ் மக்களின் அரசியல் பலம் என்ன என்பதனை பற்றுறுதி கொண்ட தமிழ்மக்கள் நிருபித்து காட்டியிருக்கின்றார்கள்.

அந்த பலத்தின் ஊடாகத்தான் இன்று வடகிழக்கு தமிழ்மக்களின் அபிலாசைகளும், அவலங்களும், மனித உரிமை மீறல்களும், வடகிழக்கிலே நடைபெறுகின்ற காணி அபகரிப்புக்களும், இராணுவ மயமாக்கங்களும் இன்று சர்வதேசத்தில் கூர்மைபெற்றுள்ளது. அதன் நிமிர்த்தமாகத்தான் சர்வதேச விசாரணை ஒன்று ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது.

வடகிழக்கு தமிழ்மக்களாகிய நாம் மாற்றுக்கட்சிகளுக்கு வாக்களித்து அமைச்சர் பதவிகளையும், முதலமைச்சர் பதவிகளையும் பெற்றிருப்பார்களேயானால் இன்று வடகிழக்கிலே எஞ்சியிருக்கும் தமிழர் தாயக நிலங்களும் வரைபடத்திலிருந்து இல்லாமல் போயிருக்கும் என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

சிலர் நினைக்கின்றார்கள் அரசியல் என்பது பாலம் கட்டுவதும், குளங்கள் திருத்துவதும், விளையாட்டு மைதானங்களை புனரமைப்பு செய்வதும், பாடசாலைகளுக்கு அடிக்கல் நாட்டுவதும், வெளிநாட்டு நிறுவனங்கள் கொடுக்கும் நிதியை வைத்துக்கொண்டு தாங்கள் இவற்றையெல்லாம் செய்வதாக தம்பட்டம் அடிப்பதுந்தான் அரசியல் என்று நினைக்கின்றார்கள்.

அபிவிருத்தி அரசியல் என்பது யாரும் செய்யக்கூடியதொன்று அபிலாசை'களுக்கான அரசியல் என்பது அரசிக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டு இருப்பவர்களால் செய்யமுடியாது. இன்று இலங்கை அரசாங்கத்திற்கும், ஜனாதிபதிக்கும் சவாலாக இருக்கும் எதிர்க்கட்சி என்றால் அது வேறெந்தக்கட்சியும் இல்லை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மாத்திரந்தான்.

இதனை தமிழ்மக்கள் சார்ந்த புத்திஜீவிகள் ஆராய்ந்து சிந்திக்க வேண்டும் என அவர் செவ்வியுள்ளார்.

## குச்சவெளி தவிசாளருக்கு...

இளைஞனான ஏ.எல். அஸ்வர் என்பவரை தவிசாளர் தாக்கியதை அடுத்து அவ்விளைஞன் சிகிச்சைகளுக்காக திருமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவ்வழக்கினையும் விசாரிப்பதற்காக நீதிமன்றத்தால் விடுக்கப்பட்டிருந்த அழைப்பாணையை உதாசீனம் செய்ததால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து கடந்த 6ம் திகதி தனது சட்டத்தரணி சகிதம் மன்றுக்கு வருகை தந்த இவரை ஒருநாள் சிறையிலிட்டிருந்தார் நீதிபதி.

7ம் திகதி நீதவான் நீதிமன்ற நீதிபதி தி.சரவணராஜாவின் முன்கொண்டு வரப்பட்ட இவ்வழக்கினை எதிர்வரும் அக்டோபர் மாதம் 15ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவு இடப்பட்டுள்ளது.

திருகோணமலையின் ஊடகவியலாளர் ஒருவரை அச்சுறுத்திய குற்றச்சாட்டு தொடர்பாக தவிசாளர் மீது காவல்துறை விசாரணை நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

## விளக்கில்லா உந்துருளி...

சுற்றிவளைப்பின்போது கைப்பற்றப்பட்ட சைக்கிள்கள் குச்சவெளி காவல் நிலைய பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன.

குச்சவெளி பகுதியில் அண்மைக்காலமாக இரவு வேளைகளில் அதிகமாக துவிச்சக்கர வண்டி விபத்துக்களே இடம்பெறுவதாக காவல்துறை சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொறுப்பிலுள்ள சைக்கிள் வண்டிகளுக்கு டைனமோ மின்விளக்குகளை உரிமையாளர்கள் பொருத்திய பின்னரே அவற்றை கொண்டுசெல்ல முடியும் என காவல்துறையினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## கொல்லன்குளம்....

நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பல நாட்களுக்கு முன்னரே செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் அவ்வாறான நடவடிக்கைகள் எவையும் இல்லாதிருந்த நிலையில் தற்போது கொல்லன் குள அபிவிருத்தி வேலைகளை பதவிஸ்ரீபுர பிரதேசச் செயலகம் கையேற்றுள்ளது.

இதற்கான காரணம் குச்சவெளி மற்றும் பதவிஸ்ரீபுர ஆகிய இரண்டு பிரதேசச் செயலாளர் பிரிவுகளுக்கும் இடையிலான எல்லை நிர்ணயம் தொடர்பான தெளிவின்மையே காரணம் எனவும் தெரிகின்றது.

கொல்லன் குளத்தின் அபிவிருத்திப் பணிகளை பதவிஸ்ரீபுர பிரதேசச் செயலகம் மேற்கொண்டாலும் அக்குளத்திலிருந்து நீரைப் பெற்றுக்கொள்ளும் வயல்கள் குச்சவெளிப் பிரதேசச் செயலகத்தின் கீழ் வருவதாத் தெரிகின்றது.

## ஐநூறு ஏக்கர்......

(நா.உ) ஆர்.எம்.அன்வர் (மா.ச.உ) அரசாங்க அதிபர், பிரதேச சபை உறுப்பினர்கள்,மாகாண காணி ஆணையாளர், பிரதேச செயலாளர், மாவட்ட பிரதிக்காவல் மா அதிபர், சிரேஸ்ட காவல்துறை அத்திட்சகர், உதவிப்பொலிஸ் அத்தியட்சகர், நிலஅளவைத்திணைக்கள அதிகாரிகள், புதை பொருள் திணைக்கள அதிகாரிகள், மதகுருமார்கள் மற்றும் ஊர்ப் பிரமுகர்கள் உட்பட குறித்த பிரதேசத்தில் வசித்து வருகின்ற சிலரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

நிலஅளவையினைத் தடுப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள இக் கலந்துரையாடலில் மக்களின் குறித்த காணிகளுக்கு எந்தவித இடையூறும் விளைவிக்கப்படமாட்டாது என்றும் அனுமதிப்பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றி பல வருடங்களாக வசித்து வருபவர்களையும் எவ்வித அச்சமுமின்றி தொடர்ந்தும் வசிக்குமாறும் மாவட்ட பிரதி அமைச்சர் தலைமையில் வாக்குறுதியளிக்கப்பட்டு பொதுமக்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டதுடன் உரிய கிராம சேவகர்களுக்கு நில அளவையாளர்களுடன் இணைந்து பொது மக்களுடைய காணிகள் இனங்காண்பதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## ரூபா 100 இன்றி...

வறிய பெற்றோர்கள் இக்கருத்தரங்கிற்கு தமது பிள்ளைகளை அனுப்பியிருந்தனர். இவ்வாறு பணம் செலுத்த முடியாத பிள்ளைகளே வெளியே நிறுத்தப்பட்டதாக அங்கிருந்த எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்த பெற்றோர் இணைந்து இந்தச் சிறுவர்களுக்காகவும் பணத்தைச் செலுத்தி அரங்கினுள் அனுப்பி வைத்தாகத் தெரிகின்றது.

இவ்விடயம் தொடர்பாக பெயரை வெளியிடவிரும்பாத கல்வித்துறைசார் அலுவலர் ஒருவர் தனது கருத்தைத் தெரிவிக்கும் போது "இலவசக் கருத்தரங்கு என்ற போர்வையில் பணம் பறிக்கும் செயற்பாடுகள் இவ்வாறு முன்னெடுக்கப்படுவது திருகோணமலையில் தொடர்வது தெரிந்ததே. எந்தவொரு இலவசக் கருத்தரங்கிலும் மாணவர்கள் ரூபா நூறு செலுத்தி கையேடுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என நிர்பந்திக்கப்படுகின்றனர். கருத்தரங்கில் சுமார் நானூறு மாணவர்கள் கலந்துகொண்டால் நாற்பதாயிரம் ரூபாய்களை நடத்துபவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். எனில் இதனை இலவசக் கருத்தரங்கு எனக் கூற முடியுமா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். அத்துடன் இவ்வாறான கருத்தரங்குகள் தொடர்பாகப் பொதுவான கொள்கையொன்றைக் கல்வித் திணைக்களம் வகுக்கவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

## அன்பே சிவம்....

40000ஆயிரம் காசோலை வழங்கும் நிகழ்வும், மாலைநேர இலவச வகுப்புக்களுக்கான கல்வி நிலையம் திறக்கும் நிகழ்வும் கடந்த வாரம் கல்முனை விவேகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன் மற்றும் சிறப்பு அதிதியாக காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் புஸ்பா பொருளாதார கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளருமான செ.இராசையா, அன்பே சிவம் அமைப்பின் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் திருநாவுக்கரசு திருநாமசிவம், திருமதி திருநாமசிங்கம் செல்வேந்திரராணி, அந்த அமைப்பின் தலைவர் அ.அருளானந்தம், அனைத்து மாவட்டங்களினதும் இணைப்பாளர் கே.குமணன் மற்றும் ஆலயத்தலைவர்கள், பாடசாலை அதிபர் வரதராஜன் ஆகியோரும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



## மனித உரிமை ஆர்வலரைக் கொச்சைப்படுத்தும் சுவரொட்டிகள் கொழும்பில்

கொழும்பு புகையிரத நிலையத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு என்ற சுவரொட்டிகள் புதன்கிழமை நள்ளிரவு முதல் காணப்படுவதுடன் நாய்க்குட்டிகளை வாங்க விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசிகள் என குறிப்பிட்டு மனித உரிமை பணியாளா நிமல்ஹா பெர்ணாண்டோவினதும் சுதந்திர ஊடக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சுனில் ஜெயசேகரவினதும் தொலைபேசி இலங்கங்களை இனந்தெரியாத நபர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நடவடிக்கை இருவரையும் அவமானப்படுத்தும் துன்புறுத்தம் நடவடிக்கையின் ஒரு பகுதி என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக நிமால்கா பெர்ணாண்டோ தெரிவித்துள்ளதாவது.

இன்று காலை கொழும்பு புகையிரத நிலையத்திலிருந்து அழைத்த ஒருவர் நாய்க்குட்டிகள் விற்பனைக்குள்ளதா என கேட்டார். நான் யாரோ தொலைபேசியில் தொல்லை கொடுக்கும் நபர் என நினைத்து நான் நாய் வியாபாரம் செய்யவில்லை என குறிப்பிட்டேன்.

அதன் பின்னர் அவர், குறிப்பிட்ட பகுதியில் நாய்க்குட்டிகள் விற்பனைக்குள்ளதாக சுவரொட்டிகள் காணப்படுவதாகவும் அதில் தான் அழைத்த தொலைபேசிகள் காணப்படுவதாகவும் தெரிவித்தார். நான் மீண்டும் அவரை தொலைபேசியில் அழைத்து அவருக்கு நாய் வேண்டுமா என கேட்டேன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அவர் தனது பெயர் இந்திரஜித் - சுற்றாடல் பொலிஸை சேர்ந்தவர் எனவும் தான் வேலைக்கு வந்ததிலிருந்து கொழும்பு புகையிரத நிலையத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு என்ற சுவரொட்டிகளை காண்பதாகவும் அவை சூழலிற்கு மாசு விளைவிப்பது என்பதால் தொலைபேசியில் அழைத்ததாகவும் குறிப்பிட்டார்.

அவர் அந்த சுவரொட்டியில் இரண்டு தொலைபேசி இலக்கங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்தார்- நான் மற்றையதை அழைத்த போது அது சுனில் ஜெயசேகரவினுடையது என அறிந்துகொண்டேன் என குறிப்பிட்டார்.

வழமையாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் கொழும்பு புகையிரத நிலையத்தை ஒட்டியுள்ள பகுதிகளிலேயே இந்த சுவரொட்டிகளை காண முடிகிறது, இது குறித்து பொலிஸ்மா அதிபரிடம் முறையிடப்போகிறேன் என அவர் தெரிவித்தார்.

சுனில் ஜெயசேகரவும் தனக்கும் இவ்வாறான தொலைபேசி அழைப்புகள் வந்ததாகவும் தெரிவித்துள்ளதுடன் இதற்கு பல காரணங்கள் இருக்கலாம்- எங்களை துன்புறுத்துவதும் அல்லது நாய் வியாபாரிகள் என வர்ணிப்பது கூட நோக்கமாக இருக்கலாம் குறிப்பிட்ட பகுதியில் பொலிஸாருக்கு தெரியாமல் சுவரொட்டிகள் ஒட்டமுடியாது, ராஜபக்ச அரசின் கீழ் சுவரொட்டிகள் ஒட்டப்படுவது உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றது என சுட்டிக்காட்டியுள்ளார்.

**நன்றி-குளோபல் தமிழ்ச் செய்திகள்**




# ஸகாத் : ஒரு சமூகக் கடமை

ஸகாத் வழங்குவோர் பெறுவோர்

ஸகாத் யாருக்கு வழங்கப்படவேண்டும் என்பதைப் பற்றி அல்-குர்ஆன் தெளிவாக எட்டு கூட்டத்தினை வகை செய்கின்றது. "ஸகாத் எனும் தானங்கள் பக்கீர்களுக்கும் மிஸ்கீன்களுக்கும் அதன் உத்தியோகத்தவர்களுக்கும் இஸ்லாத்தின் பால் இனக்கமானோருக்கும் அடிமைகளை விடுதலை செய்வதற்கும் கடன்பட்டவர்களுக்கும் அல்லாஹ்வின் பால் போராடுவதற்கும் வழிப்போக்கர்களுக்கும் உரித்தான அல்லாஹ் விதியாக்கிய கடமையாகும். அல்லாஹ் மிக அறிந்தோனும் ஞானமுடையோனுமாவான். (09:60) இவர்களுக்கு ஸகாத் கிடைக்கப் பெறும் அதே வேளை செல்வந்தர்கள் உழைக்கும் சக்தியும் ஆற்றலும் பெற்றவர்கள் இஸ்லாத்தின் எதிரிகள் ஸகாத் கொடுப்பவரின் குடும்பத்தினர் போன்றோர் இதனைப் பெறும் தகுதி இழந்தவர்களாக இனங்கானப்படுகின்றனர்.

ஸகாத் சமூகரீதியாக பல இலக்குகளைக் கொண்ட ஒரு சமூகக் கடமையாகும். ஆங்காங்கே சிலர் தனிப்பட்ட முறையில் இதனை நிறைவேற்றுவதனால் இவ்விலக்குகள் அடையப்பெறாதவாரு ஸகாத்தின் நடைமுறை யதார்த்தத்திற்கு முரணானதாகவும் அமைந்துவிடுகிறது. தொடரும் .. ..




# பாகற்காய் கூட்டு



**தேவையான பொருட்கள்**

பாகற்காய் - 250 கிராம், தக்காளிப்பழம் - 250 கிராம், வெங்காயம் - 5, பூண்டு – 10, வெந்தயம் - 2, மிளகாய் வத்தல் - 5, கறிவேப்பிலை – சிறிது, புளி - 25 கிராம், நல்லெண்ணெய் - 2 மே.க, கடுகு, சீரகம் - 1 தே.க, உப்பு - 1 தே.க, மிளாகாய்த் தூள் - 2 தே.க

**செய்முறை**

முதலில் பாகற்காயை கழுவி வட்ட வட்டமாக வெட்டவும். தக்காளியையும் கழுவி வெட்டவும். வெங்காயம் பூண்டு, மிளகாய் எல்லாவற்றை பொடியாக நறுக்கி வைக்கவும். புளியை நீரில் கரைத்து அளவாக எடுத்து வைக்கவும். அதன் பின் தாச்சியை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு, சீரகம், கறிவேப்பிலை மிளகாய் போட்டு நன்கு வதக்கவும். வதங்கி பொன் நிறமாக வரும் போது பூண்டை சிறிது தட்டி அதனுடன் சேர்த்து வெந்தயத்தையும் போட்டு நன்கு கிளறிக் கொண்டே மிளகாய்த் தூள், உப்புதூள், கரைத்த புளி இவற்றையும் சேர்த்து கறியை நன்கு கிளறி மூடி 5 நிமிடம் வேக விட்டு. வற்றியதும் நறுக்கிய தாக்காளியையும் சேர்த்து வேக விட்டு இறக்கவும்.




# வாரமொரு ஜோக்

- அருணன் -

ஒரு BA பட்டதாரிக்கு தகுதிக்கேற்ற வேலை ஏதும் கிடைக்காமையால் இறுதியாக அவர் ஒரு தனியார் மிருகக்காட்சி சாலை நிர்வாகியிடம் தனக்கு வேலை தரும்படி இறைஞ்சினார். நிர்வாகியோ அவர் படிப்புக்கேற்ற எந்த வேலையும் காலியாக இல்லை, ஆனால் எமது மிருககாட்சிசாலையிலிருந்த ஒரு மனிதகுரங்கு திடீரென இறந்துவிட்டது. புதிய குரங்கு வர சில காலம் செல்லும் அதுவரை நீங்கள் விரும்பினால் அக்குரங்கு போன்று வேடமிட்டு நடித்து வாருங்கள். குறிப்பிட்டளவு ஊதியமும் உணவும் தருகின்றோம் சம்மதமா என கேட்டனர். பட்டதாரியும் வேறு வழியின்றி இப்போதைக்கு இதாவது கிடைத்ததே என உடன் தனது சம்மதத்தை தெரிவித்தார்.

மறுநாளிலிருந்து அவர் தத்துருவமாக வேடமணிவிக்கப்பட்டு கூண்டுக்குள் விடப்பட்டார். அவரும் தனக்கு தெரிந்தவாறு குரங்கு போன்று துள்ளி குதித்து சில்மிசங்கள் செய்து நடித்து விரைவிலேயே மக்களிடம் பிரபல்யம் ஆகிவிட்டார். இவ்வாறு இவரின் கீர்த்தி பல இடங்களிலும் பரவ இவரை பார்ப்பதற்கென்றே பெரும்திரளானோர் கூடத் தொடங்கி விட்டனர்.




அன்று ஞாயிறு தினம், மிருகக்காட்சி சாலையில் கூட்டம் வழமையைவிட அதிகமாகவே காணப்பட்டது. குறிப்பாக இவரின் நிகழ்சியினை காண்பதற்கென்றே ஏராளமான பெற்றோர் தங்கள் குழந்தைகளை அழைத்து வந்திருந்தனர். நமது மனிதகுரங்காரின் நிகழ்சி ஆரம்பவாதற்கு முன் தலைமை நிர்வாகி இவரின் திறமையை பாராட்டி அன்றிலிருந்து இவரின் ஊதியம் மும்மடங்காக உயர்தப்பட்டுள்ளதாகவும் நிகழ்சியை மேலும் மெருகூட்டி திறமையுடன் நடாத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்த செய்தியும் பார்வையாளர்களின் கரகோஷங்களும் ஒன்றுசேர நமது மனிதகுரங்காருக்கு மகிழ்ச்சியில் தலைகால் புரியவில்லை. பார்வையாளர்கள் முன் சென்று உற்சாகத்துடன் சற்று உயரமாக துள்ளிப்பாயபோய் கால் சிலிப்பாகி அடுத்த கூண்டுக்குள் போய் விழுந்துவிட்டார். சுதாரித்து எழுந்தவர் அப்படியே வெலவெலத்து நின்று விட்டார். இவர் முன்மனித இறைச்சி சுவைக்கப்போகும் மகிழ்சியில் இவர்மேல் பாய்வதற்கு தயாராக நின்றது ஒரு இராட்சத சிங்கம். அவ்வளவுதான் நமது குரங்காருக்கு பயத்தில் உடம்பின் கீழ்பகுதி முழுமையாக நனைந்தே விட்டது.


BA படித்து கடைசியில் ஒரு சிங்கத்தினால் சாகப்போகிறேனே என புலம்பினார். இதைபற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளாமல் சிங்கம் இவர்மேல் பாய்ந்தேவிட்டது.

அவ்வளவுதான் நமது கதை முடிந்தது என நமது குரங்காரும் கண்களை இறுக மூடிக்கொண்டார். அருகே வந்த சிங்கம் கூறியது, அறிவு கெட்ட முண்டமே..! கத்தி மானத்தை வாங்கி விடாதே, நானும் உன்னை போல் MA படித்தும் வேலை கிடைக்காமல் இங்கு வந்து மாட்டிக்கொண்டிருக்கிறேன் .... .... !! என்றது.

# முத்தின் முத்தான குணங்கள்

அழகிய ஆபரணங்களில் முத்துக்கு முக்கிய இடமுண்டு. தங்க நகைகளைப் போலவே முத்துக்களை விரும்பி அணிபவர்கள் ஏராளம். முத்துக்களை பாதுகாக்க சில வழிகள்.

- முத்துக்கள் ஒன்றுடன் ஒன்று உரசாமல் வைக்க வேண்டும்.
- தங்க நகை அல்லது மற்ற ஆபரணங்களோடு முத்து நகைகளை வைப்பதை தவிர்க்க வேண்டும். அப்படி வைத்தால் முத்துக்களில் கீறல் விழும்.
- காற்றுப் புகாத அறைகளில் முத்து ஆபரணங்களை வைக்க வேண்டாம்.
- சென்ட், ஸ்பிரே மற்றும் வாசனைத் திரவியம், பொருட்களுடன் முத்து மாலைகளை வைக்கக்கூடாது. ஏனெனில் இரசாயனங்கள் முத்துக்களின் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்தும்.
- முத்துமாலையை அணிவதற்கு முன்பும், கழட்டிய பின்பும் பருத்தி துணியால் சுத்தம் செய்ய வேண்டும்.



- காகிதம் மற்றும் சாயம் போகும் துணியில் முத்துநகைகளை பொதிந்து வைக்கக்கூடாது. இவற்றைப் பயன்படுத்தி முத்து நகைகளை துடைக்கவும் கூடாது.
- அமிலங்கள், இரசாயனப் பொருட்களுக்கு அருகே முத்துக்களை வைக்க வேண்டாம்.
- நகைகளை கைகளால் எடுப்பதற்குப் பதில் ஹேர்பின், குச்சிகளைக் கொண்டு இழுக்கவோ, தரையில் உரசியபடி இழுப்பதையோ தவிர்க்க வேண்டும்.
- நகைப் பெட்டியில் துணிமெத்தையில் முத்துநகைகளை வைத்துப் பயன்படுத்துவதே சரியான முறை.


தொடரும் .. ..

# கொட்டியாபுரத்து சிங்கம்

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வார தொடர்ச்சி .. ..

இங்கு வரும் வணிகர்கள் மூலமே தமிழைக் கற்றுக் கொண்டேன் என்றான் மிகுந்த அடக்கத்துடன்.



**சம்பூர் சதீஸின்**

சுமார் ஆஜானுபாகுவான இறுகிய உடலமைப்பைக் கொண்டவனும் நீண்ட கைகளையும் குறுகுறுத்த விழிகளையும் கொண்ட குதிரை பராமரிப்பாளனைப் பார்த்து இந்த தொழிலை எவ்வளவு காலமாக செய்கின்றாய் என்று கேட்ட இளஞ்சிங்கனுக்கு, ஓரிரு வருடங்களாகத் தான் என்று பதிலளித்தான். உன்னைப் பார்த்தால் போர் வீரன் போல் தோன்றுகிறது என்று சொல்லிக் கொண்டு போன இளஞ்சிங்கனை இடைமறித்து நீங்கள் என்னை போர் வீரன் அது இது என்று கூறி வம்பில் மாட்டி விடாதீர்கள் என்று வினயமாகக் கேட்டுக் கொண்டான்.

அத்தோடு "நீங்கள் கொட்டியாபுரத்திலிருந்தா வருகிறீர்கள்" என்று கேட்டான். "ஆம்" என்ற இளஞ்சிங்கன் "அதெப்படி உனக்குத் தெரியும்?" என்றான். "நீங்கள் கதைத்ததைக் கேட்டேன்" என்றான். உமக்கு பாம்புக் காதுதான் போல என்று கிண்டலடித்த இளஞ்சிங்கன் உமது பெயர் என்னவென்று வினவியதற்கு, தனது பெயர் "சிங்கன்" என்றான் குதிரை காவலன். பின்னர் அவனிடமிருந்து கண்டிக்குச் செல்லும் வழியைக் கேட்டுக் கொண்ட இளஞ்சிங்கன் அவனிடம் "உன்னை பிரிந்து செல்ல என் மனம் ஏனோ மறுக்கிறது. வரும் போது உன்னை கட்டாயம் சந்திப்பேன்" என்றான். நல்லது என்ற குதிரைக்காவலன் கொட்டியாரத் துறையில் வணிகம் சிறப்பாக நடைபெறுகிறதா என வினவினான். சிறிது நேரம் ஆச்சரியத்திலாழ்ந்தான் இளஞ்சிங்கன். சாதாரண குதிரைக் காவலனுக்கு நாட்டு நடப்புகள் யாவும் தெரிகிறதே அத்தோடு இவனைப் பார்த்தால் நிச்சயம் ஒரு குதிரைக் காவலன் போலத் தோன்றவில்லை. எச்சரிக்கையாகப் பேச வேண்டும் என்று மனதில் நினைத்தான். என்ன வணிகரே யோசனை? நான் சாதாரணமாகத் தான் கேட்டேன். சில காலங்களுக்கு முன் கொட்டியாரத்துறைக்கு வணிகரொருவருடன் வந்தேன். என்ன அழகான இடம், அன்பான மக்கள், அற்புதமான பிரதேசம், கப்பல்களுக்கு பாதுகாப்பான துறை என்று விவரித்த குதிரைக் காவலன் அதுமட்டுமல்ல அங்குள்ள இளவரசனைப் பற்றி அங்குள்ளவர்கள் பெருமையாகப் பேசினார்கள். விற்படை, வாட்படை, குதிரையேற்றம், யானை யேற்றம் அத்தனையும் இளவயதிலேயே கற்று முடித்து விட்டாராம். பாடல்கள் இயற்றுவதிலும் பாடுவதிலும் வல்லவராம் என்று கூறினார்கள். அது உண்மை தானா என வினாவினான்.

சற்றே சுதாகரித்துக் கொண்ட இளஞ்சிங்கன் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று தானும் அவ்வாறே கேள்விப்பட்டதாகக் கூறி மழுப்பினான். சரி நாழிகையாகிறது நாங்கள் உறங்கிவிட்டு நேரகாலத்தோடு பயணமாக வேண்டும் என்று கூறிய இளஞ்சிங்கனைப் பார்த்து நாம் மீண்டும் சந்திப்போம் என்று கூறி அவ்விடத்தை விட்டகன்றான். அன்றிரவு இளஞ்சிங்கனுக்கு அவனுடைய உரையாடல்கள் வித்தியாசமானவையாகத் தோன்றின.

அதிகாலையில் தங்களது புரவிகளை அவிழ்த்துக் கொண்டு புறப்பட்ட இருவரும் மலையத்தின் இயற்கை எழில் கொஞ்சும் அழகையும், தண்மையின் உணர்ச்சிகளையும் உணர்ந்தும் இரசித்தும் கொண்டும் சென்றனர். கங்காதேவி யானவள் கடலோடு சங்கமிக்கும் இடத்தில் இருந்து வருகின்ற நாங்கள் அக்கங்கைத் தாயின் பிறப்பிடத்திற்கு வருவதையிட்டு பெருமையாயிருக்கிறது என்று சத்யன் கூறினான். ஆமாம் சத்யா



பச்சைப் பசேலலென காட்சிதரும் மலைகளின் இடையே கங்கை வளைந்து நெளிந்து வனப்புக் காட்டும் அழகை அனுபவிக்க வேண்டும் போலிருக்கிறதே என்று கூறிய இளவரசனுக்கு. தாங்கள் இவ்வாறு இங்கே அனுபவித்துக் கொண்டிருந்தால் அங்கே தாமரையின் நிலை என்ன? என்று தாமரையை நினைவுபடுத்தினான்.

இல்லை நண்பா இந்த கங்கையின் தயவினால் அல்லவா நமது கொட்டியாரம் வளம் பெறுகிறது என்றான். நீர் வீழ்ச்சியின் அழகையும் அள்ளிப் பருகியவாறு, மலைக் கணவாய்களினூடாக குதிரையில் மெதுவாகச் சென்றனர். சூரியன் நடுவுச்சியைத் தாண்டியதைக் கண்டவர்கள் கங்காதேவியின் சிற்றாறொன்றின் அருகாமையில் இறங்கி நீராடி விட்டு சத்திரத்தில் இருந்து கொண்டு வந்த உணவை உண்ணத் தொடங்கினர். அப்போது அவ்வழியில் வந்த இருவர் அச்சிற்றாறைக் கடக்கும் கட்டுமரம் வரும்வரை நாட்டு நடப்புக்களைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.



அவர்களுள் ஒருவன் செங்கடகல ஒரு போதும் இவ்வாறு இருந்ததில்லை. எங்கு பார்த்தாலும் ஆயுதம் தாங்கிய படை வீரர்களாகவே தெரிகிறது. மக்களும் எந்த நேரத்தில் பறங்கியர் இங்கு வருவார்களோ என்று பயந்த வண்ணமே இருக்கின்றனர். நேற்றைய சண்டையிலும் உயிரிழப்புகள் அதிகமாம் என்று பேசிக் கொள்கின்றனர் என்றான். மற்றவரும் அதை ஆமோதித்து விட்டு எப்படித் தான் அந்த வெள்ளைக்காரர்கள் இங்கு வந்தார் களோ? அவர்களின் முக்கியமான வேலையே கோயில்களை இடிப்பதும், மதத்தைப் பரப்புவதும் தானாம்.


... பாகம் 11 தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வி.போட்டி பாராட்டு - சசிகுமார் -

திருகோணமலை கோட்ட மட்டம், வலயம் மட்டம் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை பாராட்டும் நிகழ்வு வியாழக்கிழமை 31.07.2014 நடத்தப்பட்டது.



## வெள்ளிப்பதக்கத்துடன் இலங்கை

கிளாஸ்கோ கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பளுதூக்கலில் மாத்திரம் வெள்ளிப் பதக்கத்தை பெற்று இலங்கை 29 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

## அழகால் கவர்ந்த வீராங்கனை



அவர் விளையாடுவதற்கு பொருத்தமில்லாத கடும் அழகுடன் காட்சி அளிக்கிறாராம் என உள்ளூர் ஊடகங்கள் சில கொளுத்திப் போட தற்போது சர்வதேச கவனமும் அவர் மீது திரும்பியிருக்கிறது.

ஆசியாவின் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான சாம்பியன்ஷிப் போட்டிகள் தாய்வான் தலைநகரம் தாய்பேயில் நடைபெற்று வருகின்றன. இதில் கஜகிஸ்தான் சார்பில் வலைப்பந்தாட்ட அணியில் இடம்பிடித்துள்ள சபினாவின் விளையாட்டுத் திறனை விட அவரின் அழகை ரசிக்கவே தற்போது கூட்டம் அலை மோதுகிறதாம்.

ஏதொ அவர் ஒருவர் தான் சாம்பியன் என்பது போன்று கூட்டம் ஆவலுடன் அவரைக் காணவருகிறது என கஜகிஸ்தான் அணியின் பயிற்றுனர் நுர்லான் சடிகோவ் கூறியுள்ளார்.

## பாட்டாளிபுரம் பா.பாடசாலை விளையாட்டுப் போட்டி - உதயகாந் -

மட்டக்களப்பு மாநகர சபையின் கண்காணிப்பின் கீழ் இயங்கிவரும் மாநகர பாலர் பாடசாலைகள் நான்கினையும் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு விழா நிகழ்வானது கடந்த (31.07.2014) வியாழக்கிழமை பாட்டாளிபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் மாநகர ஆணையாளர் மா.உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற போது நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய திருமதி. பி.எஸ்.எம்.சாள்ஸ் உட்பட ஏனைய அதிதிகளை பாலர் பாடசாலை மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்று, பாண்ட் வாத்திய இசை முழங்க அழைத்து செல்வதையும், விளையாட்டு வீரர்களினால் ஒலிம்பிக் தீபம் ஏறுவதையும், சிறார்களின் உடற்பயிற்சி கண்காட்சி இடம்பெறுனையும் படங்களில் காணலாம்.



## அதிரடியாக திருப்பி அனுப்பட்ட இலங்கை

சென்னையில் 15 வயதுக்குட்பட்டவர்கள் விளையாடும் 'ஜுனியர் கிரிக்கெட்' போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கையில் இருந்து 16 பேர் கொண்ட கிரிக்கெட் குழு சென்னை சென்றிருந்தது. பாதுகாப்பு காரணங்களை கருத்தில் கொண்டு ஜுனியர் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க வந்த குழுவினர் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர். இலங்கை பாதுகாப்பு துறையின் இணையதளத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா, மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரைப் பற்றி தவறாக சித்தரித்து வெளியான செய்தியால் தமிழகம் முழுவதும் இலங்கைக்கு எதிரான எதிர்ப்பு அலை எழும்பியுள்ளதால் பங்கேற்க வந்த குழுவினரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதாக சென்னை பொலிஸ் உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நிகழ்வுகள்

### கல்லடி தூய இஞ்ஞாசியார் - திருவிழா - உதயகாந் -



மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பாதுகாவலரும், கல்லடி - டச்பார் பங்கின் பாதுகாவலருமான புனித இஞ்ஞாசியாரின் வருடாந்த திருவிழா நிகழ்வானது கடந்த 25.07.2014 வெள்ளிக்கிழமை பங்குத்தந்தை அருட்பணி ஜீவன் அடிகளார் தலைமையில் திருக்கொடியேற்றும் நிகழ்வுடன் ஆரம்பமாகிய விழாவானது கடந்த (03) ஞாயிற்றுக்கிழமை திருக்கொடியிறக்கும் நிகழ்வுடன் நிறைவுபெற்றது.

### அன்பே சிவம் ஊடாக அன்புக் கரம்

சுவிஸ் சூரிச் சிவன்கோயில் சைவத் தமிழ்ச் சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் உறவுகளுக்கான அன்புக்கரம் கொடுக்கும் திட்டத்தின் கீழ் அன்பே சிவம் அமைப்பின் ஊடாக ஸ்ரீ பாலமுருகன் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வும், பெண்களுக்கான வாழ்வாதாரத்திற்காக காசோலை வழங்கும் நிகழ்வும் மாலை நேர இலவச வகுப்புக்களுக்கான கல்வி நிலைய திறப்பு விழாவும் 07.08.2014 அன்று கல்முனை விவேகானந்தா வித்தியாலயத்தில் அறநெறி பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.




பௌர்ணமி நிகழ்வு - அமர்வு-02
"மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகி தழைப்பதும் மகுடம்"
மட்/மாநகரசபையின் அனுசரணையுடன்

மகுடம்
கலை இலக்கிய வட்டம் நடாத்தும்
"யாவரும் பேசலாம்"
பிரபல எழுத்தாளரும், விமர்சகருமான
கவிஞர் சண்முகம் சிவலிங்கம் அவர்களின்
நினைவிடை தோய்தல்
கருத்துப் பகிர்வும் கலந்துரையாடலும்

காலம் : 10.08.2014 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மாலை 4.00 மணி
இடம் : மட்/ பொதுநூலக கேட்போர் கூடம்

வரவேற்புரை
கவிஞர். வி. மைக்கல் கொலின்
(தலைவர், மகுடம் கலை இலக்கிய வட்டம்)

தலைமை
பேராசிரியர் சி. மௌனகுரு
(ஆலோசகர் - மகுடம் கலை இலக்கிய வட்டம்)

பிரதம விருந்தினர்
திரு.மா.உதயகுமார்
(மாநகர ஆணையாளர், மாநகர சபை, மட்டக்களப்பு)

கருத்துரை
பேராசிரியர் செ. யோகராசா
(ஆலோசகர் - மகுடம் கலை இலக்கிய வட்டம்)
கவிஞர் மு. சடாட்சரன்

இந்நிகழ்வில் கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின் "நினைவுவெளி" மலர் இலவசமாக வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


## சர்வதேசச் செய்திகள்

- **7 ஜலசந்திகளை நீந்தி சாதனை**

ஆடம் வாக்கர் என்ற நீச்சல் வீரர் கடினமான 7 ஜலசந்திகளை நீந்திக் கடந்த முதல் பிரிட்டி' வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். அவர் தனது இந்த சவாலை கடந்த 2008-ம் ஆண்டில் இங்கிலீ' கால்வாயைக் கடப்பதன் மூலம் தொடங்கினார்.

- **நம்பிக்கையுடன் 6 வயது சிறுவன்**



காஸா இடிபாடுகளுக்கு மத்தியில் அந்த ஆறு வயது சிறுவன் யாசன், ஸ்வீடன் பத்திரிகையாளர் சோமர்ஸ்டிராம் தங்கியிருந்த ஹொட்டலுக்கு வெளியே அவரை சந்தித்து பேசியிருக்கிறான். " நான் ஒரு பத்திரிகையாளன். இங்கு நடக்கும் செய்திகளை சேகரிக்கிறேன். பெரியவனாகி பத்திரிகையாளராக ஆவேன் என்று கூறியிருக்கிறான்.

- **பெற்றோரை கொலை செய்து துண்டு துண்டாக வெட்டிய மகன்**

சீனாவை சேர்ந்த 30 வயது நபர் ஒருவர் தனது தாய் மற்றும் தந்தையை கொலை செய்து துண்டு துண்டாக வெட்டி சமையல் செய்து அதை பிரிட்ஜில் வைத்து பாதுகாத்துள்ளான்.

- **கடத்தப்பட்ட மாணவிகள் மனித வெடி குண்டுகளாக்கப்பட்டனர்.**

நைஜீரியாவில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட மாணவிகள் மனித வெடிகுண்டுகளாய் பயன்படுத்தப்படுவதாக அதிர்ச்சி தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

- **முதல் பிரசவம்**

பல துணிகர சாதனை முயற்சிகளையும் முன்னெடுத்தவரான சேர் ரிச்சர்ட் இவ்வருட இறுதியில் உலகின் முதலாவது வணிக ரீதியிலான விண்வெளி சுற்றுலாவை வேர்ஜின் குழுமத்தின் சார்பாக ஏற்பாடு செய்துள்ளார். இவருடைய மகள் ஹோலியும் இப்பயணத்தில் பங்கேற்கவுள்ளதால் கர்ப்பவதியான இவர் விண்வெளியில் பிரசவிப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. எனின், விண்வெளியில் பிரசவித்த முதல் பெண்மணி என்ற பெயரை மகளும், முதல் விண்வெளிக் குழந்தைகள் எனும் பெயரை இவரின் பேரக் குழந்தைகளும் பெறும்.

- **உ வயது குழந்தையை கொலை செய்தவருக்கு மரண தண்டனை**



கள்ளக்காதலனுக்கு பிறந்ததாக சந்தேகப்பட்டு இரண்டு வயது குழந்தையை சித்திரவதை செய்து கொலை செய்த தந்தைக்கு தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனை வழங்கியுள்ளது சவுதி அரேபிய அரசு.

- **வாடகைத்தாய் மூலம் பிறந்த குழந்தையை வாங்க மறுத்த தம்பதிகள்.**

வாடகைத்தாய் மூலம் பெற்ற குழந்தையை ஆஸ்திரேலிய தம்பதிகள் வாங்க மறுத்ததால் தனக்கு நட்ட ஈடு தரவேண்டும் என தாய்லாந்து பெண் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

- **போர் நிறுத்தத்தை நீடிக்க தயார்**

போர் நிறுத்தம் முடிந்ததும் மீண்டும் தீவிர தாக்குதல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை தவிர்ப்பதற்காக போர் நிறுத்தத்தை நீடிக்கும்படி ஐ.நா.சபை கேட்டுக் கொண்டது. இதை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டுள்ளது.

- **டுவிட்டரில் வெளிவந்த பாராளுமன்ற பெண் செயலாளரின் நிர்வாண படம்.**

சுவிஸ் நாட்டு பாராளுமன்ற பெண் செயலாளர் தனது அலுவலகத்தில் எடுக்கப்பட்ட நிர்வாண படங்களை டுவிட்டரில் வெளியிட்டுள்ளார். சுவிஸ் நாட்டு சட்டப்படி நிர்வாண படங்களை வெளியிடுவது குற்றம் இல்லை எனினும் அரசு அலுவலகத்தில் நிர்வாணப்படம் எடுத்தது குறித்து கடும் கண்டனங்கள் எழுந்துள்ளது.

- **கருமுட்டைகளை சேமித்து வைக்கும் பெண்கள்**




ஜப்பான் பெண்கள் பெரும்பாலானோர் அதிக வயதான பிறகே திருமணம் செய்து கொள்கிறார்கள். இதனாலும் அவர்களுக்கு குழந்தை இல்லாமல் போகிறது. எனவே இதுபோன்ற பிரச்சினைகளில் சிக்கிக்கொள்ளாமல் இருக்க கன்னிப்பெண்களும் போட்டி போட்டு கரு முட்டைகளை சேமிக்கிறார்கள்.

- **சீனாவில் பாரிய பூகம்பம்**

சீனாவை தாக்கிய பாரிய பூகம்பம் காரணமாக 150 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 1500ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கின் 41வீத தமிழரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும் – அரியநேத்ரன்



வெறுமனே அபிவிருத்திக்காகவும், சலுகைகளுக்காகவும் வாக்களிப்பவர்களாக இருப்பார்களேயானால் எங்களது உரிமையை வென்றெடுக்க முடியாது. தமிழர்களது எதிர்காலத்தினை சிந்திக்கக் கூடியவர்களாக இருக்கக் கூடிய த.தே.கூட்டமைப்பை பலப்படுத்தினால் மாத்திரமே இழந்த இழப்புக்களுக்கெல்லாம் ஒரு தீர்வு ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கூறினார்.

தாந்தாமலை மக்களை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டவேளையிலேயே இதனை தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்.

கிழக்கு மாகாணத்தினை பொறுத்தவரையில் தமிழ் மக்களின் வீகிதாசாரம் 41 வீதமாகவே இருக்கின்றது. அந்த தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே சிந்தனையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்திருந்தால் கிழக்கு மாகாணசபை த.தே.கூட்டமைப்பினர் வசம் வந்திருக்கும் என்பதனை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆனால் மாகாணசபைதான் தமிழ் மக்களுக்கான இறுதித்தீர்வு இல்லை என்பதனை கடந்த 65 வருடகாலமாகவே தமிழ் மக்களுக்காக வேண்டி தலைமைதாங்கிய அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

ஆனால் சிலர் நினைக்கின்றார்கள் மாகாணசபை முறைதான் தமிழ் மக்களுக்கான இறுத் தீர்வு என்று, அவ்வாறு இல்லை என்பதனை முதலில் அவர்கள் புரிந்து வைத்திருத்தல் வேண்டும்.

மாகாணசபையில் த.தே.கூட்டமைப்பு போட்டியிட்டதற்குக் காரணம் வட,கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் பலத்தினை உறுதிப்படுத்தி, 13

AFTER ADVANCED LEVEL....
Join Full time Courses
@
VEAL BUSINESS COLLEGE
No.159A, Sea View Road, Trincomalee - 026 222 76 22 / 0777 555 738
aat
SRI LANKA

# ஐநூறு ஏக்கர் பூஜாபூமி

## புல்மோட்டை நிலஅளவைக்கு ஒப்புதல்



புல்மோட்டையில் பூஜாபூமிக்காக நிலத்தைக் கையகப்படுத்த அரசு எடுத்துள்ள முதல் நடவடிக்கையான நிலஅளவை நடவடிக்கை-களுக்கு தடையேற்படுத்துவதில்லை என மக்கள் பிரதிநிதிகள் முடிவெடுத்துள்ளனர்.

கடந்த 5ம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் இம் முடிவு எட்டப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேயின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் எம்.எஸ் தௌபீக்

# அன்பே சிவம் அமைப்பின் ஊடாக அம்பாறையில் உதவிகள்

எமது உறவுகள் புலம்பெயர் நாட்டிலே வாழ்ந்தாலும் இந்த நாட்டில் இருக்கும் தமிழ் மக்களை என்றும் மறந்து செயப்படவில்லை என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

அன்பே சிவம் அமைப்பின் ஊடாக ஸ்ரீ பாலமுருகன் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வும், தங்களது வாழ்வாதாரத்தினை உயர்த்தும் நோக்குடன் மிகவும் கஸ்ட நிலையில் பெண்களை தெரிவு செய்து அவர்களது வாழ்வாதாரத்தினை உயர்த்தும் நோக்குடன் 20 பேருக்கு தலா 13

# குச்சவெளி தவிசாளருக்குப் பிணை



குச்சவெளிப் பிரதேச சபைத்தலைவருக்கு பிணை வழங்கப் பட்டுள்ளது.

இப்பிணையானது காவல்துறையினை அச்சுறுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கிற்கு ரூபா. 100,000 சரீரப் பிணையையும், இளைஞனொருவரைத் தாக்கிய குற்றச்சாட்டுக்கு ரூபா 50,000 சரீரப் பிணையையும் உள்ளடக்கியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது குச்சவெளிப் பிரதேசசபையின் தவிசாளரான ஏ.முபாரக் போக்குவரத்துக் காவல் துறையினரை புல்மோட்டைப்பகுதியில் வைத்து அச்சுறுத்தியதாக காவல்துறையால் வழக்குத் தொடரப் பட்டிருந்தது. அதேவேளை புல்மோட்டையைச் சேர்ந்த 13



# குறும்படத் தயாரிப்பாளர்களுடன் கலந்துரையாடல் இன்று

திருகோணமலை மாவட்டத்தில் குறும்படத் தயாரிப்பாளர்கள் சங்கமொன்றை உருவாக்கும் நோக்குடன் குறும்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் அத்துறையுடன் தொடர்புற்ற ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு மலைமுரசு அழைத்துள்ளது.

இக்கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை 9ம் திகதி மாலை 4 மணிக்கு 159 A, கடல்முக வீதி திருகோணமலையிலுள்ள மலைமுரசின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுக்கின்றனர். தொடர்பு - 077 153 6668

# விளக்கு இல்லாத உந்துருளிகள் தடுப்பில்

திருகோணமலை குச்சவெளி காவல் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி-வளைப்பின் போது மின்விளக்குகள் பொறுத்தாமல் பயணித்த 18 துவிச்சக்கர வண்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நிலாவெளி, குச்சவெளி, இறக்கக்கண்டி மற்றும் கும்புறுப்பிட்டி ஆகிய பகுதிகளில் 6ம் திகதியிரவு சுற்றிவளைப்பு மேற்-கொள்ளப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org